“

முஃமீன்களே!
நீதியை, நிலை
நாட்டுவதற்காக
அல்லாஹ்வுக்கு நீங்கள்
உறுதியான சாட்சியாக
இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார்
மீதும், நீங்கள் கொண்டுள்ள
வெறுப்பு நீதி செய்யாமலிருக்க
உங்களைத் தூண்ட வேண்டாம்.
நீதி செய்யுங்கள், இதுவே
பயபக்திக்கு மிக
நெருக்கமாகும்.
அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ;
நிச்சயமாக அல்லாஹ் நீங்கள்
செய்பவற்றையெல்லாம் (நன்கு)
அறிந்தவனாக இருக்கின்றான்
(அல்குர்ஆன் - 5:8)

”


அமெரிக்க அதிபரின் சாதனை - 8
நந்தினி - கோரமான கொலை - 12
மீண்டும் பொதுசிவில் சட்டம்
ஒன்றும் ஒன்றுக்கு அதிகமான மனைவியரும் - 17
தயை கூர்ந்து சற்றுக் கவனமாக இருங்கள் - 20
பாகிஸ்தானிற்கு உளவு பார்த்த பி.ஜே.பி. - 23
வேடனை விடு, வீட்டிலிருப்பவனை கெடு - 25
ஜல்லிக்கட்டும் - பி.ஜே.பி.யும் - 30
சிமி என்கவுண்டர் போபாலில் கொலை செய்யப்பட்டவர்கள் சிமி உறுப்பினர்கள் அல்ல - 36
எது முதலில் ? - 40
முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன ? - 44
கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 47
இந்துக்கள் - ஒரு மாற்று வரலாறு - 51
நிர்வாக இயலின் தந்தை செர்ஷா சூரி - 53
கறுப்புப் பண ஒழிப்பு மோடியின் கபட நாடகம் - 56
டேங்கர் கப்பலும் கூடங்குளமும் - 62
தொடரும் சிறுபான்மைக்கு எதிரான அத்துமீறல்கள் - 64



மார்ச் - 2017 ஜமாதுல்ஆகிர்-1438

# வைகறை வெளிச்சம்



ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# இது இந்துத்துவா (அ)நீதி..?

தி இந்து ஆங்கில நாளிதழில் 21–2–2017 அன்று ஓர் அழகான தலையங்கம். படித்த நாம், இந்துப் பத்திரிகையை பாராட்டிக் கொண்டிருந்தோம். இந்து ஆங்கில நாளிதழ் திடீரென நம் நாட்டின் நீதி நிர்வாகத்தில் நடக்கும் அநீதிகளைக் கண்டித்திருந்தது, அந்தத் தலையங்கத்தில். அத்தோடு அப்பாவி முஸ்லிம்களை சிறைபிடித்து, சித்திரவதை செய்து அவர்களின் வாழ்க்கையையும், அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கையையும் பாழாக்கிடுவதை சாடி இருந்தது.

இதையெல்லாம் படித்து நாம் இந்து பத்திரிகைக்கு பாராட்டுக் கடிதம் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தபோது சமுதாய அக்கறையுள்ள பலர் நம்மை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அந்தத் தலையங்கத்தைப் பாராட்டினார்.

எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்ற அந்தத் தலையங்கத்திற்கு தி இந்து பத்திரிகை தந்திருந்த தலைப்பு Guilty Until..! இந்த சொற்றொடர் நமது நீதித்துறையில் கடைபிடிக்க வேண்டிய ஓர் அடிப்படைத் தத்துவத்தைப் பற்றியது.

அந்தத் தத்துவம் Innocent Until Proved Guilty “குற்றம் சுமத்தப்பட்டவர்கள், அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படும் வரை, நிரபராதிகள், என்பதுதான். ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்தத் தத்துவம் தலைகீழாகவே பயன்படுத்தப்படுகின்றது. முஸ்லிம்கள் – அவர்கள் நிரபாதிகள் என நிரூபித்திடும் வரை குற்றவாளிகள் என்றே கருதப்படுகின்றார்கள் என்பதைக் குத்திக்காட்டவே இந்து ஆங்கில நாளிதழ், "Guilty Until" குற்ற எனக் குறிப்பிட்டிருந்தது. நீதி பரிபாலனத்திற்கு ஒரு சூடு.

இந்த மொத்த விவகாரமும் டெல்லியில் 2005 அக்டோபர் 29–ல் நடந்த தொடர் குண்டு வெடிப்புப் பற்றியது. இதில் குற்றம் சுமத்தப் பட்ட இரண்டு முஸ்லிம்களை எல்லாக் குற்றச் சாட்டுகளிலிருந்தும் டெல்லி மாவட்ட நீதி மன்றம் விடுதலை செய்தது. அதற்குள் அவர்கள் 11 ஆண்டுகள் சிறையிலிருந்திட வேண்டியது வந்தது. இதில் முஹம்மத் ஹூசைன் பாசில், 2005–ல் கைது செய்யப்படும்போது கல்லூரி மாணவன். அவரது கல்விக் கனவுகள், தொலைந்து போயின.

அடுத்து இந்த வழக்கில், முற்றாக விடுதலை செய்யப்பட்ட மற்றொரு முஸ்லிம் முஹம்மத் ரபீக்ஷா ஒரு தரை விரிக்கை வியாபாரி. அவர் தன் வாழ்க்கையைத் தொலைத்தார்.

இந்தியாவில் வாழும் முஸ்லிம்களுக்கு இப்போதைக்கு இதுவே நிலை. நீதித்துறை நமது இந்தியாவிலேயே ஏற்றுக்கொண்ட பிரிதொரு விதியும் புறக்கணிக்கப்படுகிறது. முஸ்லிம்களின் விவகாரத்தில் அது ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக் கலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது.

ஆனால், இந்தியாவில் ஆயிரம் நிரபராதிகள் தண்டிக்கப்படலாம் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தால். ஆனால் ஒரு குற்றவாளிகூட தண்டிக் கப்பட்டுவிடக்கூடாது அவன் இந்துத்துவா வாதியாக இருந்தால். இந்த தத்துவம், நமது நீதித்துறையால் தாராளமாகப் பயன்படுத்தப்படு கின்றது.

பல குண்டுவெடிப்புகளை நடத்தி பலநூறு அப்பாவி இந்துக்களையும், முஸ்லிம்களையும் கொலை செய்த இந்துத்துவ தீவிரவாதி, சுவாமி அசீமா நந்தாவுக்கு பிணை கிடைக்கின்றது.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை வீசி விட்டெறிந்துவிட்டு அந்த இடத்தில் இந்து ராஷ்ட்ராவுக்கான மனுநீதியை வைக்க வேண்டும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்க்க வேண்டும், அந்த இடத்தில் இந்து ராஷ்ட்ராவை கொண்டு வந்திட வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டு, இதற்காக டெல் அவீவ் (எ) இஸ்ரேலின் தலைநகரில் அலுவலகம் அமைத்து இந்தியாவின் மீது தீவிரவாத

தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றார். இராணுவ தளபதி கலோனல் பிரசாந்த் புரோகித்.

இவர்தான் நம் நாட்டில் மலேகான் குண்டு வெடிப்பு உட்பட பல குண்டு வெடிப்பு களை நடத்தினார். சிறையிலிருக்கின்றார். ஆனால் முழு சம்பளமும் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கின்றது.

அவரை விடுவிக்க, அரசின் சார்பிலேயே பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனை "NIA" என்ற தேசிய புலனாய்வு முகவாண்மையே செய்து கொண்டிருக்கின்றது. நீதித்துறையும் பணிந்து கொடுத்துக் கொண்டிருக் கின்றது.

அதேபோல் பல குண்டு வெடிப்புகளை நடத்திய பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் சந்நியாசி, தீவிரவாதி இவரும் சிறையிலிருக்கின் றார், இவரது விடுதலைக்கும் நமது "NIA" என்ற தேசிய புலனாய்வு முகவாண்மை கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றது. – இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு நிருவாகமும், நீதித்துறையும் இப்படி வளைந்து கொடுப்பதால் உண்மை யிலேயே குண்டு வெடிப்புகளை நடத்திடும் இந்துத்துவ தீவிரவாதிகள் தப்பித்து விடுகின் றார்கள். தொடர்ந்து குண்டு வெடிப்புகள் நடத்து கின்றார்கள்.

பொய் வழக்குகளில் முஸ்லிம்களை சிக்க வைத்து சிறையிலடைத்து, சித்ரவதைகளை செய்யும் காவல்துறையின் மீது எந்த நடவடிக்கை யுமில்லை. இந்துப் பத்திரிகையின் 21–2–2017 தலையங்கம் கூட அதை சுட்டிக்காட்டிட வில்லை.

இங்கே நீதி நிருவாகம் இப்படி நடைபோடு கின்றது. இதற்கு நேர் எதிரான நீதி நிருவாகம் ஒன்றை வரலாற்றிலிருந்து இங்கே சுட்டிக்காட்டு கின்றோம்.

“உலகின் விரிந்தொரு நிலப்பரப்பில்
இஸ்லாம் ஆட்சி செய்து கொண்டிருந்தது.
கலீஃபாஎன்றஇஸ்லாமியஅரசின்தலைவராக
உமர் பின் அல் ஹத்தாப் (ரழி) அவர்கள்
வீற்றிருந்தார்கள்”

அவர்களுடைய ஆட்சியின் கீழ் எகிப்து நாட்டை கவர்னர் என்ற நிலையில் பராமரித்து வந்தவர் அம்ரு பின் அல்ஆஸ் (ரழி). இவர்களும் இஸ்லாத்திற்காக தியாயகங்கள் பலவற்றைச் செய்தவர்கள். முஸ்லிம்களின் மனதில் நிலையான தாக்கத்தை உண்டுபண்ணி வருபவர்.

“இவர்களுடைய மகன், ஒரு யூத சிறுவனை கடுமையாக அடித்துவிட்டான். ஆளுநரின் மகன் என்ற அடிப்படையில் அவன் தண்டிக்கப்பட வில்லை. யூத சிறுவனின் தந்தை நீதியைப் பெறுவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

புகார் ஆட்சித் தலைவர் உமர் (ரழி) அவர்களிடம் வந்தது. உமர் (ரழி) அவர்கள் அதே யூத சிறுவனைக் கொண்டுவந்து கவர்னரின் மகனைக் கொண்டு அதேபோல் அடிக்கச் செய்தார். பின்னர் தன் ஆட்சியின் கீழ் பல்வேறு பகுதிகளிலும் நியமிக்கப்பட்டி ருந்தவர்களையும் அழைத்து கடுமையாக எச்சரித்தார்கள்.

அப்போது ஒருவர், எங்களையும் தண்டிப் பீர்களா? எனக் கேட்டார்கள்? அதற்கு தயங்கா மல் தண்டிப்பேன் என பதில் சொன்னார்கள் கலீஃபா உமர் (ரழி) அவர்கள். அத்துடன் இப்படிக் கேட்டார்கள். “இறைவன் மனிதர்கள் அனைவரையும் சுதந்திரமாகப் படைத்திருக்கும் போது எப்போது நீங்கள் அவர்களை அடிமை யாக்கினீர்கள்?

நீதி வழங்குவதில் பாரபட்சம் காட்டக் கூடாது, அதில் தண்டிக்கப்படுபவர்கள் யாராக இருந்தாலும் சரியே, என்ற கோட்பாட்டை அநீதிகள் நிறைந்த இந்த உலகில் முதன் முதலில் அறிமுகப்படுத்தியது இறைவனின் தூதர்கள்தாம். இறைத்தூதர்களின் வரிசையில் இறுதியாக வந்த இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இப்படி பிரகடனப்படுத்தினார்கள்.

“என்மகள் ஃபாத்திமாவே திருடி இருந் தாலும், நான் அவள் கையைத் துண்டித் திருப்பேன்” அத்தோடு “உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தவர்கள் அழிந்தார்கள் என்றால் அவர்கள் நீதி வழங்குவதில் காட்டிய பாரபட்சம் தான்” என்றும் எச்சரித்தார்கள்.

இதனாலெல்லாம் கவரப்பட்டுத்தான் கலீஃபா உமர் (ரழி) அவர்களைப்போன்றவர்களிடம் இந்தியாவின் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்றார்கள் மகாத்மா காந்தி ஜி அவர்கள்.

இறைவன் கூறுகின்றான்...

*“முஃமீன்களே! நீதியை, நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும், நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள், இதுவே பயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் (நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்”*

*(அல்குர்ஆன் – 5:8)*

இந்த வழிகாட்டுதல்கள் இந்தயாவிற்கு இப்போது தேவை. அதனால் நீதியை நிலை நாட்டிட இறுதி வேதத்தை உடைய மக்கள் விரைந்து முனைய வேண்டும். இது நாம் நம் நாட்டுக்கு செய்யும் மிகப்பெரிய தொண்டு. நியாய உள்ளம் கொண்ட அனைவரையும் இதில் அணி சேர்த்து இந்தப் பெருந்தொண்டை செய்வோம்.

- MGM

இந்திய நீதித்துறையின் உயர் மட்டங்களில் இருப்பவர்களில் (1/3) மூன்றில் ஒரு பகுதியினர் முன்னாள் நீதிபதிகளின் உறவினர்கள். (Outlook, Sep-19,2016)





அல்லாஹ்வின் அழகியத் திருப்பெயரால்

# வரலாற்றில் இந்தநாள்

## மால்கம் X நாள் (எ)

## மாலிக் அல் ஷாபாஸ் ஷஹீத் நாள்



19-05-1925
21-02-1965

ஆப்ரிக்காவின் காடுகளிலிருந்து கடத்தி வரப்பட்டு, அமெரிக்காவின் அடிமைச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டவர்களே அமெரிக்காவில் வாழும் கறுப்பர்கள். இவர்களை ஆப்பிரிக்கன் – அமெரிக்கன் என்றும் அழைப்பார்கள்.

இந்தக் கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை அமெரிக்காவின் வெள்ளை நிறத்தவர்கள் தீண்டத்தகாதவர்களாகக் கொடுமைப்படுத்தி வருகின்றார்கள். இந்த கறுப்பர்கள் அமெரிக்காவின் சேரிகளில்தான் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த சேரி வாழ்க்கையில் பிறந்தவர்தான் **மால்கம் X**

வெள்ளை நிறத்தவர்கள் தினம், தினம் கட்டவிழ்த்துவிடும் கொடுமைகள், அநீதிகள் இவற்றிலிருந்து விடுபட்டிட கிருஸ்தவத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்தார் **மால்கம் X**–ன் தந்தை ஏர்ள்லிட்டில். பின்னர் அவர்களாலேயே கொலை செய்யப்பட்டார். தந்தையை இழந்து இளம் வயதிலேயே அநாதையானார் **மால்கம் X**. தந்தையின் மரணத்திற்குப் பின் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியது அந்தக் குடும்பம்.

உழைத்தாள் தாயார் லைவ்சிலிட்டில் வீட்டு வேலைக்காரியாய். நித்தம் ஒரு வேலையை இழந்தாள். கறுப்புநிறத்தவர்என்பதால்அவமானப் படுத்தப்பட்டார். மனநிலை பாதிக்கப்பட்டாள். மன நல காப்பகத்தின் நிரந்தர நோயாளி ஆனாள்.

முழு அநாதையானார்கள் **மால்கம் X**–சும் உடன் பிறந்தவர்களும். அனைவருக்கும் அநாதைகள் இல்லம், புகலிடமானது. அதன் வழியே கல்வியையும் கற்றார் **மால்கம் X** பள்ளியில் முதல் மாணவராகத் தேறினார்.

“நீ படித்து என்னவாகப் போகின்றாய்?” எனக் கேட்டார் ஆல்ட்ரோ என்ற வெள்ளைநிற ஆசிரியர் “வழக்கறிஞராக ஆகப்போகின்றேன்” என்றார் **மால்கம் X** “அடாத செயல்” கறுப்பர்களுக்கு அது! ஒரு கொத்தனாகவோ, தச்சனாகவோ ஆகிக் கொள் என்றார். கனவுகள் கறுப்பர்களுக்குக் கூடாது என்றால், படிப்பு எதற்கு? என படிப்பிலும் விரக்தி ! விட்டொழிந்தார் படிப்பை.

திருட்டு, போதைப் பொருள் கடத்தல், போன்ற தொழிலுக்கு வந்தார். இந்தத் திருட்டுத் தொழிலில்

தொடர்ச்சி 22–ம் பக்கம்....

அல்லாஹு அக்பர்! முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்!

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் IUML 70 வது ஆண்டு விழா

## சிறுபான்மையினர் உரிமை பாதுகாப்பு மாநில மாநாடு

## IUML சாதனை-சரித்திரம்... வரலாற்று கண்காட்சி

2017 மார்ச் 11, சனிக்கிழமை பொருட்காட்சி திடல், திருநெல்வேலி

அன்புடையீர்!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்....)

இந்திய முஸ்லிம்கள் தனித்த அடையாளங்களுடன் வாழ அரசியல் சாசன உரிமை பாதுகாப்பை பெற்றுத் தந்தது – பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் முஸ்லிம்களை இடம் பெறச் செய்து தனி இடஒதுக்கீடு பெற்றுத் தந்தது – கல்விக்கு முன்னுரிமை அளித்து கல்வி நிலையங்களை திறக்கச் செய்தது – உருது மொழிக்கு தேசிய அந்தஸ்து – உலமாக்களுக்கு ஓய்வூதியம் – உலமா பணியாளர் நலவாரியம் அமைக்கச் செய்தது – அரபு உலகத்தோடு நல்லுறவு பேணி பல்லாயிரம் இந்தியர்களுக்கு தொழில் மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்கி கொடுத்தது – பொது சிவில் சட்டம் கொண்டு வர முயற்சிக்கும் போதெல்லாம் தடுத்து ஷரீயத் சட்ட போராட்ட களம் அமைத்து நம் உரிமைகளை நிலைநிறுத்துவது –

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலம் தொட்டு இருந்து வரும் இஸ்லாமிய சமுதாயத்தின் இயற்கை கட்டமைப்பான மஸ்ஜிதை மையமாகக் கொண்ட மஹல்லா ஜமாஅத் கட்டுக் கோப்புடனும், தன்னிறைவோடும் இருக்க வேண்டும். சன்மார்க்க கடமைகளை கற்றறிந்த சங்கைக்குரிய உலமாக்களின் அறிவுரை ஏற்று நடக்க வேண்டுமென நாளும் முழங்கி வரும் பேரியக்கம்!

சமுதாயப் பணிகளில் 70 ஆண்டுகளை கடந்து பயணித்து வரும் தாய்ச்சபை –

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

பேரியக்கத்தின் இந்த மாநாட்டில் தேசிய நிர்வாகிகள், தோழமை கட்சித் தலைவர்கள் உரையாற்றுகின்றனர்.

★ சமூக நல்லிணக்கத்திற்காக பாடுபடும் இந்து-முஸ்லிம்-கிறிஸ்துவ அறிஞர்களுக்கு **'சிராஜுல் மில்லத் விருது'**

★ பல்லாண்டு காலம் தாய்ச்சபையில் உழைத்து வரும் 7 ஊழியர் திலகங்களுக்கு **'காயிதே மில்லத் விருது'**

★ அரபு - தமிழ் மொழிகளின் ஒப்பாய்வு வல்லுநருக்கான **'அல்லாமா அமானி ஹஜ்ரத் விருது'**

வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

## சமுதாயத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அழைக்கிறார்

## அலை கடலென அணி திரண்டு வாரீர்!

அன்புடன் அழைக்கும்...

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

தலைமை நிலையம் : காயிதே மில்லத் மன்ஸில், 36 மரைக்காயர் லெப்பை தெரு, சென்னை – 600 001.
தொலைபேசி : 044 – 2521 8786 பேக்ஸ் : 044 – 2521 7786 இ-மெயில் : info@muslimleaguetn.com இணையதளம் : www.muslimleaguetn.com

நமது சின்னம் ஏணி



# அமெரிக்க அதிபரின் சாதனை!

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பதவி காலம் 20 ஜனவரி 2017 அன்று முடிந்தது.

அடுத்த அதிபராக டொனால்டு டிரம்ஃப் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் 20 ஜனவரி 2017–ல் பதவி ஏற்றார்.

உலகிலுள்ள நாடுகள் அனைத்தையும் தங்கள் கிடுக்கிப் பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என திட்டம் போட்டு செயல்பட்டு வருகின்றது அமெரிக்கா. இது அனைவரும் அறிந்த ஒன்று.

அமெரிக்கா இந்த இலட்சியத்தை அடை வதற்காக உலகெங்கும் கடந்த 66 ஆண்டுகளாக போர்களைத் தொடுத்து வருகின்றது.

இரண்டாவது உலகப்போரின் பின்னணியில் தான் அமெரிக்கா தன்னை ஒரு வல்லரசாக அறிவித்துக் கொண்டது. அன்று முதல் தனது ஏகாதிபத்தியத்தை உலகெங்கும் நிலைநாட்டிட தொடர்ந்து போர்களை நடத்தி வருகின்றது. போர்களை நடத்தி மனித உயிர்களை மாய்ப்பது அமெரிக்காவின் முழுநேர வேலை. இந்த வகை யில் தங்களுடைய அண்மைக்கால போர்களை இஸ்லாமிய நாடுகளின் மீது அதாவது முஸ்லிம் நாடுகளின் மீது தொடுத்து வந்தது.

உலகில் முஸ்லிம் நாடுகளின் மீது போர் தொடுப்போம் என்ற அறிவிப்பை முன்னாள் அமெரிக்க அதிபர், செருப்படி புகழ் ஜார்ஜ் புஷ், அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்படட் பின்னணியில் அறிவித்தார்.

அதில் நவீன சிலுவையுத்தம் தொடங்கி விட்டது. இந்தப் போர் 10 முதல் 12 (பல டஜன்) நாடுகளில் தொடங்கும். அடுத்த 50 முதல் 60 ஆண்டுகள் வரை தொடரும்.

"War on terror was going to he fought in dozens of countries, and possibly for sevaral decades" - FL. March-3, 2017.

செப்டம்பர் 13, 2001–ல் செய்யப் பட்ட இந்தப் போர் பிரகடனத் தால், இந்த உலகம் கடந்த 16 ஆண்டு களாக உலக நாடுகள் குறிப்பாக முஸ்லிம் நாடுகள் சந்தித்த அழிவு களுக்கு அளவே இல்லை. இன்னும் இந்த அழிவுகள் நடக்கின்றன. இனிவரும் நாட்களிலும் இது தொடரும்.

ஆப்கானிஸ்தானில் தாக்குதலைத் தொடங்கி, மலையும் சோலையும் வளமும், வளப்பும் நிறைந்த ஆப்கானிஸ்தானை தரைமட்டமாக்கினார்கள். மட்டுமல்ல மயான மாகவே ஆக்கினார்கள்.

ஈராக்கில் அபுகுரைப் சிறையில் முஸ்லிம் பெண் விஞ்ஞானிகளை சித்திரவதைச் செய்து கொலை செய்தார்கள். சதாம் ஹூஸைன் ஈராக் இல் உருப்படியாக செய்த ஒரே வேலை ஆயிர மாயிரம், பெண்களை தலை சிறந்த விஞ்ஞானி களாக்கினார். அவர்களையெல்லாம் அபூகுரைப் சிறையில் வைத்துக் கொலை செய்தார்கள்.

முஸ்லிம் நாடுகளில் உள்ள பல விஞ்ஞானி களைக் கடத்திச் சென்று கொலை செய்தார்கள்.

அப்பாவி முஸ்லிம்களைக் கடத்திச் சென்று "கவுண்டனாமோ" சிறையில் வைத்து சித்திர வதைச் செய்தார்கள், கொன்றார்கள், கடலிலே தூக்கி எறிந்தார்கள்.

இப்படி அப்பாவிமுஸ்லிம்களைக்கடத்திடும் பணிக்கு "rendition Flights" ரெண்டிஷன் பிளைட்ஸ் எனப் பெயர் வைத்தார்கள். இத்தனை யும் இரகசியமாகவே செய்தார்கள். இவர்களின் அநியாயங்களை, பத்திரிகையாளர் சிமோர் எம். ஹர்ஸ் என்பவர்தான் முதன் முதலில் வெளியே கொண்டு வந்தார்.

இவர்களின் அதாவது ஏகாதிபத்தியின் இரகசிய சித்திரவதைக் கூடங்களை மக்கள் மன்றத்தில் வைத்திட அவர் பட்ட கஷ்டங்கள், நஷ்டங்கள் இவை சொல்லிமாளாது.

(இப்போது அவையெல்லாம் ஒரு நூலாகக் கிடைக்கின்றன அதன் பெயர் Chain of Command The Road from 9/11 to Abu Ghuraib.

அமெரிக்க, அப்பாவி மக்கள் மீது கட்ட விழ்த்துவிட்ட குரூரங்கள் – நிர்வாண அவமா னங்கள் இவையெல்லாம் உலக மக்களால் கண்டிக்கப்பட்டன. மனித உரிமைகக் குழுக்கள் உலகின் மிகப்பெரிய காட்டுமிராண்டிகள் அமெரிக்கர்கள்தானாம் ; என்ற உண்மையை உலகெங்கும் பறைசாற்றின.

அமெரிக்காவிலேயே எதிர்ப்புகள் தலை தூக்கின. அத்தோடு அமெரிக்காவின் பொருளா தாரம், அகலபாதாளத்தில் வீழ்ந்தது. ஆப்கானிஸ் தான் சென்ற அமெரிக்க இராணுவ வீரர்கள் சடலக் குப்பைகளாக Body Bag அமெரிக்கா திரும்பினார்கள். பல அமெரிக்கா இராணுவ வீரர்கள் ஆப்கானிஸ்தானிலேயே தற்கொலை செய்து கொண்டார்கள்.

இந்த சிப்பாய்களை ஆப்கானிஸ்தானுக்கும் ஈராக்குக்கும், சோமாலியாவுக்கும் அனுப்பிடும் போது, வாய் நிறைய வாக்குறுதிகளை வழங்கித் தான் அனுப்பி வைத்தார். அவர்கள் காயம் பட்டாலோ, இறந்தாலோ வாழ்நாளெல்லாம் அவர்களின் குடும்பங்களுக்கு முழு ஊதியங்கள் வழங்கப்படும் என்றார்கள், பிணங்களாக வந்தவர் களின் குடும்பங்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிட இயலாமல் தயங்கினார்கள்.

கணவனை இழந்த மனைவிமார்கள், மகன்களை இழந்த தாய்மார்களெல்லாம் "Anti-War Movement" போர் எதிர்ப்பு இயக்கங்களை அமெரிக்காவின் வீதிகளில் நடத்தினார்கள்.

அந்நிலையில் போரை எதிர்த்தால் – யுத் தத்தை நிறுத்தினால் அமெரிக்க மக்களின் வாக்கு களைப் பெறலாம் என்ற நிலை உருவானது. இந்நிலையில்தான் புஷ் செருப்படி வாங்கினார்.

இதனை 'ஒபாமா' நன்றாகப் பயன்படுத்தி னார். அவர் போர்களை நிறுத்தி, அமெரிக்காவை வழிப்படுத்துவேன் கவுண்டனாமோ, சிறையை மூடுவேன் என்றெல்லாம் வாக்குறுதிகளை வழங்கினார் ஒபாமா. அவரை "Anti War Candidate" போருக்கு எதிரான வேட்பாளர் என மக்கள் முன்னிலைப்படுத்தினார்கள்.

இந்தப் பின்னணியில் அவருடைய உரைகள் "We can do it" "நம்மால் சாதிக்க முடியும்" "Andality of Hope" நம்பிக்கையின் நெஞ்சாரம் (என்ற உரைகள்) என்பவை மக்களால் பெரிதும் நம்பப்பட்டன. மக்களை இந்த உரைகள் கவர்ந்தி ழுத்தன. இந்தப் பின்னணியில் 'ஒபாமா' 2008 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபாரானார். வரலாறு காணாத வெற்றியைப் பெற்றார். இந்த உரைகளுக் காக நோபல் பரிசையும் பெற்றார். இந்த "Anti war Candidate" இந்த போருக்கு எதிரான வேட்பாளரின் ஆட்சியில் என்ன நடந்தது?

### போருக்கு எதிரான வேட்பாளர்கள் ஒபாமாவின் சாதனைகள்

"கவுண்டனாமோ சிறை மூடப்படவில்லை அந்த சிறையில் அடைக்கப்பட்டவர்கள் – சித்தர வதைகளைச் சந்தித்தவர்கள், தாங்கள் ஏன் சிறை பிடிக்கப்பட்டோம் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டோம்" என்பது குறித்த விசாரணை நடத்தப்பட வேண்டும், தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், என்றெல்லாம், எடுத்து வைத்த கோஷங்களும், வாதங்களும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன.

இப்படி பச்சையான – கொச்சையான அநீதிகளை இழைத்துக்கொண்டே நாங்கள்தான் மனித உரிமைகள் – ஜனநாயகம் ஆகியவற்றின் முகவர்கள் என மார்தட்டிக் கொள்கின்றார்கள் அமெரிக்கர்கள்.

அடுத்து சாத், சாத் ஒபாமாவின் ஆட்சியில் தான், கறுப்பின மக்கள் அதிகமாக வெள்ளை நிற வெறியர்களால் நடு வீதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டார்கள். "என் மகனாகவே



Front Line : February 2017) தாம் ஏமன் நாட்டு மக்களைக் கொன்று குவித்தது.

செருப்படி புகழ் புஷ் போர் தொடுத்த நாடுகள் அல்லாமல் மேலும் லிபியா, சிரியா ஆகிய நாடுகளுக்கும் போரை விரிவு படுத்தினார்.

பேரக் ஒபாமா பல லட்சம் முஸ்லிம்களை அநாதை ஆக்கினார். பல்லாயிரக் கணக்கில் முஸ்லிம்களைக் கொலை செய்திட காரணமாக அமைந்தார்.

இருந்தாலும் இதுதான் நடந்திருக்கும் என அங்காலயாயிப்பதைத் தவிர வேறெதும் செய்திட இயலவில்லை ஒபாமாவவால்".

அமெரிக்காவின் மிகப்பெரிய "மனித உரிமை போராட்டங்கள் உண்மையைச் சொன்னால் கறுப்பு இன மக்களின் மிகப்பெரிய போராட்டம் ஒன்று நடைபெற்றது. அதன் பெயர் "Black live Ma" கறுப்பு நிற மக்களின் வாழ்க்கையும் முக்கியமே" என்ற இயக்கம் நடைபெற்றது.

பேரக் ஒபாமாவின் ஆட்சியில் இப்படியொரு இயக்கத்தை நடத்தித்தான் கறுப்பின மக்கள் வாழ்ந்திட வேண்டியதாயிற்று. இராணுவத் தளவாடங்களின் விற்பனை. போர்களை ஒட்டுமொத்தமாக நிறுத்திட போகின்றேன் எனக் கூறி ஆட்சியில் அமர்ந்த ஒபாமாவின் ஆட்சியில் தான் அதிகமாக ஆயுத விற்பனை நடந்தது.

உலகெங்கும் போர்கள், குறையாமல் 12 நாடுகளில் போர் நடக்கும், நவீன சிலுவை யுத்தங்கள் என்றெல்லாம் அறிவித்த ஜார்ஜ் புஷ்ஷின் ஆட்சியில் அமெரிக்கா விற்பனை செய்த ஆயுதங்கள் 128 பில்லியன்கள்தாம். ஆனால் போருக்கு எதிரான வேட்பாளர் என்ற கோலம்பூண்டு ஆட்சிக்கு வந்த ஒபாமாவின் ஆட்சியில் அமெரிக்கா விற்பனை செய்த ஆயுதம் 278 கோடி. இதில் சவூதி அரேபியா என்ற நாட்டிடம் மட்டும் திணித்த ஆயுதங்களின் மதிப்பு 128 பில்லியன் டாலர்கள்.

இரண்டாவது உலகப் போருக்குப்பின் அதிகமாக வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விற்றவர் அமெரிக்க அதிபர் ஒபாமாதான். சவூதி அரேபியாவிற்கு விற்ற ஆயுதங்கள் (ஆதாரம்

அப்பாவி மக்கள் மீது குண்டுகளை வீசிக் கொலை செய்தது ஒபாமா ஆட்சியில் தான் அதிகம். FL. 17–2–2017.

ஆளில்லா விமானங்கள் வழி தாக்குதல் நடத்தியதிலும் பேரக் ஒபாமாதான் முதலிடம் வகிக்கின்றார். பாகிஸ்தானிலிருந்து சோமாலிய வரைக்கும் இந்தத் தாக்குதல்கள் தொடர்ந்தன. கேட்டபோது அமெரிக்காவின் நலனுக்கு எதிராக உள்ள நாடுகளில் இதுபோன்ற தாக்குதல்கள் தொடரத்தான் செய்யும் என அடம்பிடித்தார்.

புஷ்ஷின் காலத்தில் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை விட ஒபாமாவின் காலத்தில் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி பல பில்லியன் டாலர்கள் அதிகம். அமெரிக்க இராணுவ தலைமையகமான பெண்டகன் தரும் தகவல்களின் படி, ஒபாமாவின் காலத்தின் (பணிப்போர் காலத்தை விட இராணுவ செலவுகள் 42% அதிகம்.

**ரஷ்யாவுடன் மீண்டும் போரில் போக்கு - பனிப்போர்**

நேட்டோ படைகளை ரஷ்யாவுக்கு எதிராக போலண்ட், பால்டிக் நாடுகள் இவற்றில் நிறுத்திட வைத்தார். ஒபாமா. இதனால் ரஷ்யாவுடனான மோதல் போக்கு மீண்டும் தொடங்கியது.


காலப்போக்கில் ரஷ்யாவும், சீனாவும், அமெரிக்காவும் எதிரான நாடுகளாக ஆக்கப் பட்டன. ஆனால் அமெரிக்காவின் அதட்டல்களை கண்டு கொள்ளவில்லை. இதை இரண்டு நாடுகளுக்கும், அமெரிக்கா இராணுவத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை அதிகமாக இருக்கும் போது 10% விகிதம்தான் ரஷ்யாவும், சீனாவும்




சொல்லிமாளாது.

இந்த கபளீகரங்கள்தான் லிபியா மக்கள் 50 ஆண்டுகளாக அனுபவித்து வந்த நிம்மதியான வாழ்க்கை. தொலைந்தது நாடு இன்றளவும் கொந்தழித்துக் கொண்டிருக்கின்றது.

முஹம்மத் அலி கதாபி–ஐ ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு அவவை 20, அக்டோபர் 2011–ல் தனது கைக்கூலியும், தனது வார்ப்பில் உருவான ஹலீலா




இராணுவ செலவுக்காக ஒதுக்கியுள்ளன.

**ஒபாமாவும் அமெரிக்காவின் சிறப்பு செயல்பாட்டுப் படைகளின் அட்டூழியங்களும்**

அமெரிக்க உலக நாடுகளில் இரகசிய போர் களையும், கொந்தளிப்பு களையும் ஏற்படுத்திட ஒரு படையை வைத்திருக்கின் றது. அதன் பெயர்தான் Speical Operation forces சிறப்பு செயல்பாட்டுப் படைகள். இந்தப் படைகளை ஒபாமாவுக்கு முன்னாலிருந்த அதிபர் புஷ்ஷும் பயன் படுத்தினார்.

உலகின் பல நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்பு, கொலை ஆகியவற்றை நடத்தினார். அது 60 நாடுகளில் இந்த பாதகங்களையெல்லாம் முடிவுக்கு கொண்டு வரப்போகின்றேன் எனப் பீற்றிக் கொண்ட ஒபாமா, இந்த சிறப்புச் செயல் பாட்டுப் படைகளை 138 நாடுகளில் பயன் படுத்தினார்.

இந்த சிறப்புச் செயல்பாட்டுப் படைகள், கென்யா, உகாண்டா, எத்தயோப்பிய ஆசிய நாடு களில் கொலைகளைச் செய்தன. கொந்தளிப்பு களை நடத்தினர்.

லிபியாவில் இந்தப் படைகள்தாம் முஹம்மத் அலி கதாபியின் ஆட்சியைக் கவிழ்த்தன. இதற்காக இந்தப் படைகள் செய்த கொலைகள்

கஃப்தர் என்பவரை ஆட்சியில் அமர்த்தினார்கள். அதனால் உகாண்டா கொந்தளித்துக் கொண்டி ருக்கின்றது. மக்களின் ஆதரவற்ற இவரை எதிர்த்து மக்கள் போராடிக் கொண்டிருக்கின் றார்கள். பிணங்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றன.

**அப்பாவி மக்கள் மீது தினமும் 72 குண்டுகள் வீசிய ஒபாமா**

2016 ஆம் ஆண்டு மட்டும் ஒபாமாவின் அரசு 26,000 குண்டுகளை வீசியது. அதாவது நாளொன்றுக்கு 72 குண்டுகளை வீசியது. இந்த குண்டுகள் ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், லிபியா, சோமாலியா ஆகிய நாடுகளிலுள்ள அப்பாவி மக்கள் மீதே வீசப்பட்டன.

FrontLine, February-17, 2017 Page 53/54 இங்கெல்லாம் மக்கள் எப்படி மாண்டிருந்தார்கள் என்பதை எளிதில் புரிந்திடலாம்.

**- MGM**

# நந்தினி-கோரமான கொலை

## நந்தினியை குதறிய இந்து முன்னணி மணிகண்டன்



ஒரு தேர்ந்த தொழில் முறை கொலை வெறிக் கும்பலின் தொழில் நேர்த்தியுடன் நந்தினி கொல்லப்பட்டிருக்கிறாள். மனதில் எந்தக் கிலேசமோ நடுக்கமோ இன்றி அவளைக் கொன்றுள்ளனர் இந்து முன்னணியைச் சேர்ந்த பயங்கரவாதிகள்.



நந்தினி

கைபேசியில் எடுக்கப்பட்ட அந்தக் காணொளித் துண்டின் காட்சிகள் நடுக்கத்தோடு விரிகின்றது. கவிழ்த்துப் போட்ட நாடாக் கட்டில் ஒன்றின் மேல் வெள்ளுடை போர்த்தப்பட்ட உடல் கிடக்கிறது. காவல் துறை அதிகாரிகள் சிலர் கலைந்து நிற்கின்றனர். "ஐயோ சாமீய்ய்.. ஐயோ சாமீய்ய்.. ஐயோ சாமீய்ய்ஞ் கொன்னுட்டானுகளே கொண்டுட்டுப் போன அன்னிக்கே கொன்னுட்டானுகளே" - வயதான பெண் ஒருவரின் ஓலம் அந்தக் காட்சியில் பின்னணியாக ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. கையறு நிலையில் தன்னறியாமல் ஒலிக்கும் அந்தக் குரல் நமது செவிப்பறைகளைக் கடந்து இதயத்தைப் பிளக்கிறது.


யாரோ ஒருவர் வெள்ளுடை போர்த்தப்பட்ட அந்த உடலை நீல நிற தார்பாய் ஒன்றினுள் புரட்டிப் போடுகிறார். தலை குப்புற கிடத்தப்பட்டிருக்கும் அந்த உடல் சில நொடிகள் கண்களில் விழுகின்றது. முழு நிர்வாணமான அந்த உடலின் மேல் முதுகு கருத்துப் போய் அதன் மீது வெள்ளைப் புழுக்கள் நெளிந்து கொண்டிருக்கின்றன. இடது கீழ் முதுகில் காயம் பட்ட அடையாளம் தெரிகின்றது. உடலைப் புரட்டிப் போடுகிறார் அந்த மனிதர். கருநீலத் துணி ஒன்றால் அந்தப் பெண்ணின் வாய் கட்டப்பட்டுள்ளது. சற்றே மேடிட்ட வயிறு.. அவளது பெண்ணுறுப்பு சிதைக்கப்பட்டுள்ளது.

ஐயோ ஐயோவென்ற ஓலம் அதிகரிக்க, சட்டென்று அந்த உடல் நீலத் தார்பாயால் மூடப்பட்டு அருகில் நின்று கொண்டிருந்த வெள்ளை ஆம்புலஸ் வேனுக்குள் திணிக்கப்படுகிறது. உணர்ச்சியற்ற முகங்களோடு நின்று கொண்டிருந்த போலீசு அதிகாரிகளிடம் ஒருவர் வாதிட்டுக் கொண்டிருக்கிறார்..

"சார்.. இதே ஒரு எஸ்.சி பையன் வன்னியர் பிள்ளைய அழைச்சிட்டுப் போயிருந்தா நடவடிக்கை எடுக்காம இருந்திருப்பீங்களா?" அந்தக் குரலில் வெளிப்பட்ட ஆற்றாமையின் உள்ளேயும் அவருக்கு முகம் கொடுத்து நின்று கொண்டிருந்த காவலதிகாரியின் கள்ள மௌனத்தின் உள்ளேயும் ஏராளமான அர்த்தங்கள் பொதிந்து கிடக்கின்றன. பதினேழே வயதான ஒரு சிறுமியின் கனவுகளும் அவளது பெற்றோரின் நிறைவேறாத ஆசைகளும் ஏமாற்றங்களும் மட்டுமின்றி ஆதிக்க சாதித் திமிரும் இந்து பயங்கரவாத வெறியின் ஆணவமும் அந்தக்

காணொளித் துண்டின் ஒவ்வொரு காட்சியிலும் உறைந்து கிடக்கின்றன.

நந்தினியின் குடும்பத்தார் அவளை "பாப்பா" என்றே அழைக்கின்றனர். பதினேழு வயதான அவள், தந்தையில்லாத அந்தக் குடும்பத்தின் கடைக்குட்டி. நந்தினிக்கு ஒரு சகோதரனும் சகோதரியும் உண்டு. மூத்த சகோதரிக்குத் திருமணமாகி விட்டது. அந்தப் பிள்ளைகளில் எவருமே மேல்நிலைக் கல்வியைக் கூட எட்டாத வர்கள்; பிள்ளைகள் தோளுக்கு வளர்ந்ததும் கூலி வேலை செய்தால் தான் சாப்பாடு எனும் அளவுக்கு வறுமை. தாய் ராசக்கிளியும் கூலி வேலைக்குத் தான் செல்கிறார்.




"இந்திரா ஆவாஸ் யோஜனா" என்கிற அரசின் வீட்டு வசதித் திட்டம் ஒன்றின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அவர்கள் வீட்டில் தரைத்தளம் இல்லை; சாணியால் மொழுகப்பட்ட மண் தரை. புழங்குவதற்காக தற்காலிக தடுப்பு வைத்து இரண்டாக பிரிக்கப்பட்ட ஒரே நீண்ட கூடம் கொண்ட அந்த வீட்டில், தாயின் பராமரிப்பில் வளர்ந்துள்ளார் நந்தினி. எட்டாம் வகுப்புடன் நந்தினியின் படிப்பை நிறுத்தி விட்ட அவளது தாயார், கிடைக்கும் சிறு சிறு கூலி வேலைகளுக்கு அவளுக்கு ஒத்த வயதுடைய தோழி தேவியுடன் அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த **2016** டிசம்பர் மாதம் **29-**ம் தேதி தேவியுடன் வீட்டை விட்டுச் சென்ற நந்தினி **2017** ஜனவரி மாதம் **14-**ம் தேதி பிணமாகத் தான் கிடைத்துள்ளார். இது வெறும் மரணமல்ல; திட்டமிட்ட பச்சைப் படுகொலை. நந்தினி ஏன் கொல்லப்பட்டாள்? யாரால் கொல்லப்பட்டாள்? எப்படிக் கொல்லப்பட்டாள்? எதற்காக கொல்லப்பட்டாள்?

சிதைக்கப்பட்ட அந்தச் சிறுமியின் உடல் புதையுண்டு போனாலும், இந்தக் கேள்விகள் முக்கியமானவை. ஏனெனில், மீண்டும் ஒரு நந்தினி கொல்லப்படுவதைத் தடுக்க வேண்டுமென்றால் நமக்கு இந்தக் கேள்விகளுக்கு விடை தெரிய வேண்டும்.

கடந்த **2016** டிசம்பர் மாதம் **29-**ம் தேதி இரவு நந்தினி வீடு திரும்ப வில்லை; ஆனால், அன்று இரவு 8:30 மணிக்கு ராசக்கிளியின் அக்காள் மகள் வெண்ணிலாவுக்கு ****** என்கிற தொலை பேசி எண்ணிலிருந்து ஒரு அழைப்பு வருகிறது. நந்தினி தான் பேசியிருக்கிறார். தான் செந்துறை அருகில் உள்ள வெல்லூரைச் சேர்ந்த தமிழரசன் என்பவரைக் காதலிப்பதாகவும், அவரைத் திருமணம் செய்து கொள்ளும் முடிவில் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், தனது தாயார் ராசக்கிளியை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள் எனவும் தெரிவித்து விட்டு உடனே அந்த அழைப்பைத் துண்டித்துள்ளார் நந்தினி. வெண்ணிலா இந்த விசயத்தை உடனடியாக தனது சித்தி ராசக்கிளியிடம் தெரிவித்துள்ளார். அவர்கள் மீண்டும் அந்த எண்ணுக்கு அழைத்துள்ளனர்; ஆனால் அந்தக் கைபேசி அணைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

உடனே ராசக்கிளியும், உறவினர்களும் நந்தினியின் தோழி தேவியிடம் விசாரித்துள்ளனர். தனக்கு ஏதும் தெரியாது என தேவி மறுத்து விடவே, உடனே இரும்புலிகுறிச்சி காவல் நிலையத்துக்கு ஓடியுள்ளனர். தங்கள் மகள் கடத்தப்பட்டதாக புகார் தெரிவித்துள்ளனர். காவல் நிலையத்திலிருந்த அதிகாரிகள் எதுவாக இருந்தாலும் நாளை காலை வந்து பார்த்துக் கொள்ளும்படி மிரட்டி விரட்டியடித்துள்ளனர்.

மறுநாள் மீண்டும் புகாரளிப்பதற்குச் சென்ற போது, காவல் நிலையத்திலிருந்த அதிகாரி மணிவண்ணன் என்பவர், "உன் பிள்ளை எவனோடவோ ஓடிப் போயிருச்சி. இதையெல்லாம் கடத்தல் புகாரா வாங்க முடியாது. கேர்ள் மிஸ்ஸிங் என்று எழுதிக் கொடுங்க" என்று எழுதி வாங்கியுள்ளார். பொதுவாக பதினெட்டு வயதுக்கு மேலான பெண்கள் வீட்டை விட்டு சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி அது புகாரானால் மட்டுமே "கேர்ள் மிஸ்ஸிங்" என



புகாரைப் பதிவு செய்வது வழக்கம் - பதினெட்டு வயதுக்கு உட்பட்ட பெண்ணை ஒருவர் பெற்றோரின் சம்மதமின்றி அழைத்துச் சென்றால் “கடத்தல்” என்றே புகார் பதியப்பட்டிருக்க வேண்டும்.

இதற்கிடையே கடந்த 2016 டிசம்பர் மாதம் 30-ம் தேதி தங்கள் உறவினர் ஒருவரை வெல்லூருக்கு அனுப்பி விசாரித்ததில், அந்த ஊரில் இருக்கும் ஒரே தமிழரசனும் மன நிலை சரியில்லாதவர் எனத் தெரிய வருகின்றது. ஆக, நந்தினியைக் கடத்திச் சென்றவர்கள் அவளது வீட்டாரைக் குழப்ப வேண்டுமென்பதற்காக தவறான தகவலை நந்தினியை விட்டே சொல்லவைத்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது. உடனே நந்தினியின் குடும்பத்தார் தேவியிடம் விசாரிக்கின்றனர்; அவர் மீண்டும் மறுக்கவே ஊர் பஞ்சாயத்தை கூட்டி விசாரிக்கின்றனர்.

விவகாரம் பெரிதாவதைக் கண்டு பயந்த தேவி உண்மையை பஞ்சாயத்தில் தெரிவித்து விடுகிறார். இந்து முன்னணியின் செந்துறை கிழக்கு ஒன்றிய செயலாளர் மணிகண்டன் கடந்த ஆறேழு மாதங்களாக நந்தினியை காதலித்ததாகவும், அவனே நந்தினியை அழைத்துச் சென்றதாகவும் தேவி தெரிவித்துள்ளார். மணிகண்டன் வன்னியர் என்பது தெரிந்தவுடன் நந்தினியின் உறவினர்கள் பதறியுள்ளனர். மணிகண்டன் ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர் என்பதோடு, மணிகண்டன் கொலை செய்யவும் அஞ்சாதவன் என்பதையும்



அப்படிச் செய்தாலும் அவனை தண்டனையிலிருந்து தப்புவிக்க இந்து முன்னணி என்கிற பயங்கரவாத அமைப்பு அவனுக்குப் பின் உள்ளது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

இதற்கிடையே அரியலூர் மாவட்ட காவல் துறை உயரதிகாரிகளை அணுகும் இந்து முன்னணி மாவட்ட தலைவர் ராஜசேகர், தனது பெயருக்கு களங்கம் கற்பிக்கும் முயற்சி நடப்பதாகவும், மணிகண்டன் தங்களது அமைப்பில் இருந்து 2016 டிசம்பர் 29 தேதியன்றே விலகி விட்டாரென்றும் மனு ஒன்றை அளித்துள்ளார். “எங்கப்பன் குதிருக்குள் இல்லை” என்கிற ரீதியிலான மேற்படி மனுவை கர்ம சிரத்தையுடன் பெற்றுக் கொண்ட காவல்துறை, இன்று வரை ராஜசேகரை விசாரிக்க மறுத்து வருகின்றது.

நந்தினியின் உறவினர்கள் சிலர் காவல் துறையில் கீழ்நிலை பொறுப்புகளில் உள்ளனர். இவர்களுக்கு இந்து முன்னணியின் பயங்கரவாத முகம் நன்கு தெரியும் என்பதால் நந்தினியின் குடும்பத்தை எச்சரிக்கை செய்து உடனே மீண்டும் இரும்புலி காவல் நிலையத்தை அணுகுமாறு ஆலோசனை கொடுத்துள்ளனர்.

30-ம் தேதியே மீண்டும் காவல் நிலையத்துக்கு ஓடிச் சென்ற இவர்களை அதிகாரிகளின் அலட்சியமும் திமிரும் வரவேற்றுள்ளது. ஸ்ரீரங்கத்துக்கு பந்தோபஸ்து பணிக்காக காவலர்கள் செல்ல வேண்டியுள்ளதைச் சொல்லி இந்தக் குடும்பத்தை மீண்டும் விரட்டியடித்துள்ளனர்.

அடுத்த ஓரிரு நாட்கள் ஏற்கனவே கணவனை

இழந்திருந்த ராசக்கிளி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்துள்ளார். காதல் விவகாரத்தில் மகள் வெளியேறியிருப்பதால், எப்படியும் திரும்பி வந்து விடுவாள்; எங்கிருந் தாலும் நன்றாக இருப்பாள் என்கிற மெல்லிய நம்பிக்கை அந்தத் தாயின் மனதில் இருந்துள் ளது. எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் மீண்டும் 2017 ஜனவரி 3-ம் தேதி காவல் நிலை யத்தை அணுகியுள்ளார். இம்முறை தேவியையும், மணிகண்டனையும் அழைத்து விசாரித்துள்ளனர்.

காவல் நிலையத்தில் வைத்து மணிகண்டன் தான் நந்தினியை அழைத்துச் சென்றதாகத் தெரிவித்துள்ளார் தேவி. மேலும் ஆறு மாதங் களுக்கு முன் மணிகண்டன் நந்தினிக்கு தொடர்ந்து ‘லவ் டார்ச்சர்’ கொடுத்ததாகவும், நண்பர்களோடு எந்நேரமும் அவளைப் பின்தொடர்ந்ததாகவும் தெரிவித்த தேவி ஒரு கட்டத்தில் மணிகண்டன் ஏதேதோ ஆசை வார்த்தைகளைச் சொல்லி நந்தினியை தன் வலையில் வீழ்த்தியதாகவும் இதன் காரணமாக நந்தினி கருவுற்றதாகவும், அந்தக் கரு ஐந்து மாதத்திற்கும் மேல் வளர்ந்து விட்ட நிலையில் தன்னைத் திருமணம் செய்து கொள்ள நந்தினி மணிகண்டனைக் கேட்ட நிலையிலேயே அவன் நந்தினியை அழைத்துச் சென்றதாகவும் தேவி காவல் நிலையத்தில் விரிவாக சாட்சியளித்துள்ளார்.

இவ்வளவு விரிவான சாட்சிக்குப் பிறகும், மணிகண்டனிடம் பெயருக்கு விசாரித்து விட்டு ஜாமீனில் அனுப்பியுள்ளனர் இரும்புலி போலீசார். அந்த விசாரணைகளில் முன்னுக்குப் பின் முரணாக மணிகண்டன் உளறியதோடு தனக்கு ஏதும் தெரியாது என்றும் மறுத்துள்ளான். இந்நிலையில் ஜாமீனில் வெளிவந்த உடனேயே தலைமறைவாகிறான் மணிகண்டன்; அவனுக்கு ஜாமீன் கையெழுத்து போட்டு அழைத்து வந்த கிருஷ்ணமூர்த்தி என்பவன் பயந்து போய் மருந்தைக் குடித்து விடவே போலீசாருக்குத் தலைவலி துவங்குகிறது.

மணிகண்டனின் குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் ஒவ்வொருவராக அழைத்து விசாரிக்கத் துவங்குகிறார்கள், இரும்புலிகுறிச்சி போலீசார். எனினும், தங்களது நடவடிக்கை களில் மெத்தனத்தையும் அலட்சியத்தையும் போலீசார் தொடர்ந்து காட்டி வந்துள்ளனர். இதற்கிடையே நந்தினி கடத்தப்பட்ட வழக்கும் இதில் இந்து முன்னணிக்கு இருக்கும் தொடர் பும் போலீசாரின் அலட்சியமும் பொன்பரப்பி மற்றும் செந்துறை பகுதிகளில் இந்து முன்னணி யின் அராஜகங்களைத் தொடர்ந்து தட்டிக் கேட்டு வந்த தோழர்கள் சிலரின் கவனத்துக்கு வருகின்றது.

பகுஜன் சமாஜ், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற தலித் அமைப்புகள் இந்த விவகாரத்தைக் கையிலெடுத்து சுவரொட்டி பிரச்சாரமும், ஆர்பாட்டங்களையும் செய்யத்துவங்கவே காவல் துறைக்கு நெருக்கடி அதிகரிக்கிறது. இதற் கிடையே 8-ம் தேதி மாவட்ட எஸ்.பியிடம் மணிகண்டன் மற்றும் அவனது கிரிமினல் நடவடிக்கைகளை வழிகாட்டி இயக்கும் இந்து முன்னணி மாவட்டத் தலைவர் ராஜசேகரின்




பெயர்களைக் குறிப்பிட்டு புகார் அனுப்பப் படுகின்றது.

வெளியே விவகாரம் முற்றி வருவதை உணர்ந்து திசை திருப்பும் சதித்திட்டத்துடன் கடந்த 2017 ஜனவரி மாதம் 12-ம் தேதி மருந்தைக் குடிக்கும் மணிகண்டனை உறவினர்கள் மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். 13-ம் தேதி இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களும் மணிகண் டனின் கூட்டாளிகளுமான மணிவண்ணன், திருமுருகன் மற்றும் ராஜதுரை ஆகியோரைத் தூக்கி வந்து விசாரிக்கும் காவல்துறை, 14-ம் தேதி நந்தினியின் பிணத்தை மணிகண்டனின் கிராமமான கீழமாளிகையில் அவனது உறவினர் ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து கைப்பற்று கிறது.



கடந்த 2016 டிசம்பர் மாதம் 29-ம் தேதி நந்தினியை நண்பர்கள் துணையுடன் கடத்திய மணிகண்டன் தடயத்தையும் எடுத்துச் சென்றிருக்கிறான். அவனது செல்போன் அடுத்த ஓரிரு நாட்களில் கீழமாளிகையில் இருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ள பென்னாடம் டவரின் எல்லையில் பதிவானதாக (Tower login) காவல் துறை அதிகாரி ஒருவர் தனிப்பட்ட முறையில் பகுஜன் சமாஜ் கட்சிப் பிரமுகரிடம் தெரிவித்துள்ளார்.

நந்தினியைக் கடத்திய மணிகண்டன் அவளைத் தனது சகாக்களின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு கருவைக் கலைக்க முயற்சித்துள்ளான். இதற்காக சில மருத்துவமனைகளுக்கு அவளை அழைத்துச் சென்றுள்ளான். ஆறு மாதக் கருவைக் கலைக்க முடியாது என்பது தெரிய வந்தவுடன், அவளைக் கொல்லும் முடிவை எடுத்துள்ளான். கடத்தப்பட்டதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து நந்தினியின் வாயைத் துணியால் கட்டி தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்துள்ளான். ஒருவேளை காவல் துறையினர் புகார் கிடைத்ததும் 29-ம் தேதி இரவே தங்கள் நடவடிக்கையைத் துவங்கியிருந்தால் அந்தப் பெண் காப்பாற்றப்பட்டிருக்கலாம்.

கொடுக்கூர் கிராமத்திற்கு அருகில் உள்ள கல்லுக்குழியில் வைத்து இந்த பயங்கரத்தை அரங்கேற்றிய அவர்கள், அவளது துணியை அங்கேயே எரித்து விட்டு நிர்வாண உடலை மறைக்க இடம் தேடி ஒரு வெள்ளை எஸ்.யூ.வி மாடல் ஜீப்பில் போட்டுக் கொண்டு அலைந்துள்ளனர். பின்னர் கொடுக்கூரிலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் உள்ள கீழமாளிகையே பிணத்தை மறைப்பதற்கு தோதான இடம் என முடிவெடுத்துள்ளனர்.

கிணற்றில் வீசினால் அதன் நாற்றம் அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்கு சந்தேகம் ஏற்படுத்தும் என நினைத்து பக்கத்திலேயே ஒரு நாயை அடித்துப் போட்டு விடலாம் என முடிவெடுத்துள்ளனர். செத்த நாயின் நாற்றம் பிணவாடையை அமுக்கி விடும் எனத் திட்டமிட்டுள்ளனர். மணிகண்டனும் கூட்டாளிகளும் வெள்ளை ஜீப் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களில் இரவு நேரத்தில் நாயைத் தேடி அலைந்ததை கீழமாளிகை கிணற்றுக்குப் பக்கத்திலிருந்த வயதான பெண் பார்த்ததாகத் தெரிவித்துள்ளார். நாய் கிடைக்காமல் போகவே நந்தினியின் பிணத்துடன் கல்லைக் கட்டி எரிந்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

ஒரு தேர்ந்த தொழில்முறை கொலைவெறிக் கும்பலின் தொழில் நேர்த்தியுடன் நந்தினி கொல்லப்பட்டிருக்கிறாள். மனதில் எந்தக் கிலேசமோ நடுக்கமோ இன்றி அவளைக் கொன்றுள்ளனர் இந்து முன்னணியைச் சேர்ந்த பயங்கரவாதிகள். காமவெறியேறிய சொறிநாய் கூட கர்ப்பம் தரித்த பெண் நாயை உறவுக்கு நாடாது. ஆனால் இந்த மிருகங்களோ ஒரு கர்ப்பினிப் பெண்ணைக் கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்து கேட்பவர் நெஞ்சம் பதறும் வகையில் கொன்று போட்டுள்ளனர்.

நினைத்தாலே குலை நடுங்கும் இந்தக் காரியங்களைச் செய்ய இவர்களுக்கு எப்படித் துணிவு வந்தது? இவர்களின் குற்றப் பின்னணி என்ன? இவர்களின் பின்னே யார் யாரெல்லாம் இருக்கிறார்கள்? இந்து மாபியா கும்பலான இவர்களின் உள்ளூர் மற்றும் வெளியூர் தலைவர்கள் யார்? நந்தினியின் கொலையில் மூளையாகச் செயல்பட்ட இந்து முன்னணியின் முக்கிய பிரமுகர் யார்? அவன் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை? அரியலூர் போலீசார் இவர்களின் குற்றங்களுக்கு உடன்பட்டுப் போவது ஏன்?

மிக முக்கியமாக இந்து முன்னணிக் காம வெறிக் கொலையாளிகளுக்கு இது புதிதல்ல என்பதும் எமது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

**- நன்றி வினவு**

மீண்டும் பொதுசிவில் சட்டம்




# ஒன்றும் ஒன்றுக்கு அதிகமான மனைவியரும்

ஒரு ஆய்வின்படி இந்துக்கள், முஸ்லிம்களை விட அதிகமான பெண்களை மணமுடித்துக் கொள்கின்றார்கள். இதுதான் கடந்த 30 ஆண்டு களாக இந்தியாவில் நடந்து வருகின்றது. – ( டைம்ஸ் ஆஃப் இந்தியா. செப்.–13, 2009)

அண்மையில் நமது சட்ட ஆணையம் ஒரு நல்ல செயலை செய்து சாதித்தது. அது ஒரு இந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு இரண்டா வது திருமணம் ஒன்றை முடித்தால், அந்த திருமணம் சட்டத்திற்கு எதிரானது என அறிவிக்க வேண்டும். அந்த வகையில் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும் என்ப பரிந்துரைத்தது.

நமது சட்ட ஆணையம் இந்தப் பரிந்துரை யைச் செய்திடும்போது அதற்கோர் உண்மை புரிந்திடவிடல்லை. அந்த உண்மை,

முஸ்லிம்களை விட இந்துக்களே அதிகமாக இரண்டு திருமணங்களைச் செய்து கொள்கின் றார்கள் என்பதே அந்த உண்மை! இது கடந்த 30 ஆண்டுகளாக இந்தியாவில் நடந்துவரும் நாட்டு நடப்பாகும்.

1974–இல் எடுக்கப்பட்ட ஒரு அரசு கணக்கெடுப்பில் முஸ்லிம்களில் 5.6% விழுக்காடு ஆண்டுகள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றார்கள். ஆனால் உயர்ஜாதி இந்துக்களில் 5.8% விழுக்காடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்கிறார்கள். இதில் விழுக்காடுகள் அளவில் சிறிய வித்தியாசமே இருப்பதாகத் தோன்றும், ஆனால் யதார்த்த எண்ணிக்கையில் இது மிகவும் அதிகமாகும்.

1971–ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 43.3 கோடி இந்துககள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்கின் றார்கள். முஸ்லிம்களில் 6 கோடி (ஆறு கோடி) முஸ்லிம்களே ஒன்றுக்கு மேற்பட்ட பெண் களைத் திருமணம் செய்து கொள்கின்றார்கள்.

1971–ஆம் ஆண்டில் மட்டும் ஒரு கோடி இந்துக்கள் பல தாரங்களை மணந்திருக்கின் றார்கள். ஆனால் முஸ்லிம்களில் 12 லட்சம் பேரே பல தாரங்களை மணந்துள்ளார்கள்.

இந்த நிலை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது என்கின்றார் சமுதாயங்களைப் பற்றிய ஆய்வுகளைச் செய்யும் அஸ்கர் அலீ இன்ஜினீயர் என்பவர்.

அரசு நடத்திய ஆய்வு இந்தியா முழுவதும்



உள்ள அனைத்துப் பகுதிகளையும் தழுவியது. ஆனால் அதை மக்கள் மன்றத்தில் கொண்டு வந்திடவில்லை. இந்த கணக்கெடுப்பை வெளி யிடாமல் மூடி மறைத்துவிட்டது. இந்தக் கணக் கெடுப்புச் சொல்லும் இன்னொரு உண்மை என்னவெனில் வட இந்தியாவை விட தென்னிந் தியாவில்தான் பலதார மணம் அதிகமாகச் செயலிலிருக்கின்றது. அதிலும் பணம் படைத்த இந்துக்கள் நடுத்தர இந்து வர்க்கத்தினர் இவர்களிடையேதான் பலதார மணம் அதிகமாச் செயலில் இருக்கினறது. ஏழைகளைவிட இவர்களிடமே பலதாரமணம் அதிகம்.

*1961*–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக் கெடுப்பை ஒருமுறை ஏறெடுத்துப்பார்த்தால், பலதாரமணம் மிகவும் அதிகமாக இருப்பது ஆதிவாசிகள், புத்தர்கள், ஜெயின்கள், இந்துக்கள் ஆகியோரிடந்தான். முஸ்லிம்கள் ஆக கடைசியில்தான் வருகின்றார்கள்.

இவற்றிலிருந்து சுயப்பிரசவமாக வெளிவரும் உண்மை என்னவெனில் சட்டத்தைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. ஏனெனில் மேலே நாம் கோடிற்றுக் காட்டிய இரண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பும், பலதார மணத்தை தடுக்கும் இந்து திருமணச் சட்டம் **1955**–க்குப் பின் எடுக்கப் பட்டவைதான்.

இதிலிருந்து தெரியும் உண்மை என்ன வெனில், பலதார மணம், ஆண் ஆதிக்க கூறு களாகும், கலாச்சாரத்தோடும் சமுதாய வாழ்வோ டும், தொடர்புடைய ஒன்று. அல்லாமல் மதத்திற்கும் அதற்கும் சம்மந்தமே இல்லை.

சண்டிகரில் ஒரு சமுதாயவியல் வல்லுநர் அவர்பெயர்நிர்மலாஷர்மா அவர்கூறுகின்றார்...

"பலதார மணத்தின் அங்கம் வகிக்கும் இந்து பெண்கள் பல கஷ்டங்களையும் நஷ்டங்களை யும் சந்திக்க வேண்டியதிருக்கின்றது. இந்த அவலங்கள் முஸ்லிம் பெண்களுக்கில்லை".

இது ஏனென்றால் பல மனைவியரை திருமணம் செய்யும் ஒரு இந்து தன் மனைவியரை மிக எளிதாகப் புறக்கணித்திட இயலும், அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் போய்விட முடியும்.

ஆனால் முஸ்லிம் ஆண்களுக்கு மனைவியாக அமையும், மனைவியருக்கு பல உரிமைகள் சட்டப் படியாகவே கிடைக்கின்றது. சமுதாய அளவிலும் பல உரிமைகள் கிடைக்கின்றது. இதில் அவள் – முஸ்லிம் மனைவி எல்லா வகையிலும் ஏனைய மனைவியரைப்போல் சமமான உரிமையையும், சமுதாய அங்கீகாரத்தையும், பெறுகின்றார். இதனால் நான்கு சுவர்களுக்குள் மூடி மறைக்கப்படும் இந்து பலதார மணம் வெளிப்படையாகவும், ஊரறியும் படியும் செய்யப்படும் முஸ்லிம் பலதார மணம் எல்லா வகையிலும் சிறந்தது.

ஹரியான மாநிலத்தின் துணை முதலமைச்சர் சேந்த் இரண்டாவது திருமணம் செய்து கொள் வதற்காக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அனுராதா பாலி என்ற பெண்ணை இஸ்லர்தை ஏற்றிட சொல்லி திருமணம் செய்து கொண் டார். அவருடைய இந்து திருமணம் செல்லாது என அறிவித்திட அனேக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.


அப்போது அவர் சொன்னார்.

"அன்றைய நாட்களில் நமது சட்டங்கள், (இந்து சட்டங்கள்) மிகவும் தாராள தன்மைக் கொண்டதாக இருந்தன. பழங்கால மன்னர் களும், நாம் காவியமாகக் கருதும் நாயகர்களும் பல பெண்களைத் திருமணம் செய்திருந்தார்கள்".

அடந்துவந்த நெருக்கடிகளால் ஹரிவானா வின் துணை முதலமைச்சர் சேந்த் மீண்டும் இந்துவாக மாறினார். ஆனால் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட இரண்டாவது மனைவி, நான் சம்பிரதாய மனைவியாக இருக்கின்றேன். ஆனால் அவருடைய முதல் மனைவிதான் சட்டப் படியான மனைவியாக இருக்கின்றாள்.

இதில் இரண்டாவது திருமணத்தின் மீதான தடைக்குப் பின்னரும் இரண்டாவது மனைவியரோடு துணை முதலமைச்சர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் பிரவீன் அகர்வால், அவர்கள் மிகப்பெரியதொரு அவலத்தை அனைவரின் பார்வைக்கும் கொண்டு வந்தார். அது இந்து ஆண்கள் இரண்டாவது திருமணத்தை செய்துவிட்டு மிகவும் லாவகமாகத் தப்பித்துவிடுகின்றான். காரணம், அவன் மீது யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது, ஒரு புகார் வந்தால் ஒழிய! இந்த புகாரையும் முதல் மனைவியே செய்ய வேண்டும். மனைவி யாருக்கும், அவருக்கு இன்னொரு மனைவி இருக்கின்றாள் என்பது தெரிவதில்லை.



தன் கணவருக்கு இன்னொரு மனைவி இருக்கின்றாள் என்பதைத் தெரிவித்திருந்தால் தானே முதல் மனைவி புகார் செய்திட முடியும்?

உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் இன்னொரு ஆதங்கத்தையும் அள்ளிக் கொட்டினார். அது ஒரு இந்து ஆண் இரண்டாவதாகத் திருமணம், செய்து கொள்வது என்பது ஏனைய சமுதாய ஆண்களைவிட எளிமையானது. ஏனெனில் எந்த கோயிலும், திருமணப் பதிவுகளை வைத்துக் கொள்வதில்லை.

அதே மீறி, இந்து ஆணின் திருமண விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றால் அந்த இரண்டாவது திருமணம் செல்லாது, சட்ட விரோதமானது எனக் கூறிவிடுகின்றார்கள். அந்த பெண்ணின் கதி அதோகதிதான்.

ஆனால் இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப்படும் முஸ்லிம் பெண்ணுக்கு எல்லா கண்ணியமும் பொருளாதார பாதுகாப்புகளும் சட்டப்படியாகவே கிடைத்துவிடுகின்றது.

சூரிய நாராயணா என்ற இன்ஜினீயரின் வரலாற்றைப் பாருங்கள்... இவருக்கு இரண்டாவதாக ஒரு மனைவி. அதிலொரு மகள். இந்த இரண்டாவது மனைவிக்கு அவருடைய முதல் மனைவியைப் பற்றி எதுவும் தெரியாது. இவர் – இன்ஜினீயர், ஆப்கானிஸ்தானில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கே கொல்லப்பட்டார். அரசு ஒரு பெருந்தொகையை இழப்பீடாகக் கொடுத்தது. இதை இரண்டாவது மனைவி கேட்டார். அப்போதுதான் அவருக்கு இன்னொரு மனைவி இருப்பது தெரியவந்தது. நீதிமன்றம் சென்றது வழக்கு. இழப்பீட்டுத் தொகை யாருக்கு? எனக் கேள்வி நீதிமன்றம் முதல் மனைவிக்கே அனைத்தும் சொந்தம் என ஆணை பிறப்பித்தது. இரண்டாவது மனைவியை சட்ட விரோதமான மனைவி என்றது. ஆணையையும் அவளையும் அவளது மகளையும் வீதியில் விட்டடது.

என்னே அநீதி?

இஸ்லாமிய சமுதாய அமைப்பில் திருமணத்தை அறிவிக்க வேண்டும். பதிவு செய்ய வேண்டும்.

உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் அகர்வால் ஒரு இந்து தனக்குப் பிடிக்காத மனைவியிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எடுக்கும் கால அளவு மிகவும் நீளமானது. மண விலக்குப் பெற்று மறுமணம் செய்து வாழ்ந்திடத் தொடங்கும் முன்பு அவன் தன் வாழ்வை இழந்து விடுவான். ஆனால் உடனேயே இன்னொரு மனைவியை மணந்து கொள்கின்றான்.


நீண்ட காலங்கள் அலைந்து, திரிந்து மண விலக்கை பெறுவதில் ஏற்படும் கஷ்டங்கள், மன உளைச்சல்கள், பண விரயம், சில நேரங்களில் திவாலாகும் நிலைக்கே கொண்டு சென்று விடுகின்றது. இதனால் முதல் மனைவியை விட்டுத் தள்ளிவிட்டு புறக்கணித்துவிட்டு இன்னொரு பெண்ணோடு வாழத் தொடங்கிவிடுகின்றான்.

அஸ்கர் அலீ, இன்ஜினீயர் சொல்லுகின்றார், பலதார மணம் முஸ்லிம்களிடம் மிகவும் பரலவாக இருக்கின்றது என்பது பொய். திருக்குர்ஆன் நான்கு மனைவியருக்கான அனுமதியை வழங்கிடும்போது நிபந்தனைகளுடன்தான் அந்த அனுமதியை வழங்குகின்றது.

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒவ்வொரு ஆயிரம் (1000) ஆண்களுக்கும், 935 பெண்கள்தாம் இருக்கின்றார்கள் என்கின்றது. முஸ்லிம்களில் ஒவ்வொரு 1000 பெண்களுக்கும், 930 பெண்கள்தானம் இருக்கின்றார்கள் என்கின்றது. இதுதான் உணமையென்றால் வழி இல்லை. இரண்டாவது மனைவிக்கு என் செய்வது? என்பதுதான் உண்மை நிலை.

(இதனால் வெறுப்பை வளர்ப்பவர்கள், அதாவது, இந்தயிக் குடிமக்களிடையே வெறுப்பை வளர்ப்பவர்கள் மட்டும்தான் இதைப் பிரச்சினையாக்குவார்கள்)

**ஆங்கிலத்தில் – திவ்வியா.**
**தமிழில் – மு. குலாம் முஹம்மத்**



# தயை கூர்ந்து சற்றுக் கவனமாக இருங்கள்

### - தாஹிர் மஹ்மூத்

டாக்டர் தாஹிர் மஹ்மூத் அவர்கள் இந்திய சட்ட ஆணையத்தின் தலைவராக இருந்தவர். அவர் பொது சிவில் சட்டம் பற்றிய எழுதியக் கட்டுரைகள், தெரிவித்தக் கருத்துகள் நமது அரசுகளின் போக்குகளையும், பார்வை களையும் பெரிய அளவில் மாற்றியுள்ளன.

அவர் பொது சிவில் சட்டம் பற்றி சில நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றில் முஸ்லிம் நாடுகளில் ஷரீஅத் சட்டம் எப்படி செயல்படுத் தப்படுகின்றது என்பதும் ஒன்று. இந்த நூல் அவர் முஸ்லிம் நாடுகள் பலவற்றிற்குச் சென்று அங்கு நடத்திய "கள ஆய்வின்" அடிப்படையில் எழுதப் பெற்றது. இந்த நூலில் இடம்பெற்ற தகவல்களை வைகறை வெளிச்சத்தில் தந்த அட்டைப்பட கட்டுரையில் தாராளமாகத் தந்திருக்கிறோம்.

இந்நிலையில் மோடியின் பாசிச அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள், அவற்றால் முஸ்லிம் சமுதாயத்தில் ஏற்பட்ட கொந்தளிப்புகள் இவற்றை மையமாகக் கொண்டு அவர் ஒரு கருத்தை அக்கறையுடன் பதிவு செய்கின்றார். அதனை இங்கே தருகின்றோம்.

இப்போம், நாட்டை ஆட்சி என்ற பெயரில் அமர்ந்து மலிவாக ஆக்கிக் கொண்டிருக்கும், நம் மத்திய அரசு, உத்திரப் பிரதேச மாநில தேர்தல்கள் முடிந்தவுடன் நாங்கள் மீண்டும் முத்தலாக் பிரச்சனையை – மண முகமாகப் பொது சிவில் சட்டப் பிரச்சனையைக் கிளப்பு வோம் எனக் கூறியுள்ளார்கள். இதனால் டாக்டர் தாஹிர் மஹ்மூதின் கருத்துகள் கூர்ந்து கவனிக் கப்பட வேண்டியவையாகிவிடுகின்றன.

**இந்திய சட்ட ஆணையம் கவனத்தில் கொள்ள வேண்டியது...**

இந்திய அரசு, அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 44–ஐ செயல்படுத்துவது குறித்து சட்ட ஆணையத்திடம் சில கோரிக்கைகளை வைத் துள்ளது. இந்தக் கோரிக்கைகளுக்கு பதில் சொல்லிடும்போது பின்வரும் சட்ட வரையரை களை மனதில் கொள்ள வேண்டும். இந்த கோரிக்கைகளுக்கு நிலை பிரிவான அறிக்கை யாகத் தந்திட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இப்போது அரசு சட்ட ஆணையத்திடம் அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 44–ஐ செயல் படுத்துவதின் அனைத்தும் பகுதிகளையும் – அனைத்துப் பிரச்சனைகளைப் பற்றிய விரிவான அறிக்கை ஒன்றைக் கேட்டுள்ளது. இதனால் மொத்த நாடும் கொந்தளிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது. ஊடகங்களில் இடைவிடாது நடந்த விவாதங்கள் குறிப்பாக காட்சி ஊடகங் களில் நடந்த விவாதங்கள், மொத்தமாக மக்களின் கவனத்தை ஈர்த்தன.

பொது சிவில் சட்டத்தை எதிர்ப்பவர்களுக் கும், ஆதரிப்பவர்களும் நமது அரசியல் நிர்ணயச்

சட்டத்தையே மேற்கோள் காட்டினார்கள். ஆனால் யாரும் அரசியல் நிர்ணயச் சட்டத்தைச் சரிவரப் புரிந்திடவில்லை. அவர்கள் அதைப் புரிந்திடவும் தெரிந்திடவும் எந்த முயற்சியையும் செய்யவில்லை. எந்த முன் தயாரிப்புமில்லாமல் அவர்கள் விவாதங்களில் கலந்து கொள்கின் றார்கள். வாய்க்கு வந்ததையெல்லாம் அளந்து கொட்டுகின்றார்கள்.

தங்கள் விருப்பத்திற்கு தகுந்தபடி அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு விளக்கம் சொல்லுகின்ற னர். இதில் ஊடகங்கள் ஒருபடி மேலேபோய் இந்திய சட்ட ஆணையத்தை வேறு வம்புக்கிழுக் கின்றன. தவறான தகவல்களைத் தாராளமாகத் தருகின்றன.

ஊடகங்கள் தந்தத் தவறான தகவல்களுள் ஒன்று. 18–வது சட்ட ஆணையம், 2008 ஆம் ஆண்டில் ஓர் விரிவான அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றது. அதில் பொது சிவில் சட்டத்தைச் செயல்படுத்தப் பரிந்துரைத்திருக் கின்றது. ஆனால் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி எதையும் செய்யாமல்அப்படியேவிட்டுவிட்டது. என்பதும் ஒன்றாகும்.

இரண்டொரு நாள்கள் கழித்து இன்னொரு செய்திக் கட்டுரை வெளிவந்தது. அதில் வேறுசில அரைவேக்காட்டு செய்திகள், சட்ட ஆணை யத்தைப் பற்றி வெளிவந்தன.

சட்ட ஆணையத்தின் அறிக்கை என இவர்கள் குறிப்பிடும் இரண்டு அறிக்கைகளையும், சட்ட ஆணையத்திற்காக எழுதியது நான்தான். நான் அப்போது சட்ட ஆணையத்தின் முழுநேர தலைவராக இருந்தேன்.

இந்த இரண்டு அறிக்கைகளில் முதல் அறிக்கை "Special Marriages Act of 1954" சிறப்புத் திருமணச் சட்டம் 1954–ஐ பற்றியது. அதில் சில பிரிவுகள் பாரபட்சம் நிறைந்த வையாக இருக்கின்றன என்பதை மையமாகக் கொண்டு, அந்த பாரபட்சங்களைக் களைந்திடும் விதமாக தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை.

இன்னொரு அறிக்கை, எல்லாத் திருமணங் களையும் கட்டாயமாகப் பதிவு செய்திட வேண்டும் என்பதை மையமாகக் கொண்டது, இதற்காக மத்திய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதைப் பற்றியது.

இந்த இரண்டு அறிக்கைகளுமே பொது சிவில் சட்டத்தைப் பற்றியவை அல்ல. இந்த இரண்டு அறிக்கைகளையுமே சட்ட ஆணையும் அப்படியே ஒத்துக்கொண்டது. அதாவது சட்ட ஆணையத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒத்துக்கொண்டார்கள்.

நான் மூன்றாவதாக ஓர் அறிக்கையை எழுதினேன். அந்த அறிக்கை "Muslim Personal Law (Shariat) Application Act 1937" முஸ்லிம் தனியார் சட்டம் (ஷரீஅத்) செயல்முறை சட்டம் 1937–ஐ பற்றியது. இது முஸ்லிம் தனியார் சட்டத்தின்நோக்கத்தைமையமாகக்கொண்டது. இதனைசட்டஆணையம்அப்படியேநிராகரித்து விட்டது. காரணம் முஸ்லிம் தலைவர்கள் காட்டிய எதிர்ப்பும், மறுப்பும்தான். இந்தத் தலைவர்கள் எனது அறிக்கை காலப்போக்கில் பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவந்திட வழி விட்டுவிடும் என அஞ்சினார்கள். அதனால் எதிர்த்தார்கள்.

சட்ட ஆணையத்தின் வரலாற்றில் இதுவரை முஸ்லிம் தனியார் சட்ட புனரமைப்புப் பற்றியோ பொது சிவில் சட்டம் பற்றியோ யாரும் எந்த வினாவையும் தொடுக்கவில்லை.

1995–ஆம் ஆண்டு சரளா முட்கல் வழக்கு என்றொன்று வந்தது. இந்த வழக்கில் ஒரு இந்து இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்காக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது முக்கிய விவாதமானது. இந்த வழக்கில் ஒரு நீதிபதி சட்ட ஆணையம், தேசிய சிறுபாண்மை ஆணையத் தோடு இணைந்து பொது சிவில் சட்டம் பற்றிய அறிக்கை ஒன்றை தயாரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது. இதற்கான ஆணையை அது பிறப்பித்தது. ஆனால் அந்த ஆணையை யாரும் கண்டுகொள்ளவில்லை. அது அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

இப்போது இருக்கின்ற மத்திய அரசு எடுத் திடும் நடவடிக்கைகளுக்கு முன் மாதிரியே கிடையாது. இதற்கு முன் எந்த அரசும் இப்படி யொரு நடவடிக்கையை எடுத்ததில்லை. இந்த அரசின் நோக்கம் நேர்மையானதல்ல. ஆனால் அது சட்ட ஆணையத்திடம் ஓர் அறிக்கையைக் கேட்டதில் தவறில்லை. உண்மையைச் சொன் னால் சட்ட ஆணையம் இதைப்போன்ற சர்ச் சைக்குரிய சட்ட விவகாரங்களில் அறிக்கை

களைத் தயாரித்துத் தருவதற்காககத்தான் இருக்கின்றது. அது அறிக்கைகளைத்தான் தந்திட இயலும் அல்லாமல் சட்டங்களை இயற்றித் தந்திடாது. அது அதன் வேலை அல்ல.

இப்போதுள்ள பிரச்சனையிலும் பொதுசிவில் சட்டப் பிரச்சனையிலும்,(To Exmine and Report) ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டும், என்றே அரசு கேட்டுள்ளது. அல்லாமல் ஒரு பொது சிவில் சட்டத்தை எழுதிக் கேட்டிடவில்லை. எது எப்படியானாலும் சட்டத்தை எழுதுவது அல்லது வடிவமைப்பது என்பது சட்ட ஆணையத்தின் வேலை அல்ல. சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்தும். சட்ட ஆணையம் கொடுப்பது அதன் விருப்பந்தான் என்றே கூறியுள்ளார். (சட்ட அமைச்சர் பல நாக்குகளில் பேசும் பாசிச பரிவாரத்தைச் சார்ந்தவர் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்) ●

---

6-ம் பக்கம் தொடர்ச்சி ....

வெள்ளை நிறப் பெண்களையும் இணைத்துக் கொண்டு கொள்ளையை பெரிய அளவில் வளர்த்தார், சிக்கிக்கொண்டார். வெள்ளைநிறப்பெண் களோடு இணைந்ததற்கு 8 ஆண்டுகளும், திருட்டுக்கு 2 ஆண்டுகளும் எனப் பத்தாண்டுகள் சிறை. தீர்ப்பிலும் நிறவெறி நிறைந்து நின்றது. அமெரிக்காவின் சிறைச்சாலைகள்தாம் கறுப்பர்கள் அடிக்கடி தரிசிக்கும் புண்ணியஸ்தலம். அங்கே 1952ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார்.

சிறையிலிருந்த நூல்களைக் கற்றார். அத்தோடு இஸ்லாத்தோடு தொடர்புகொண்டார். இஸ்லாத்தை ஏற்றார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து விடுதலை அடைந்தார். தீவிரமாக இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். தனது வேகமான இஸ்லாமியப் பிரச்சாரத்தின் ஒரு கட்டத்தில் கேசியஸ்கிளே என்ற குத்துச் சண்டை வீரரை முஹம்மது அலீ என்றாக்கினார். தன்னுடைய பேச்சுத் திறமையால் ஆயிர மாயிரம் கறுப்பர்களை இஸ்லாத்தில் பிணைத்தார்.

அமெரிக்க அரசும் வெள்ளை நிற வெறி பிடித் தவர்களும் "அந்த முஸ்லிம்கள்"களைக் கண்டால் அலறும் அளவிற்கு முஸ்லிம்களை ஒன்றிணைத் தார். இஸ்லாமிய அறிஞர்களின் அறிவுரையின் கீழ் தன் பெயரை **மாலிக் அல் ஷாபாஸ்** என மாற்றிக் கொண்டார். சவூதி மன்னர் கிங் பைசல், இன் விருந் தினராக ஹஜ் கடமையை நிறைவேற்றினார். ஹஜ்ஜின் போது மக்காவில் கூடிய மக்கள் கொட்டிய சகோதரத்துவத்தால் வெள்ளையர்களை வெறுப் பதும் தவறு என்பதை உணர்ந்தார். வெறுப்புகளிலி ருந்து வெளிப்போந்து முழு இஸ்லாமிய பிரச்சாரகர் ஆனார். தொடர்ந்து 16 நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பரப்பினார். அவர் ஆற்றிய உரைகளில் அள்ளிச் சொரிந்த கருத்துகளால் அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹாவார்டு பல்கலைக் கழகம், ஆங்கில நாட்டின், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் இவையெல்லாம் அவரை அழைத்து உரை யாற்ற வைத்தன.

பொறுக்க முடியவில்லை அவருடைய பிரச்சா ரத்தின் வேகத்தை வெள்ளை நிற வெறியர்களாலும், அவர்களால் இயக்கப்பட்ட அமெரிக்க அரசாலும், அவரை பூமியிலிருந்து அகற்றிட திட்டம் போட்டார் கள். 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம் நாள் சில கறுப்பர்களை ஏவிவிட்டே அவரைக் கொலை செய்தார்கள். மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீதானார். அப்போது அவருக்கு அகவை 39. இவரைப் போன்றோரைப் பற்றித்தான் இறைவன் இப்படிக் கூறுகின்றான்.

"இன்னும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப் பட்டோரை இறந்து விட்டவர்கள் என்று கூறாதீர்கள். அப்படியல்ல! அவர்கள் உயிருள்ளவர்கள் ; எனினும் நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள்" (அல்குர் ஆன் 2:154)

ஆமாம்! இன்று ஆயிரமாயிரம் ஆவணப் படைப்புகளிலும் ஆவணங்களிலும் ஆராய்ச்சிகளி லும் நூல்களிலும் **மால்கம் X** என்ற மாலிக் அல் ஷாபாஸ் நின்று வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக 1992-ல் ஸ்பைக்லீ என்ற அமெரிக்க பட தயாரிப்பாளர் எடுத்த திரைப்படத்தின் வழி இன்னும் அதிகமாக உலக மக்கள் மனதில் இடம் பிடித்தார். இந்த படம் ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

ஆங்கில உலகிலும், ஐரோப்பாவிலும் அறிந்த அளவுக்கும், ஏற்படுத்திய தாக்கத்தின் அளவுக்கும், **மால்கம் X**-ன் வாழ்வும், வழியும் இந்தியாவுக்குள் தாக்கங்களைஏற்படுத்திடவில்லை. இங்கேதான் அது அதிகமாக தேவைப்படுகிறது. இதனால் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், இவை அவர் ஷஹீதாக்கப்பட்ட பிப்ரவரி மாதத்தை **மால்கம் X** மாதமாக எடுத்துக்கொண்டு அவர் வாழ்வையும் அதை மாற்றிய இஸ்லாத்தையும் பிரச்சாரம் செய்கின்றது.

**இதை பரவலாக்குவதன் மூலம்**
**அவரது வாழ்வையும்**
**இஸ்லாத்தையும் பரவலாக்கிடலாம்.**

# பாகிஸ்தானிற்கு உளவு பார்த்த பிஜேபி

## தொடரும் பாசிசவாதிகளின் துரோக வரலாறு

துரோகிகளுக்கு என்றுமே ஒரே வரலாறு தான் உண்டு. நண்பர்கள், உத்தமர்கள், பக்தர்கள் என்று வெளியில் தங்களை காட்டிக் கொண்டு கீழறுப்பு வேலைகளில் ஈடுபடுவார்கள். அந்த துரோகிகளின் வரிசையிலும், அதில் முன்னணியில் நிற்பதிலும் பாசிசவாதிகளுக்கு என்றுமே தனி வரலாறு உண்டு.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்ட சுதந்திர போராட்ட வீரர்களை காட்டி கொடுத்ததிலும், வெள்ளையர்களுக்கு மன்னிப்பு கடிதம் எழுதியதிலும் இவர்களின் போலி தேசபக்தி வெளிச்சத்திற்கு வந்தது ஊரறிந்த உண்மை.

வெள்ளையர்களுக்கு "அடியேன் அடிமை சேவகம் புரிவேன்" என்று சொன்ன சாவர்க்கரும், சுதந்திர போராட்ட வீரர்களை காட்டி கொடுத்த உத்தமர் வாஜ்பாயியும் புரிந்த தொண்டை அவர்களின் கொள்கை வாரிசுகள் இன்றும் செய்து கொண்டு தான் இருக்கின்றார்கள்.

இதில் வேதனை என்னவென்றால் இந்தியா வின் எதிரி என்று இவர்கள் பிரச்சாரம் செய்யும் பாகிஸ்தான் நாட்டிற்காக வேவு பார்த்து தங்கள் தேசபக்தியை மீண்டும் நிரூபித்துள்ளனர். பாகிஸ் தானின் உளவு அமைப்பான ISI- விற்காக இந்தியாவில் உளவு பார்த்ததாக 11 பேரை மத்தியபிரதேசின் தீவிரவாத தடுப்பு படையினர் 9/2/2017 அன்று கைது செய்துள்ளனர். இதில் பி.ஜே.பி-இன் தகவல் தொழில் நுட்பபிரிவில் கடந்த ஒருவருடமாக சேவை செய்த துருவ் சக்சேனா என்பவனும் மாட்டிக்கொண்டான். இதில் ஜிதேந்திர சிங் யாதவ் என்பவன் குவாலியூர் வார்டு எண் 58 -இல் நகராட்சி மன்ற உறுப்பினராக பணிபுரியும் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் நெருங்கிய உறவினர்.

பணத்திற்காக இந்திய நாட்டின் முக்கிய தகவல்களை பாகிஸ்தானிற்கு அனுப்பியுள்ளனர். மத்திய பிரதேசின் தீவிரவாத தடுப்பு படை யின் தலைவர் சஞ்சீவ் சாமி இந்த திருட்டு தனத்தையும், தேச துரோகத்தையும் வெளிச்சத் திற்கு கொண்டு வந்துள்ளார். இந்தியாவிற்கு எதிராக உளவு பார்த்த கையோடு இந்தியாவின் தொலைபேசி துறைக்கும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

"தகவல் தொடர்பு பரிமாற்றத்திற்கென ஒரு மாற்று வழியை ஏற்படுத்தி அதன் மூலம் இந்தியாவின் எல்லைக்கு அப்பால் இருப்பவர் களுக்கு உதவி செய்துள்ளனர். ஜம்மு கஷ்மீரில்





VHP தலைவர் பிரவீன் தொகாடியாவுடன் அஷிஷ் சிங் ரதோர் (இடமிருந்து இரண்டாவது)

இராணுவ பணியில் இருக்கும் வீரர்களிடம் எல்லைக்கு அப்பால் இருப்பவர்கள் இந்தியாவின் உயர் அதிகாரிகளை போன்று பேசி அங்கே நடக்கும் இராணுவ நடவடிக்கைகளை கேட்டு தெரிந்துள்ளனர்" என்கிறார் சஞ்சீவ் சாமி.



மத்திய பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவ்ஹானுடன் துருவ் சக்சேனா

இதற்காக அவர்கள் பயன் படுத்திய சிம் (SIM) கார்டுகள் அடங்கிய 40 சிறு பெட்டிகளை யும், 3000 சிம் கார்டுகளையும் கைப்பற்றியுள்ளது தீவிரவாத தடுப்பு படை. சைனாவில் தயாரிக்கப்பட்ட மொபைல் போன்கள், லேப்டாப்கள், data கார்டு (Data card) களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இணையதளத்தின் (Internet) வழியாக மேற் கொள்ளப்படும் வெளிநாடு அழைப்புகள் இந்த போலி சிம் பெட்டிகளுக்கு அனுப்பபட்டு, அந்த அழைப்புகள் லோக்கல் அழைப்புகளாக மாற்றப் படுகின்றன. மேலும் அழைப்பாளரின் உண்மை யான முகவரிகளும் மறைக்கப்படுகின்றன. இப்படி தகவல் தொடர்புக்கென ஒரு மாற்று வழியை ஏற்படுத்தி அவர்கள் பல லட்சங்களை சம்பாதித்துள்ளனர்.

இதில் முக்கிய குற்றவாளியான சத்னா மாவட்டத்தை சார்ந்த பல்ராம் சிங் என்பவன் 200-க்கும் மேற்பட்ட வங்கி கணக்குகளை பணப்பரிமாற்றத்திற்கு பயன்படுத்தியுள்ளான். 100 ATM கார்டுகளின் கடவு சொற்களும் (Passwords) 300 ATM கார்டுகளும் அவனிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

(Times Of India Feb 15, 2017), (New Indian Express 17th February 2017) (Hindustantimes Feb 13, 2017).

பல்ராம் சிங்கின் வங்கி கணக்கில் இருந்து கடந்த ஒரு வருடத்தில் மட்டும் ரூபாய் 60 இலட்சத்திற்கும் மேல் அஷிஷ் சிங் ரதோர் என்பவனின் வங்கி கணக்கில் செலுத்தப்பட் டுள்ளது. இவன் விஸ்வ ஹிந்து பரிசத்தின் உறுப்பினர். சத்னா மாவட்டத்தின் (மத்திய பிரதேசம்) பசு பாதுகாப்பு இயக்கத்தின் தலைவன். தற்போது இவன் தலைமறைவு (India today, Bhopal, February 15, 2017).

தேசப்பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்ற கோஷங்களை ஆளும் பாரதீய ஜனதா கட்சி யினரும், பஜ்ரங்தள் அமைப்புகளும் எங்கேயும் எழுப்ப காணோம். இவர்களை பொறுத்தவரை தேசப்பற்று, தேசப்பாதுகாப்பு என்பது சிறுபான்மையினர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராகவே பயன்படுத்தப்படும். இந்த தேச விரோதிகளின் தலைவர்களின் பிடியில் தான் இன்று இந்தியா சிக்கி கொண்டுள்ளது. இவர் களிடம் இருந்து இந்தியாவை காப்பாற்ற நடு நிலையாளர்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

**- அபூஹாசின்**

ஆம் அது இருநூறு ஆண்டுகால திட்ட வழிமுறையின் நடைமுறை. இந்துத்துவாவை ராணுவ மயமாக்கு ராணுவத்தை இந்துத்துவா மையமாக்கு என்கின்ற பாசிச அறைகூவல் ராணுவ மயத்தோடு நின்றுவிடாமல் புலனாய்வு பிரிவான உளவுத்துறையையும் அது உள்வாங்கிக் கொண்டது என்பது இந்துத்துவாவின் வெற்றி குறி எனலாம்.



# "வேட்டனை விடு, வீட்டிலிருப்பவனை கெடு"

# தலைதூக்கும் புலனாய்வு பயங்கரவாதம்

## குமரி மாவட்ட காவல்துறையின் 'புதிய கொள்கை'

இந்தியாவிற்கு எதிரான சதித்திட்டங்களை புலனாய்வு செய்கிறோம் என்று கூறி களமிறங்கும் உளவுத்துறை தங்கள் விசுவாசங்களை இந்திய இறையான்மையை குழிதோண்டி புதைக்க நினைப்பவர்களுக்கே சார்ந்து வருகின்றனர். அதற்காக இந்திய அரசியல் சாசனத்தையும், ஜனநாயகத்தையும் காத்திட முனைந்த வீரமகன் – ஹேமந்த் கார்கரேயை கொலையும் செய்தார்கள் மத்திய உளவுத்துறையினர். சி.பி.ஐ., மத்திய உளவுத்துறை என்று தங்களை பறைசாற்றும் இவர்கள் இந்துத்துவாவின் பிரித்தாளும் கொள்கைக்கு பெரிதும் உதவி வருகின்றனர். அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை கழுகு மரம் ஏற்றவே SIT, SIU, Q-பிராஞ்ச் போன்ற பெயர்களிலும் உலா வருகின்றனர்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தில் உருவாக்கப் படாத எந்த சட்டத்தின் அங்கீகாரமும் பெறாமல் புலனாய்வு என்ற ஒரே பெயரால் உலா வரும் இந்த பயங்கரவாத உளவுத்துறைதான் நாட்டின் அனைத்து நிர்வாக அமைப்புகளை தன் கட்டுக்குள் வைத்திருக்கின்றது. அதனால்தான் பாபரி மஸ்ஜித்துக்கான வழக்கிற்கு நேர்மையான, ஆதாரத்துடன் தீர்பெழுத இருந்த நீதிபதி கான் என்பவரை தீவிரவாதியாக சித்திரிக்க தாங்கள் எழுதி வைத்த கதைகளை கொண்டு மிரட்ட முடிந்தது.

அதே வேளையில் உலக வரலாற்றில் எங்குமில்லாமல் இவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட நீதிபதிகளை கொண்டு விடிய விடிய நீதிமன்றத்தைத் திறந்து வைத்து செய்யாத குற்றத்திற்காக இந்திய அரசாங்கத்தை நம்பி தன்னுடன் பிறந்த சகோதரனுக்காக



வழக்கறிஞர் அப்துல் நிஜாம்



வழக்கறிஞர் அக்மல் க்ஸாலி

சரணடைந்த யாகூப்மேனன் ஓர் முஸ்லிம் என்பதால் அதிகாலை 3.30 மணிக்கே தீர்ப் பெழுதி தங்கள் வசமுள்ள சாட்சியங்களை அழிப்பதற்காகவும், உண்மைக் குற்றவாளியை காப்பாற்றுவதற்காகவும் யாராகிலும் தூக்குத் தண்டனையே வேண்டாம் என்றநெஞ்சுரத் துடன் உயிர்நீத்த முன்னால் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் உடலை தகணம் செய்யும் நாளன்று குற்றம் நிரூபிக்கப் படாமல் தன் பிறந்த நாளன்றே யாகூப் மேமனை தூக்கில் ஏற்றி கொலை செய்தார்கள்.

மொத்த இந்தியாவின் ஓர் கணக்கெடுப்பு எடுத்து பார்த்தோமேயானால் உளவுத்துறையின் புலனாய்வு பயங்கரவாதத்தால் தங்கள் இளமை யையும், குடும்பத்தையும் இழந்து தங்கள் வாழ்க்கையில் பாழ்போன முஸ்லிம்கள் ஏராளம், ஏராளம். உளவுத்துறையின் பொய்யான தகவல் களால் தங்கள் வாழ்க்கையை பரிகொடுத்த முஸ்லிம்கள் பல ஆண்டுகளுக்கு பிறகு நிரபரா திகள் என்று விடுவிக்கப்படும்போது அங்கே இவர்களின் புலன்விசாரணை தோற்றுப்போயின, இன்னும் இவர்களின் ஸ்னேகித குற்றவாளிகள் தப்பியும் விடுகின்றனர்.

மேலும் இவர்களின் இந்த நரித் தனத்தை மறைப்பதற்காக இப்போது இவர்கள் எடுத்திருக்கும் ஆயுதம் தான் பல ஆண்டுகளுக்கு பிறகு விடுதலைக்காக காத்திருக்கும் அப்பாவி முஸ்லிம்களை சிறையிலிருந்து தப்பிக்க நினைத்தனர் என்று கூறி அவர்களை அழைத்துச் சென்று என்கவுண்டர் செய்து அத்துனை உண்மைகளையும் வெளிவராமல் குழித் தோண்டி புதைக்கின்றனர்.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனையும் கடிக்க வந்துவிட்டது என்று கூறும் பழமொழிக்கேற்ப வட மாநிலங்களில் தங்கள் புலனாய்வு பயங்கரவாதத்தை செய்தாற்போல் இன்று அமைதிப் பூங்காவாக திகழும் தமிழ் நாட்டையும் தங்கள் கட்டுக்குள் வைக்க நினைக் கின்றனர். சினிமா கூத்தாடிகள் மூலம் தமிழ் நாட்டை தீவிரவாத பூமியாக காட்டிய இவர்கள் தாங்கள் வைக்கும் குண்டுகளுக்கு தமிழக முஸ்லிம்களை பலிகிடாக்கள் ஆக்கும் பணிகளையும் தொடங்கிவிட்டனர்.

2006–ல் கோவை எஸ்.ஐ.யு.வைச் சேர்ந்த டி.எஸ்.பி. ரத்தின சபாபதி வைகறை வெளிச்சம் பத்திரிகையின் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்களால் நடத்தப்பட்டுவந்த முன்னால் மனித நீதி பாசறையின் பெயரால் குண்டு வைத்தார். ஆசிரியரின் சீரிப்பாய்ந்த நடவடிக்கையால் அங்கே டி.எஸ்.பி. ரத்தினசபாபதியின் முகத் திரை கிழிந்தது அங்கே உளவுத்துறையின் பயங்க ரவாதம் அம்பலமானது. அதுமட்டுமில்லாது வீரமகன் கர்கரே–யின் உளவுத்துறை கொலை பாதகத்தை நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத் தின் சார்பாக வெளிக்கொண்டு வரப்பட்ட தால்



ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை இந்தியாவிலி ருந்து அகற்றப்பட்டது.

உளவுத்துறைகளால் உருவாக்கப்பட்ட பெயர்கள் கொண்ட இந்தியன் முஜாகிதீன், டெக்கான் முஜாகிதீன் எல்லாம் பொய்த்துப் போனதால் பைப் வெடிகுண்டுகள் பெயராலும், இந்து தலைவர்கள் கொலைகள் பெயராலும் தமிழக முஸ்லிம் இளைஞர்கள் பொய் வழக்குகளில் புனைக்கப்படுகின்றனர். புதிய தலைமுறை தொலைக்காட்சி அலுவலகத்தில் டிபன் பாக்ஸ் குண்டு வீசிய ஹனுமன் சேனா தீவிரவாதிக்கு பிணை கிடைத்தது. ஆனால் பைப் வெடிகுண்டு வழக்கை புலனாய்வு செய்த எஸ்.ஐ.டி, க்யூ–பிரான்ஞ்ச் போன்ற உளவுத் துறைகள் தங்கள் இஷ்டம்போல் முன்னுக்குப் முரணாக அப்பாவி முஸ்லிம்கள் மீது வழக்கு ஜோடிக்கப்பட்டது என்பது நிரூபனமாகியும் அப்பாவி முஸ்லிம்கள் மீது பொய் வழக்குகளும், விசாரணைகளும் தொடர்கிறது என்பது புலனாய்வு பயங்கர வாதத்தை அங்கே பரைசாற்றுகிறது.

வட மாநிலத்தை போல் இந்துத்துவாக்கள் கலவரத்தை தூண்ட தமிழ்நாட்டில் எங்கு யார் கொலை செய்யப்பட்டாலும் அது இந்து முன்னணியினர்தான் என்று பரப்பப்படுகிறது. அதில் ஒருபடி மேலே சென்று உளவுத்துறையும் முஸ்லிம் இளைஞர்களின் பெயர்களையே கொக் கறித்துக் கொண்டிருக்கின்றது. பின்பு விசார ணையில் இந்து முன்னணியினர் தகாத உறவு களால்தான் இந்த ஜாதி கொலைகள் நடக் கின்றது என்கின்ற உண்மை வெளிவந்தும் அதை மூடி மறைக்க முஸ்லிம் இளைஞர்கள் மீதே வழக்கைப் போட்டு முடிக்கின்றனர்.

கோவை குண்டு வெடிப்பின் போது மூளை யாக செயல்பட்ட உளவுத்துறை தன்னை காப் பாற்றிக் கொள்ள அல்–உம்மா என்னும் அமைப்பை தடை செய்து முஸ்லிம் இளைஞர் களை நிரந்தர சிறைவாசிகளாக்கினர். தன் நிரந்தர சிறை வாழ்க்கையில் இருந்து விடைபெற தன் நண்பர்களின் உதவிகளால் சி.டி.எம். டிரஸ்ட்டை நிறுவி வழக்கை நடத்தி வந்தவர்களையும் விட்டு வைக்க வில்லை இந்த உளவுத்துறை. தற்போது இவர்களால் நெல்லை மற்றும் குமரி மாவட்ட முஸ்லிம் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை பாழ்போனவர்களாய் ஆகி வருகின்றனர்.

குறிப்பாக பா.ஜ.க. பொன். ராதாகிருஷ்ண னின் குமரி மாவட்ட தொகுதி முஸ்லிம்கள் இளைஞர்கள் சுமார் முப்பது பேர் தங்கள் வாழ்க்கையில் பொய் வழக்குகளால் வாழ்வாதா ரங்களை இழந்துள்ளனர். உளவுத்துறையின் கபட நாடகத்திற்கு தக்கலை சார்பு ஆய்வாளர் சுஜித் ஆனந்த், வடசேரி சார்பு ஆய்வாளர் மோகன் அய்யர் போன்றோர் வளைந்து கொடுத்ததால் அவர்களின் உதவியைக் கொண்டு சுமார் எட்டு பேர்கள் மீது தேசிய பாதுகாப்பு தடை சட்டமும், குண்டர் சட்டமும் பாய்ச்சப்பட்டது.

தன் கண்களை மூடிக்கொண்டு இந்த மாபாதக சட்டத்திற்கு தன் ஒப்புதலை அளித்தனர் குமரி மாவட்ட ஆட்சியரும் மற்றும் கண்காணிப்பாளரும் இறைவனின் கிருபையால் எட்டு பேர் மீது உள்ள கொடுஞ் சட்டங்கள் உடைந்து வெளி வரலானார்கள்.

தங்கள் பிணைக்காக சிறையில் காத்திருந்த அந்த அப்பாவி முஸ்லிம்கள் தன் மீது போட்ட பொய் வழக்கை மனித உரிமை ஆணையத்திற்கு எடுத் துரைத்தவர்களை தேர்வு செய்து இவர்கள் மீது 11 பொய் வழக்குகள் வரை சிறையில் இருந்த நிலையிலேயே தொடரப்பட்டது. தன் கண்களை மூடிக்கொண்டு திணிக்கப்பட்ட பொய் வழக்கு களை நீதிபதிகள் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதால் குமரி மாவட்டத்தில் பல முஸ்லிம் இளைஞர்கள் சிறப்புப்படை என்ற பெயரில் உலாவரும் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு தன் வாழ்வின் முடிவு நாளை எண்ணிக்கொள்ளும் அளவிற்கு கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே இதுபோன்ற சம்பவங்களை தமிழக அரசுக்கு நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் மற்றும் வைகறை வெளிச்சம் பத்திரிகை பார்வைக்கு கொண்டுவந்த நிலையில் நெல்லை யில் தொடரும் பொய் வழக்குகளை நோக்கி பயணம் செய்தது நம் பத்திரிகை குழு

சென்னை உயர்நீதிமன்ற மதுரையில் கிளை யில் சில சிறைவாசிகள் வழக்குகளை நடத்திவந்த முன்னால் வழக்கறிஞர் ஜின்னா அவர்களுடன் வழக்கை கவனித்து வந்து தற்போது தனியாக வழக்காடி வந்த வழக்கறிஞர்கள் அக்மல் கஸ்ஸாலி, அப்துல் நிஜாம் மற்றும் ஜார்ஜ் புஷ் ஆகியோரை நெல்லையில் அவர்களின் அலுவல

கத்தில் சந்தித்து நேர்காணல் கண்டது நமது வைகறை வெளிச்சம் பத்திரிகை குழு....

### வழக்கறிஞர் அக்மல் கஸாலி அவர்களின் பேட்டியின் போது

*1.* நெல்லை நீதிமன்றத்தில் வழக்கறிஞராக வழக்காடி வருகிறார்கள். அவர்கள் அங்குள்ள முஸ்லிம் இளைஞர்களின் நிலையை கூறுகையில்... சிறைவாசிகள் அத்துனை பேரும் எஸ்.ஐ.டி மற்றும் க்யூ–பிராஞ்ச் கண்காணிப்பின் கீழ் இருக்கின்றனர்.

*2.* தங்களுக்கு தோன்றும்போதெல்லாம் உளவுத்துறையின் எஸ்.ஐ.டி. மற்றும் க்யூ பிராஞ்ச் இவர்களை விசாரணைக்காக அழைத்துச் செல்வார்கள்.

*3.* சமன்ஸ் தராமல் உளவுத்துறை அழைத்துச் சென்று நிறைய சிறைவாசிகளை தங்கள் இஷ்டம்போல் பெரிய பெரிய வழக்குகளிலும் சிக்க வைக்கப்பட்டுள்ளனர். அதில் சி.டி.எம். நடத்தி வந்த கிச்சான் புகாரியும் அடங்குவார்.

*4.* அவர்கள்மீது பிணையில் வெளிவர முடியாத அளவிற்கு குற்றப்பிரிவுகளை அவர்கள் மேல் சுமத்துகின்றனர்.

*5.* எங்கு என்ன நடந்தாலும் மேலப்பாளையத்தைச் சார்ந்த சிறைவாசிகளை குறி வைத்து விசாரணை என்ற பெயரில் துன்புறுத்துகின்றனர்.

*6.* சமீபத்தில் கோவையில் நடந்த சசிகுமார் கொலை வழக்கிலும் மேலப்பாளையம், குமரி மாவட்ட முஸ்லிம் இளைஞர்களை இணைக்க சதித்திட்டம் தீட்டினர்.

*7.* குமரி மாவட்டத்தில் மேலப்பாளையம் முஸ்லிம் இளைஞர்களின் பெயர்களைச் சொல்லி அவர்கள் குற்றவாளிகள் போல் விசாரணை செய்வது, மேலப்பாளையத்தில் குமரி மாவட்ட முஸ்லிம் இளைஞர்களின் பெயரை கூறி விசாரணை செய்து அதன் மூலம் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

*8.* குமரி மாவட்டத்தை சேர்ந்த சுமார் முப்பது பேரும் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் முப்பது பேரும் தான் தமிழகத்தில் நடந்த அநேக சம்பவங்களுக்கு அத்துணை வழக்கிலும் அதிகமாக புணைக்கப்பட்டுள்ளனர்.

*9.* மேலப்பாளையத்தில் க்யூ–பிராஞ்ச் உளவுத்துறைகளால் வழக்குகளில் புனைக்கப்படும் முஸ்லிம் இளைஞர்களின் நிலையைக் கண்டு மேலப்பாளையம் காவல்துறையினர் இந்த பாவத்தில் நான் விழவுமில்லை, நான் இந்த வழக்கை விசாரிக்கவுமில்லை, எழுதவுமில்லை என்று கூறி வருத்தப்பட்டு ஒதுங்கிக் கொள்ளும் அளவுக்கு அத்துனை அடக்குமுறைகளை க்யூ–பிராஞ்ச் உளவுத்துறையினர் செய்து வருகின்றனர் என்று மிகவும் வருத்தத்துடன் கூறினார்.

சசிக்குமார் கொலை வழக்கில் சிறைவாசி தாசிமை திருச்சியைச் சேர்ந்த க்யூ–பிராஞ்ச் ஆய்வாளர் முருகவேல் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று பெங்களூரு சிறையிலிருக்கும் கிச்சாண் புகாரியின் தலைமையில் நீங்கள் திட்டம் தீட்டி கொலை செய்தீர்கள் என்றும் நாகர்கோவில் நீதிமன்றத்தில்ஓர்பொய்வழக்கில்வாய்தாவாங்கிஅழைத்து வரும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தை சார்ந்த நாகர்கோவில் மாஹீனை குறித்து தகவல் தர வேண்டும் என்று மிரட்டி ஒப்புக்கொள்ள முயற்சித்தார். சாதுர்யமாக வழக்கறிஞர் அக்மல் கஸ்ஸாலி அவர்கள் தாசிமை சமன்ஸ் பெற்று அழைத்துச் சென்றதால் அங்கே க்யூ–பிராஞ்ச் ஆய்வாளர் முருகவேல் சதித்திட்டம் பலஹினமடைந்தது.

தினந்தோறும் இவர்கள் விசாரணை என்று அழைக்கப்படுவதற்கான காரணத்தை நாம் வினவியபோது வழக்கறிஞர் அக்மல் கஸ்ஸாலி அவர்கள் கூறுகையில்...

*1)* மனுக்களை போட்டு இவர்கள் சிறைவாசிகளை சந்தித்தது.

*2.* அழைப்புப் பேசிகள் சிலநேரம் சுவட்ச் ஆஃப் செய்யப்பட்டிருப்பது.

*3.* பாதிக்கப்படுபவர்களுக்கு உதவுவது போன்ற காரணங்கள் தான் இவர்களை வதை சிறையாக்குகிறது என்று கூறினார்.

### நமது அடுத்த பேட்டி வழக்கறிஞர் அப்துல் நிஜாமை நோக்கி சென்றது...

வழக்கறிஞர் அப்துல் நிஜாம் அவர்களிடம் உளவுத்துறை முஸ்லிம் சமுதாயத்துடன் இத்துனை தாழ்ப்புணர்ச்சியாக நடந்து கொள்வதன் காரணமும், ஒரே நபர் பல வழக்கில் சேர்க்கப்படு



வதற்கான காரணத்தை வினவியபோது வழக்கறிஞர் அப்துல் நிஜாம் அவர்கள் கூறுகையில்....

*1.* ஓர் கைது நடத்தப்படும் போதோ அல்லது சோதனை என்ற பெயரில் உளவுத்துறை வரும் பொழுதோ நாம் ஓர் உண்மை கண்டறியும் குழுவை வைத்து உண்மையை உடனே அரசுப் பார்வைக்கு எடுத்துச் செல்லத் தவறுவது ஓர் காரணம்.

*2.* உளவுத்துறைகள் முஸ்லிம்களை எந்நேரமும் தீவிரவாதிகள் போல சித்தரித்து செய்திகளை வெளியிட்டுக் கொண்டே இருப்பது.

*3.* இந்து சமுதாய மக்களை உளவுத்துறையே அச்சத்தில் ஆழ்த்தி மன ரீதியாக இந்துக்களை காப்பாற்ற ஓர் எஸ்.ஐ.டி. அல்லது க்யூ–பிராஞ்ச் ஆல்தான் பாதுகாக்க முடியும் என்ற தோற்றத்தை உருவாக்குதல்.

*4.* Fundamentalist மூலதாரமாய் மதத்தை பின்பற்றுபவன் என்ற தோரணையில் முஸ்லிம்களை பெரிய குற்றவாளியாய் சித்தரிப்பது.

*5.* ஒரு வழக்கில் 15 முதல் 20 நபர்கள் வரை சேர்த்து பெரிய தேச துரோகி போல் காட்டுவது, அந்த 15 முதல் 20 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை சிதைப்பது.

*6.* Fundamentalist (தீவிரமாய் மதத்தை பின்பற்றுபவன்என்றுகூறி அவர்களின்பிணையை கிடைக்க விடாமல் பார்த்துக் கொள்வது.)

*7.* UAPA என்ற கொடிய சட்டங்களை முஸ்லிம்கள் மீது பாய்ச்சி பிணை என்றும் நிரந்தரமாய் கிடைக்காமல் பார்த்துக்கொள்வது.

*8.* எல்லாவற்றிற்கும் மேலாக நீதிபதிகள் சரியாக வழக்கை கவனத்தில் எடுத்துக் கொள்வ தில்லை என்று கூறினார்.

மேலும் வழக்கறிஞர் அப்துல் நிஜாம் கூறுகையில்....

இந்திய சட்டப்படி (ஆர்டிக்கள்25) கூறுகையில்... எல்லோரும் அவர் அவர் மத விதிமுறைகளை கடைப்பிடிக்கவும், பரப்பவும் முழு உரிமை உண்டு என்பதாகும்.

மேலும் தனி நாட்டிற்காகவோ, தனி மத விடுதலைக்காகவோ போராடும் மாவோயிஸ்டோ உல்ஃபாவையோ, போடோலேண்ட் என்னும் அமைப்புகளையோ உளவுத்துறைகள் Fundamentalist (தீவிரமாய் மதத்தை பின் பற்று பவர்கள்) என்று அழைப்பதில்லை.

*9.* ஒருவர் Fundamentalist தன் மதத்தை பரப்ப அல்லது அதை தன் வாழ்வில் கடைபிடிக்க இந்த அரசியல் சாசனத்தில் அனைத்து அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

மனித நேயத்தை மதத்தின் பெயரால் கூறுபோடும் இந்து மதவாத உளவுத்துறையை இந்திய அரசியல் சாசனத்தின் மூலம் சட்டம் இயற்றி நிர்வாக அமைப்புகளை தன் கட்டுக்குள் வைக்க தடை விதிப்பதே உளவுத்துறையின் பயங்கரவாதத்திற்கான ஓர் முடிவுகானல் என்று கூறினாலும் நீதிமன்றங்களும் தங்கள் நீதியினால் இவர்களை தண்டிக்கவோ தடுக்கவோ முன் வர மாட்டார்கள் என்பதே ஜனநாயகத்தின் நிதர்சன உண்மை.

இஸ்லாமிய ஆட்சிக் காலத்தில் அல்லாஹ்வின் சட்டத்திட்டத்தை கொண்டு மதம், இனம், பாராமல் அனைவருக்கும் ஓர் நீதியை பறை சாற்றியதால்தான் இஸ்லாமிய ஆட்சியாளரான உமரின் ஆட்சி இந்தியாவிற்கு தேவை என்று கோட்சேவால் சுட்டுக் கொல்லப்பட்ட மகாத்மா காந்தியும், பாசிச பா.ஜ.க. கொள்கையை எதிர்க்கும் அரவிந்த் கெஜ்ரிவாலும் முன் வைக்கின்றனர்.

இன்ஷா அல்லாஹ் நாம் அப்படி ஓர் ஆட்சியை நிலைநாட்ட உழைப்போம், மனித நேயம் காப்போம்...

– அப்துல் பாசித் மற்றும் ஷேக் ஷமீம்



# ஜல்லிக்கட்டு புரட்சி

கடந்த 2 வருடங்களாக ஜல்லிக் கட்டு நடத்த, எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும், சாமர்த்திய மாக மத்திய பி.ஜே.பி அரசு ஏமாற்றி வந்ததை தமிழக மக்கள் உன்னிப்பாக கவனித்து வந்தனர். கடந்த 4 மாதங்களாக தமிழ்நாட்டின் நலனில் இரட்டை வேடம் போட்டு வந்ததை மீடியாக்கள் மறைக்கவில்லை.

காவிரி, விவசாயிகள் பிரச்சினை, கெயில் திட்டம், மீனவர் பிரச்சினை, கீழடி தொல்லியல் ஆய்வு என்று அனைத்திலும் மத்திய பி.ஜே.பி அரசு மாநில பி.ஜே.பியின் துணையுடன் எடுக்கப் பட்ட பல முரண்பட்ட நடவடிக்கைகள் இடை விடாமல் தமிழகத்தின் மீது நிரந்தர புயலாக வீசிக்கொண்டிருந்தது.

இது எல்லாம் சேர்ந்து, ஜல்லிக்கட்டு விவகாரத்தில் பூகம்பமாக வெடித்துவிட்டது. மக்களின் கண்டனங்கள், கோரிக்கைகள், எதிர்ப்புகள் ஆகியவற்றிற்கு கடந்த 2 வருடங் களாக பி.ஜே.பிக்காரர்கள் - மௌனம் காத்தல், கால தாமதம் செய்தல் போன்ற வழிகளில் ஜல்லிக்கட்டை ஒழிக்க தம் காய்களை திறம்பட நகர்த்தினர். இந்நிலையில் ஜல்லிக்கட்டு போராட்டம், கடந்த 2016 நவம்பர், டிசம்பர் மாதங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்று வந்த நிலையில், இவ்வருடம் 2017 ஜனவரியில் அதன் உச்சத்தை எட்டியது.

ஜனவரி 08ம் தேதி சென்னை மெரினாவில் கூடிய ஜல்லிக்கட்டு ஆதரவு பேரணியில் சுமார் 5000பேர் கலந்து கொண்டது தான் திருப்புமுனை. இக்கூட்டம் ஃபேஸ்புக், வாட்ஸ்அப் மூலமாக திரட்டப்பட்ட கூட்டம். இதில் மாணவர்கள், இளைஞர்கள், ஐடி ஊழியர்கள், ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள் என ஒரு கலவையாய் உருவாகி வேலை செய்தது கண்கள் கண்ட உண்மை.

இதனையடுத்து மறுநாளே மதுரையில் கோரிப்பாளையத்தில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களால் ஒரு போராட்டம் முன்னெடுக் கப்பட்டது. இதில் சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர். சமூக வலைத்தளங்களில் விடப் பட்ட அழைப்புக்கு இவ்வளவு ஆதரவா? என எண்ணும் அளவுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை இருந்தது. இது இரண்டு நாட்கள் நடந்தது.

கடந்த ஆண்டு வரை தீப்பொறியாக இருந்த போராட்டம் இந்த ஆண்டு காட்டுத்தீயாக உருவெடுத்ததை இவ்விரு போராட்டங்களும் உணர்த்தின. இச்சூழலில் ஜனவரி 9, 2017 அன்றைய முதல்வர் பன்னீர்செல்வம் அவர்கள் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் அவசரச்சட்டத்தின் தேவையை உணர்த்தி, மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார். இதே நாளில் இளைஞர்கள் பலர் கூட்டம் கூட்டமாக அலங்காநல்லூர் சென்று வாடிவாசலில் செல்ஃபி எடுத்துச் சென்றனர்.



# யும் பி.ஜே.பி.யும்.

இந்நிலையில் மத்திய சுற்றச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சரான அனில் மாதவ் தவே அவர்கள், "உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப் பின், ஜல்லிக்கட்டு தொடர்பான உரிய நிலைப்பாடு எடுக்கப்படும்" என்று கூறினார். இது தமிழர் களுக்கு எதிரான பி.ஜே.பி அரசின் அசைந்து கொடுக்காத நிலையை உணர்த்திற்று. முதல்வர் பன்னீர்செல்வம் ஜனவரி 9 அன்று, தான் அனுப் பிய கடிதத்தை மேற்கோள் காட்டி, இதுவரை மத்திய அரசு எந்த பதிலும் அளிக்கவில்லை என்பதோடு மாநில அரசே அவசரச் சட்டத்தைக் கொண்டு வரலாம் என சொன்ன முன்னால் உச்சநீதிமன்ற நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூவின் கருத்துக்கு பிராணிகள் வதைத் தடுப்புச்சட்டத் திற்கு புறம்பாக எந்த ஒரு சட்டத்தையும் தமிழக அரசால் இயற்ற முடியாது என்றார் (தி இந்து ஜனவரி 12 2017 பக்கம் 7).

ஜல்லிக்கட்டு தடையை எதிர்த்த தமிழக மக்களின் போராட்டத்தில் எல்லாதரப்பு மக்களும் கலந்துகொண்டனர். மாற்றுத்திறனாளி களும் ஊர்வலத்தில் கலந்து தங்களது ஆதரவை தெரிவித்தனர். தமிழகத்தின் எல்லா பகுதிகளும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. தங்களுக்கு மத்திய பி.ஜே.பி அரசால் ஏற்பட்டிருக்கும் அவமானங்களை தாங்க முடியாமல் வெடித்துக் கிளம்பிக் கொண்டிருந்தனர் தமிழர்கள்.

தமிழ்நாட்டில் பி.ஜே.பி தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான பொன். ராதா கிருஷ்ணன் "அதிமுக, திமுக, காங்கிரஸ் கட்சிகளை துடைத்து எறிந்துவிட்டு தமிழக மக்கள் பொங்கலை கொண்டாடினால் 50 ஆண்டு அவலம் நீங்கி நல்லகாலம் பிறக்கும், ஜல்லிக்கட்டு கட்டாயம் நடக்கும்" என்றார் - (தி இந்து ஜனவரி 13 பக்கம் 4).

இது தமிழக மக்களின் கருத்துச் சுதந்திரத் திற்கும் தேர்தலில் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத் திற்கும் விடப்பட்ட அச்சுறுத்தல் என்பதை புரிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. பி.ஜே.பி யின் நோக்கத்தை இத்தகைய சொற்கள் மிக தெள்ளத்தெளிவாக காட்டின. ஒற்றை கட்சி ஆட்சியை நோக்கிய பி.ஜே.பி ன் திட்டத்திற்கு ஜல்லிக்கட்டு பலியாகிறது என்பதை இது தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

நெருக்கடியை கொடுத்து, அதன் பயன்களை அறுவடை செய்த பிறகு தான் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற சர்வாதி கார குணம் இதிலிருந்து வெளிப்படு வதை தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழனாலும் உணர முடிந்தது. எறியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் இரு அறிவிப்புக்கள் டெல்லி யிலிருந்து வந்தது.

*12-1-2017* வியாழன் அன்று "சனிக்கிழமைக்கு *(14-01-2017)* முன்னதாக தீர்ப்பு வழங்க முடியாது. மேலும் நீதிமன்றத்திற்கு நெருக்கடி தருவது நியாய மற்றது" என ஜல்லிக்கட்டு விவகாரத்தில் பொங்கல் நெருங்கிய சமயத்தில் உச்ச நீதிமன்ற் நீதிபதிகள் தீபக் மிஸ்ரா ஆர்.பானுமதி அடங்கிய அமர்வு கூறியது.




*19-1-2017* வியாழன் அன்று மோடி, பன்னீர்செல்வத்திடம், "ஜல்லிக் கட்டு விஷயத்தில் அவசரச் சட்டம் பிறப்பிக்க இயலாது" என்று கூறி தன் மத்திய அரசின் நிலைப் பாட்டைச் சொல்லி தட்டிக்கழித்தார். மேலும் இந்த விஷயத்தில் தமிழக அரசு அவசரச்சட்டம் தயாரித்தால் மத்திய அரசு தலையிடாது என்றும் கூறி தன் ஆர்.எஸ்.எஸ் சகாக்களின் அழுத்தத் திலிருந்து தப்பிக்க வழி அமைத்துக் கொண்டார்.

மத்திய அரசால் மட்டுமே சட்டத்தை கொண்டுவர முடியும் என்ற எண்ணத்தில் இருந்த போராட்டக்காரர்களின் மனங்களில், மோடியின் 52 இன்ச் மார்பளவு அறிவிப்பு, இதன் எதிரொலியே, மதுரையில் மதியம் 02.30மணியளவில் இரண்டு பயணிகள் ரயிலை மறித்து ஆர்ப்பாட்டம் செய்ய காரணமானது. இனி மத்திய அரசுக்கு மத்திய அரசுத் துறைகளில் ஆர்ப்பாட்டம் செய்வதன் மூலம் தான் தங்கள் ஜல்லிக்கட்டு உறுதியை காட்டிட முடியும் என்னும் முடிவுக்கு மாணவர்கள் வந்திருப்பதை இது உணர்த்தியது.

உண்மையில் இவர்கள் இரயிலை மறிக்க வில்லை, டெல்லியை மறித்து நிறுத்தினார்கள் போராட்டக்காரர்கள். இது அவர்கள் தங்கள் போராட்ட கோஷங்களை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்பதை தமிழக மக்களுக்கு கற்றுக் கொடுத்தது.

**"ஊர் சுற்றும் மோடி - மெரினா பக்கம் வாடி"**
**5 பைசா முறுக்கு - பீட்டாவை நொறுக்கு**
**கூந்தலை கட்டு - பீட்டாவை வெட்டு**

போன்ற கோஷங்கள் பி.ஜே.பி யையும் அது மௌனமாக இருந்து ஆதரிக்கும் பீட்டாவையும் குறி வைத்தன.

தன்னெழுச்சியான போராட்டத்தில் கலந்து கொண்ட பெரியவர் முதல் சிறியவர் வரை பி.ஜே.பி யையும் அதன் தலைவர்களையும், பீட்டாவையும் மென்று துப்பினார்கள். அந்த அறிவிப்புக்கு பிறகு மக்கள், மோடிக்கும், பீட்டா வுக்கும் பாடை கட்டி போராட்டம் நடத்தினர்.

இவ்விரு அறிவிப்புகளுக்கு இடையேயான காலகட்டத்தில் தமிழகம் முழுவதும் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் இதுவரை தமிழகம் காணாத வகையில் அமைந்தது. பட்டி தொட்டிகளில் எல்லாம் தங்கள் மீது மக்களுக்கு வெறுப்பு பரவியிருப்பதை உணர்ந்தது பி.ஜே.பி. சில மாநிலங்களில் பி.ஜே.பி அதர்ம வழிகளில் தன் அரசுகளை உருவாக்கியது போல் தமிழ் நாட்டில் அதிமுகவை உடைத்து உருவாக்க நினைத்த பொழுதில் பி.ஜே.பிக்கு எதிர் உணர்வு கொண்ட ஜல்லிக்கட்டு போராட்டம் பெரும் இடியாக இறங்கிவிட்டது.

தெருவில் இறங்கி போராடினால், பொதுமக் களுக்கு பாதிப்பு என்று கூறிக்கொண்டு காவல் துறையும் அரசும் கடுமையான நிலையை எடுக் கும். இதற்கு மாறாக, போராட்டம் குறிப்பிட்ட மைதானங்களை நோக்கிச் சென்றதன் மூலம், காவல் துறையையும், அரசையும் ஒரு முட்டுச் சந்தில் நிறுத்திவிட்டார்கள் தமிழ் இளைஞர்கள். இக்கூட்டத்தை அதர்ம வழியில் கலைக்க சரியான பொருத்தமான பொய்க் காரணத்தை உருவாக்கிட வேண்டும் என்ற நிலைக்கு பி.ஜே.பி தள்ளப்பட்டது என்பதை பின்னாளில் நடந்த

சம்பவங்கள் வரலாற்றில் சாட்சியங்களாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அடுத்தடுத்த நாட்களில் நடைபெற்ற, பெரும் தன்னெழுச்சிப் போராட்டத்தை சமூக விரோத, தேச விரோத போராட்டமாக சித்தரிக்க வேண்டிய அடிப்படை வேலைகளை செய்ய முற்பட்டது பி.ஜே.பி. “சமூக விரோதிகள் கூட்டத்தில் நுழைந்து விட்டார்கள்” என பொன்.ராதா கிருஷ்ணன் கூறியது சந்தேகத்தை கிளப்புகிறது. (தி இந்து ஜனவரி 19, 2017 பக்கம் 6)




இதை 18ம் தேதியன்றே பரப்ப ஆரம்பித்து விட்டனர். பொன். ராதாகிருஷ்ணனின் இக்கூற்றையே திட்டமாக

எடுத்துக்கொண்டு போராட்டக்காரர்களாக காவி பயங்கரவாதிகள் ஊடுருவிவிட்டனரோ என்று ஐயம் கொள்ளும் விதமாக சமூக வலைத் தளங்களில் பதிவுகள் இடம்பெற்றிருந்தன. உதாரணமாக, பி.ஜே.பி-ன் மாணவர் அணியான ABVP யினர் போராட்டக்காரர்களாக ஊடுருவியுள்ளனர் என்ற எச்சரிக்கை செய்தியை, 20ம் தேதி வேகமாக சமூகத் தளங்களில் பரவிக் கொண்டிருந்ததை வைத்து புரிந்து கொள்ளலாம். (தி டைம்ஸ் ஆப் இந்தியா ஜனவரி 21, பக்கம் 3). அதன் பின்னர் போராட்டத்தில் நடந்த கலவரம் பி.ஜே.பி யின் திட்டமாக இருக்க வேண்டும் என்பதற்கு இதைவிட பெரிய சான்று தேவையில்லை.

வரலாறுகளில்படிப்பினைபயிலாத, அனுபவமில்லாத இந்த மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் “சமூகவிரோத தேசவிரோத” போன்ற சொற்கள் குழப்பத்தை விளைவிக்கும் என்கிற பி.ஜே பியின் தந்திரம் எடுபடத் தொடங்கியது.

தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர் தான் நமக்கு கவர்னராக உள்ளர். இவர் பி.ஜே. பிக்காரர். இவர் மாநில அரசை கண்காணிப்பவர். இது தமிழக பி.ஜே.பிக்கு வசதியாக அமைந்துவிட்டது.

காந்தியை கொலை செய்த கோட்சே இதே கூட்டத்தைச் சேர்ந்தவன் தான். தன் கையில் இஸ்மாயில் என்று பச்சை குத்திக்கொண்டு பிரச்சினையை திசை திருப்பினான் கோட்சே. இப்படி செய்வது காவி பயங்கரவாதிகளின் இயல்பு.

1998 கோவையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த வன்முறையில் போலீஸ் துப்பாக்கி குண்டுகளுக்கு 19 முஸ்லிம்கள் கொல்லப்பட்டது நாடறிந்த உண்மை. இவ்வன்முறையில் போலீசுக்கு துணையாக பின்புலமாக இருந்து, காவி பயங்கரவாதிகள் முஸ்லிம்களை வேட்டையாடினர். போலீஸாருக்கும் காவிகளுக்கும் இடையேயான கூட்டு வெளிப்பட்டது. சொத்துக்களை சூரையாடினர். இத்தகைய அனுபவத்தை, பயிற்சியை இப்போது பயன்படுத்தி இருக்கிறார்கள்- காவி பயங்கர வாதிகள் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது.

சென்னையில் பல்வேறு இடங்களில் நடந்த கலவரத்தில், குறிப்பாக நடுக்குப்பம் பகுதிகளில் போலீஸாருடன் சீருடை அணியாமலும் சீருடையணிந்தும் சந்தேகப்படியான சில நபர்கள் வன்முறையில் ஈடுபட்டதை நம்முடைய தொலைக்காட்சிகளும் பத்திரிக்கைகளும் ஆதாரத்துடன் காட்டின. சமூக வலைத் தளங்களும் பரப்பின. இதில் காவிகளின் பங்கு பற்றியும் விசாரிக்கப்படவேண்டும்.

இந்நிலையில் புத்தம் புதுவாக மாணவர் போராட்டத்தை அழித்தொழிக்கும் விதமாக அன்றைய தமிழ்நாட்டின் முதல்வர் பன்னீர் செல்வம் அவர்கள் ஒசாமா பட பிரச்சினையை சட்டசபையில் கிளப்பி பி.ஜே.பியை சந்தோஷப் படுத்தியுள்ளார். இது கவலைக்குரியது. ஆதாரமற்ற செய்தியை பரப்பி சமூகத்தில் வன்முறையை விதைக்கும் காவிகளின் தந்திரம் இப்போது பன்னீர்செல்வத்தின் கையில் தவழ்ந்தது.

ஜல்லிக்கட்டு போராட்டத்தை தேசவிரோத சமூகவிரோத போராட்டமாக திசைதிருப்ப, காரணமாக அமைக்கப்பட்டது ஆதித்ய ராமசந்திர வெங்கடாபதி என்கிற ஹிப் ஹாப் தமிழா ஆதி என்ற இசையமைப்பாளரின் சமூக வலைத்தளம் தான். இவர் ஜனவரி 16, 17ல் அலங்காநல்லூரிலும், 18ம் தேதி சென்னை மெரினாவிலும் 19ம் தேதி கோவையிலும்

போராட்டத்தில் கலந்து கொண்டதாக தெரிவித்துவிட்டு கோவை போராட்டத்தில் (கவனிக்க வேறு எந்த மாவட்டத்திலும் இல்லை.) தேச விரோத பேச்சுக்களும் மத்திய அரசை வசைபாடியும் மோடியை அசிங்கமாக பேசிய உணர்ச்சிகரமான பேச்சுக்களை குறை கூறி சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார். (தினமணி, தினமலர், தி இந்து ஜனவரி 23).

இதை மறுத்து சினிமாத் துறையைச் சேர்ந்த சமுத்திரக்கனி அறிக்கை விட்டார். "போராட்டம் சரியாகச் செல்கிறது. போராட்டத்தில் உடன் பாடு இல்லாத பட்சத்தில் அமைதியாக இருந்து, சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும் என்றார்". (தினமணி ஜனவரி 23 பக்கம் 4).

ஜல்லிக்கட்டு நடத்தத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்த்து பல இன்னல்களை சகித்து பொறுத் துக்கொண்டு போராட்டம் நடத்தி வந்த மாணவர் இளைஞர்களை மிகவும் கோபப்படுத் தியது, நம் பிரதமர் மோடியின் 52 இன்ச் மார்பளவு அறிக்கைதான். இது 19ம் தேதியன்று மதியம் வெளியானது. இதற்கு பின்னர் தான் போராட்டக்காரர்கள் பி.ஜே.பி-யின் மாற்றாந் தாய் மனப்பான்மையை தங்கள் கோஷங்களால் அடித்து நொறுக்கினார்கள். மோடியை விமர்சனம் செய்தது ஜனநாயகமாக இருந்தும் தேச விரோதமாக ஆதிக்கு தோன்றிவிட்டது.

ஜனவரி 16 அன்று மதுரை அலங்காநல்லூரில் 200க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களை கைது செய்ததில் இந்த ஆதி இல்லை. ஆனால் போராட்டத்தில் கலந்து கொண்டதாக கூறினார்.

பி.ஜே.பி காரர்களின் முந்தானையை பிடித்துக்கொண்டு கடந்த 2 ஆண்டுகளாக ஆதியை உள்ளடக்கிய சட்ட போராட்ட ஜல்லிக் கட்டு குழுவால் ஒன்றும் சாதித்துவிட முடிய வில்லை. பொன். ராதாகிருஷ்ணன் நன்றாகவே ஏமாற்றி வந்தார். எவ்வளவு குட்டினாலும் குட்டு படுவோம் என்ற ரீதியில் தான் இக்குழு தொடர்ந்து பி.ஜே.பிக்கு பின்னாலேயே திரிந்தது. ஜல்லிக்கட்டு தடையை நீக்க முடிய வில்லை. இவர்களின் தாஜா செய்யும் அணுகு முறை தீர்வாக அமையவில்லை.

ஆனால் மாணவர், இளைஞர்களின் தாஜா செய்ய விளையாத, எதிர்ப்பு உணர்வு கொண்ட போராட்ட போக்கும், கோஷங்களும் தான் ஜல்லிக்கட்டு தடையை உடைக்கும், உடைத்தது என்பதை பி.ஜே.யின் வாலாக இயங்கிய ஆதி யால் சகிக்க முடியவில்லை போலும். வெறும் தாஜா செய்வதிலேயே இரண்டு வருடங்களை கழித்தனர் இக்குழுவினர்.

ஏமாற்று வேலை, கபடநாடகம் போடும் பி.ஜே.பி யை சுற்றிச்சுற்றி வந்தனர். சில முயற்சி கள் செய்து, அதன் பலன் பூஜ்ஜியம் ஆகும் போதெல்லாம் புலம்பத்தான் இவர்களால் முடிந்தது. காவியின் புதிரை இவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. இவர்களே காவிக்குள் கரைந்து போய் விட்டார்களோ என்று எண்ணும் படியாக இருந்தது இவர்களின் அறிக்கைகளும் சமூக வலைத்தள பதிவுகளும். சும்மாவா? இரண்டு வருட தொடர்பு இவர்களை காவி சிந்தனை உள்வாங்கிக் கொண்டது என்பதற்கு இவர்களின் பேச்சுக்களே ஆதாரமானது. மீண்டும் மீண்டும் நீதிமன்றத்தை கைகாட்டியே காலந்தாழ்த்தி ஏமாற்றி வந்த பி.ஜே.பியை நம்பிய ஆதி, ஜல்லிக்கட்டு மாணவர் போராட்டத்தின் முடிவில் செல்லாக்காசாகிவிட்டார்.

மெரினாவில் கூடிய ஜல்லிக்கட்டு புரட்சியில் மக்கள் 100க்கும் மேற்பட்ட குழுக்களாக கூடி ஆர்ப்பரித்தனர்.

மாணவர்களும் சிறுவர்களும் பெண்களும் பெரியவர்களும் கூடிய கூட்டத்தில் ஜல்லிக் கட்டு மைய கோரிக்கையாக இருந்தாலும் இப்பிரச்சினையின் வரலாற்றை ஆணிவேறை அவரவர் தெரிந்த அளவில் பேசினார்கள். ஜல்லிக்கட்டு தென் மாவட்டங்களில் அதிலும் குறிப்பாக சில பகுதிகளில் மட்டும் வீர விளை யாட்டாக அறியப்பட்டிருந்த நிலையில், இதற் காக கூடிய இப்பெருங்கூட்டம் சுதந்திர இந்தியா




வில் தமிழகத்திற்கு செய்யப்பட்ட துரோகம், ஓரவஞ்சனையையும் சேர்த்தே அசை போட்டார்கள். மத்திய அரசின் துரோகத்தையும் மாநில அரசின் கையாலாகாத் தனத்தையும் கையில் எடுத்தவர்கள், டெல்லியில் தமிழர் நலனுக்கு எதிரான பி.ஜே.பியின் போக்கு, அதற்கான தீர்வு என பல விஷயங்கள் இப்போராட்டத்தில்

பேசினார்கள் என்பது உலகறிந்த உண்மை. இத்தோடு வீர விளையாட்டுக்கள், தமிழ் மொழி, வரலாறு, நம் பொருளாதாரம் சுரண்டப்படும் விதம் என பல கிளைகளாக பரந்து விரிந்து விவரிக்கப்பட்டதை மீடியாக்கள் நமக்கு உணர்த்தின. இதில் கருத்து வேறுபாடு கொண்டவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

கருத்து வேறுபாடுகளை அங்கீகரிக்கும் முகமாகவே பல கட்சி ஆட்சி முறையையும் பின்பற்றி வருகிறோம். ஒற்றைக்கட்சி, ஒற்றை கலாச்சாரம் என்பதெல்லாம் நம்மிடையே இல்லை. அது இயற்கைக்கு முரணானது, வன்முறையானது.

சர்வாதிகாரத்திற்கு இழுத்துச் செல்லக் கூடியது. அதனால் தான் கருத்து வேறுபாடு கொண்ட கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்ட போதும் மாணவ இளைஞர்களின் ஜல்லிக்கட்டு புரட்சியில் எவ்வித உள்மோதல்களும் நடைபெறவில்லை. அவரவர் கருத்தில் நின்று பிறர் கருத்துக்களை சகித்துக் கொண்டதாகவே நாம் அறிய முடிகிறது. இதற்கு சில நாட்களாக போராட்டம் நடைபெற்றதும் அது தன் கட்டுக்கோப்பை இழக்காமல் இருந்ததே போதுமான ஆதாரமாகும். இதை பொறுக்காமல் ஒற்றை கலாச்சாரத்தை வலியுறுத்துபவர்கள், சிலர் நாச வேலைகளை செய்ய துணிந்து போலீசை ஏவிவிட காரணமானார்கள் என அமைதியின் மீது அக்கறையுள்ளவர்களால் பேசப்பட்டு வருகிறது.

முதலில் நான் தமிழன் அதற்குப் பிறகு தான் இந்தியன் என்ற பேச்சுக்கள் கூட சமூக விரோத பேச்சுக்களாக மாற்றப்பட்டதை மக்கள் கவனிக்கத் தவறவில்லை. அரசியல் அமைப்புச்சட்டம் எங்களின் புனித நூல் என்றார் மோடி. தம்முடைய ஆதிக்க நோக்கங்கள் ஒவ்வொன்றையும் சட்டத்தின் வழியே நுழைத்து, நீதிமன்ற வாதங்கள் வழி அதை உறுதிசெய்து, அரசியல் சட்ட சாசனத்தை விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட புனித நூலாக மாற்றுவதன் வழியே ஆதிக்கத்தை, சட்டபூர்வமாக்குவதை மிக நேர்த்தியாக திட்டமிடப்பட்ட நுட்பமான அரசியல். தமிழக இளைஞர்கள் இன்று அறிந்தோ அறியாமலோ எங்கே தம் கையை வைத்திருக்கிறார்கள் என்றால், அங்கே வைத்திருக்கிறார்கள். ஒரு வகையில் அவர்கள் நடத்திக் கொண்டிருப்பது சட்ட மறுப்பு இயக்கம்.

மக்களை மீறிய சட்டம் ஒன்று இல்லை எங்களுக்கு ஏற்றபடி சட்டத்தை மாற்று. அதையும் உடனே செய் என்று விடாப்பிடியாக உட்கார்ந்து நாட்டுக்கே முன்னுதாரணமாக ஒரு அவசரச் சட்டத்தை கொண்டு வர வைக்கிறார்கள் என்றால் அடிப்படை செய்தி தெளிவானது.

"டெல்லி தன் ஆட்டத்தை விடாதவரை, தமிழகமும் தன் ஆட்டத்தை விடவே விடாது". (தி இந்து ஜனவரி *22* பக்கம் *11* சமஸ் கட்டுரையிலிருந்து..)

ஏறு தழுவி அடக்கியவன், வடக்கை அடக்க துணிந்தான். வென்றான்.

**- நன்றி விகடன்**

## கொலை செய்யப்பட்டவர்களின் வழக்கறிஞர் பேட்டி

போபாலில் அக்டோபர் 31–2016 அன்று காலையில் 8 இளம் முஸ்லிம்கள் மோடி வகையறா இந்துத்துவா ஆட்சியாளர்களால் படுகொலை செய்யப் பட்டார்கள். இவர்களை சிமி என்ற (Simi Students Islamic Movement of India) இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பின் உறுப்பினர்கள் என்று கூறினார்கள்.

அரசாங்கத்தின் அறிக்கைகள் அவர்களை Simi Terrorist - சிமி தீவிரவாதிகள் என்றே கூறின. ஆனால் The Hindu (Eng), Frontline போன்ற பத்திரிகைகள், அவர்கள் தீவிரவாதிகள் அல்ல என்பதைக் கோடிற்றுக் காட்டிடும் அளவில் எழுதினாலும் முதல் நாள் முதலே 'சிமி' உறுப்பினர்கள் (Simi Members) என்றே எழுதின.

ஆனால் அவர்கள் "சிமி" இன் உறுப்பினர்களும் அல்ல – என்கின்றார் அவர்களின் வழக்குகளை நடத்திய வழக்கறிஞர், பர்வேஸ் ஆலம் அவர்கள்.

Front Line : ஃபிரண்ட் லைன் என்ற ஆங்கில இதழுக்கு அவர் அளித்தப் பேட்டியில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார். (FrontLine 25th Nov, 2016)

**கேள்வி** : கொலை செய்யப்பட்டவர்கள் மீதான வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் வழக்குகளிலிருந்து விடுதலையாகும் வாய்ப்புகளே அதிகம். இந்நிலையில் அவர்கள் ஏன் சிறையை உடைத்து வெளியேற வேண்டும்?

**வழக்கறிஞர் பர்வேஷ் பதில்** : இந்தக் கேள்விக்குப் போலீஸ் பதில் சொல்லிட வேண்டும். நான் அடித்துக் கூறுவேன் அவர்கள் வழக்குகளிலிருந்து விடுதலையாகும் வாய்ப்புகளே அதிகம். ஒரு வழக்கறிஞர் என்ற அடிப்படையில் என்னால் இதை உறுதியாகக் கூறிட இயலும். அவர் "சிமி" இன் உறுப்பினர்கள் என்பதற்கு இதுவரை எந்த ஆதாரமும் காட்டப் படவில்லை.

கண்ட்வா (Khandwa) என்னுமிடத்திலும் 18 பேர் மீது இதேபோல் வழக்குத் தொடரபட்டது. (அவர்கள் சிமி உறுப்பினர்கள் எனக் கூறினார்கள்) அவர்கள் அனைவரும் விடுதலையானார்கள். நீதிமன்றம் சிமி உறுப்பினர்கள் அல்ல என்று சொன்னது. இதேதான் இந்த 8 பேர் பற்றியும் எழும் வினா. இதற்கு அரசு பதில் சொல்லியாக வேண்டும்.



முஜீப் என்பவரும் இப்போது கொலை செய்யப்பட்டவர்களுள் ஒருவர், இவருடைய வழக்குகளில் ஒன்று, அவர் கொலை செய்யப் பட்டு இரண்டு நாள்களுக்குப்பின் வருகின்றது. இந்நிலையில் அவர் ஏன் ஓட வேண்டும்?

**கேள்வி :** இதில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள், தியாகிகள் எப்படி ஷஹீத்கள், எப்படி அடக்கம் செய்யப்படுவார்களோ அதேபோலவே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். வழக்கறிஞர் என்ற அளவில் நீங்கள் சொல்லுங்கள் அவர்கள் குற்ற மற்றவர்களா? அவர்கள் சந்தேகத்திற்கு இடமான வகையில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பது வேறு விவகாரம்.

**பதில் :** கண்ட்வா கிராமத்தை ஒட்டு மொத்த மாக அச்சுறுத்தும் வகையில் ஒரு கொடி நடை. Hag March காவல்துறையால் நடத்தப் பட்டது. ஆனாலும் அவர்களுடைய நல்லடக் கத்தில் 2000 இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டிருக்கின்றனர். இந்தக் கிராமவாசிகள் மிகவும் கோபமாக இருக்கின்றார்கள். கொலை செய்யப்பட்ட எட்டு பேரும் எந்தச் சட்ட விரோதமான அமைப்பிலுமில்லை. இதை யாரும் இன்றளவும் நிரூபிக்கவுமில்லை. அவர்கள் குற்ற மற்றவர்கள். அப்பாவிகள் அவர்கள் குற்ற வாளிகள் என நிரூபிக்கும் வரை எல்லோரும் அவர்கள் அப்பாவிகள் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். Courtesy Frontline Nov. 25, 2016) (இந்த எட்டுப்பேரில் யாரும் இதுவரை எந்த வழக்கிலும் குற்றவாளிகள் என நிரூபிக்கப் படவோ, தண்டிக்கப்படவோ இல்லை) Extracted from மீனாட்சி கங்கூலி, (South Asia Director, Human Rights Watch)

கொலை செய்யப்பட்டவர்களை – காவல் துறையைச் சார்ந்த சிலர் பாலியல் வன் முறையில் பயன்படுத்தியதாகவும், இந்த ஈனச்செயலை அவர்கள் (கொலை செய்யப்பட்டவர்கள்) அடுத்து வரும், நீதிமன்ற விசாரணையில் சொல்லிவிடுவார்கள் என அஞ்சித்தான் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனப் பேசப் படுகின்றது?

இந்த கேள்விக்கு கொலை செய்யப்பட்ட எட்டு பேரின் சார்பில் வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கும் வழக்கறிஞர் பர்வேஷ் ஆலம் தந்த பதில்.

“அப்படி எந்த குற்றச் சாட்டும் என்னிடம் யாரும் சொல்லிடவில்லை. நான்கு மாதங்களாக அவர்களை நீதிமன்றம் அழைத்துவரவில்லை. காணொலி வழியாகத்தான் எல்லா வாய்தாக்களும் நடத்தப்படுகின்றன. (Frontline Nov. 25,2016) (அவர்களுக் கெதிராகப் புனை யப்பட்ட வழக்குகள் பொய்யானவை. அவர்கள் நிச்சயம் வழக்குகளிலிருந்து விடுதலையடைந்து விடுவார்கள் என்பதால்தான் அவர்களைக் கொலை செய்தார்கள் என்பதில் அவர்களின் வழக்கறிஞர் பர்வேஷ் ஆலம் உறுதியாக இருக்கின்றார்.)

இதே கேள்வியை தென்னாசியாவின் மனித உரிமை கழகத்தின் இயக்குநர் மீனாட்சி கங்கூலியிடம் கேட்டபோது அவர் இப்படிப் பதில் சொன்னார்.

“இதேபோல் பல குற்றச்சாட்டுகள் காவல் துறையினர் மேல் இருக்கின்றன. சில வதந்தி களாகவுமிருக்கின்றன. அரசாங்கம், உடனே யே ஒரு விசாரணையை நடத்திட வேண்டும். உண்மைகளை வெளியே கொண்டு வந்திட வேண்டும்” Frontline 25, Nov.2016

CCTV (Cameras (எ) கூர்மையாகப் படம் பிடிக்கும் தொலைக்காட்சிகள் எங்கே? பெரும் விளக்குகள் எங்கே?

இந்த போபாலின் மத்திய சிறையின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் CCTV சி.சி. தொலைக்காட்சி கருவிகள் பொருத்தப்பட்டி ருக்கின்றன. அதேபோல் பீம் ஒளிவிளக்குகளும் பொருத்தப்பட்டி ருக்கின்றன.

ஆனால் அவையெல்லாம் சிறைகளை உடைத்து அவர்கள் வெளியே வந்தபோது வேலை செய்யவில்லை எனச் சொல்லிவிட்டார்கள்.

மும்பை தாக்குதல் 26/11–ன் போதும் மும்பை ரெயில் நிலையத்தில், துப்பாக்கிச் சூடு நடந்த இடத்திலுள்ள 18 CCTV சி.சி.தொலைக் காட்சிகள் வேலை செய்யவில்லை என்றுதான் சொன்னார்கள். அதேபோல் கர்கரேயைக் கொலை செய்த ரங்கபவன் வீதியில் இரவு 11.50 மணிமுதல் மின்சாரம் தடைப்பட்டுப்போனது விளக்குகள் எரியவில்லை?

**– எம்.ஜி.எம்.**



# தாருல் இஸ்லாம் நடத்திய தாஃவா நிகழ்ச்சி



**4-2-2017 அன்று தஞ்சை மாவட்டம் கோமல் என்ற ஊரின் பக்கத்திலுள்ள கதிராமங்கலம் கிராமத்தில் தாஃவா நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. (அல்ஹம்துலில்லாஹ்)**

4-2-17 அன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நம் தாஃவா குழு கதிராமங்கலம் கிராமத்திற்கு சென்றது. அஸர் தொழுகையை பாங்கு சொல்லி சகோதரர் பி. முஹம்மது உமர் அவர்களின் வீட்டில் தொழுதோம். பிறகு மஹ்ரிஃப் தொழுகையையும் நிறைவேற்றினோம்.

நிகழ்ச்சி மாலை 5.00 மணிக்கு ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் அங்கு உள்ளவர்கள் தினக்கூலி வேலை செய்பவர்கள். வேலைக்கு சென்று வீட்டுக்கு வந்ததால் தாமதாக நிகழ்ச்சி இரவு 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

முதல் உரையை சகோதரர் பி. இம்தியாஸ் அஹ்மது அவர்கள் தலித்களுக்கு ஏற்படும் கொடுமைகளையும், அவர்களுக்கு அனுதினம் ஏற்படும் இன்னல்களையும் எடுத்துச் சொல்லி உங்களுக்கு இஸ்லாம்தான் தீர்வு என்று கூறி உரையை நிறைவு செய்தார்.

அடுத்து முஹம்மது ஹாஜி ஜக்கரிய்யா பாய் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

காலங்காலமாக தங்களுக்கு ஏற்படும் கொடுமைகள் மேலும் ஆதிக்க சக்திகள் எப்படி

தங்களை முன்னேற விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இஸ்லாத்தை தங்கள் வாழ்க்கைக்கு நெறியாக ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்ததினால் அல்லாஹ்விடம் உதவியால் நான் ஹஜ், உம்ராவையும் நிறைவேற்றியதையும், இந்துவாக பிறந்து கிடைக்காத சமஉரிமை எனக்கு இஸ்லாத்தில் கிடைத்ததாகவும் 12 மாதத்திற்கும் ஒவ்வொரு சடங்குகளை ஏற்படுத்தி உங்கள் வருமானத்தை வீண் விரயம் செய்யும் மதத்தை விட்டு, கொள்கையை விட்டு, நீங்கள் அனைவரும் ஒரே இறைவனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நீங்கள் இந்துவாக பிறந்தீர்கள், இந்துவாக மரணிக்க வேண்டாம், உங்கள் சந்ததிகளுக்கும் வாழ்வில் முன்னேர வேண்டும் என்றால் இஸ்லாம்தான் தீர்வு என்று கூறி உரையை நிறைவு செய்தார்.

அடுத்து முஹம்மது ஆரிஃப் அவர்கள் (ஓய்வு பெற்ற தாசில்தார்) நான் 25 வருடங்களுக்கு முன்னால் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன். எங்கள் ஊரில் எங்கள் குடும்பம் மிகவும்



வசதியான குடும்பம் என்றும், மேல் சாதியினர் எங்கள் வயலில் வேலை செய்யும் போது என் தாத்தாவை (சம்பளம் கொடுக்கும் முதலாளி) பெயர் சொல்லி அழைப்பார்கள் அதைக்கேட்ட நான் என் தாத்தாவிடம் நீங்கள் ஒரு முதலாளி, உங்களை ஏன் பெயர் சொல்லி அழைக்கின்றார் எனக் கேட்டேன். என் தாத்தா சொன்னார் அவர்கள் மேல் சாதியினர் அதனால் நம்மை அவர்கள் இப்படித்தான் அழைப்பார்கள் என்று கூறினார்.

அப்போது நானும் எனது நண்பர்களும் சேர்ந்து இரவு 1 மணிவரை சாதிக் கொடுமைகளுக்கு எதிராக விவாதிப்போம். அப்படி நாங்கள் விவாதித்து ஒரு மனதாக நானும் எனது நண்பர்களும் மொத்தம் பத்து குடும்பமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டோம். (அல்ஹம்துலில்லாஹ்)

இன்று நாங்கள் எந்த கொடுமைகளும் இல்லாமல் சகோதரத்துவமாகவும், கண்ணியமாகவும் வாழ்கிறோம். எங்கள் குழந்தைகளை நன்கு படிக்க வைத்திருக்கின்றோம். அதே நான் இந்துவாக இருந்தால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்காது. உங்கள் குழந்தைகளுக்கும், உங்களுக்கும் சகோதரத்துவம், கண்ணியம்



கிடைக்க வேண்டுமென்றால் நீங்கள் இஸ்லாத்தை ஏற்றால் மட்டுமே இது சாத்தியம் என்றும் தனது உரையை நிறைவு செய்தார். இறுதியாக பி. முஹம்மது உமர் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

(பி. முஹம்மது உமர் அவர்கள் குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்)


இந்நிகழ்ச்சிக்கு சுமார் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என இதில் நூறு பேர் கலந்து கொண்டனர். இரவு உணவுடன் நிகழ்ச்சி 9.00 மணிக்கு நிறைவு பெற்றது. பி. முஹம்மது உமர் மற்றும் அன்பகம் தாஃவா குழு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

**– கும்பகோணத்திலிருந்து மாஹின்**

எது முதலில்?

# சமுதாய மாற்றம் தனி மனித மாற்றம்

## இவற்றில் எதற்கு முதலிடம் ?



இமாம் யூசுப் அல்கர்லாவி

சீர்திருத்தப்பணிகள் என்று வரும்போது ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு முன்னால் தனி நபர்களை உருவாக்குவதற்கே முன்னுரிமை தர வேண்டும்.

இயக்கங்களையும் அமைப்புக்களையும் மாற்றியமைப்பதற்கு முன்னால் தனி நபர்களை மாற்றியமைப்பதற்கு முதலிடம் தர வேண்டும்.

தனி நபர்களின் பண்புகளில் மாற்றம் ஏற்படுவதையே திருக்குர்ஆன் நமக்கு ஓர் வழிகாட்டுதலாக முன் வைக்கிறது. குர்ஆன் கூறும் வழியில் செல்வதுதானே சிறந்தது.

இதோ குர்ஆன் கூறுகிறது.... எந்த சமுதாயத்தையும் அல்லாஹ் மாற்றுவதில்லை. அவர்கள் (தனிநபர்கள்) தனது நிலையை மாற்றிக் கொள்ளாதவரை. *(13:11)*

சீர்திருத்தம், புனரமைப்பு, சமுதாய உருவாக்கம் இவை எல்லாவற்றுக்கும் அடிப்படை தனிநபர் சீர் திருத்தமே. சமுதாயத்தை கட்டமைப்பதென்பது தனி நபரை உருவாக்குவதிலிருந்தே தொடங்கு கிறது.

குழப்பமான பலஹீனமான அஸ்திவாரத்தின் மீது எந்தக் கட்டிடம் நிலையாக நிற்க முடியும்?

சமுதாயம் என்ற சுவரில் தனி ஒருவரே முதல் செங்கல். இதனால்தான் ஒரு உண்மையான முஸ்லிமை உருவாக்கவும் பண்படுத்தவும் இஸ்லாமிய அடிப்படையில் அவரை வளர்த்தெடுக்கவும் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றவைகளை விட இதற்கே முன்னுரிமை தரப்படுகிறது. ஏனென்றால் எந்த வகையான சீர்திருத்தம் தனி நபரிடம் மாற்றம் ஏற்படாமல் சாத்தியமில்லை.

நபி மார்களும் அவர்களின் பிரதிநிதிகளும் (கலீஃபாக்களும்) அவர்களின் வழிவந்தோரும் ஆற்றிய முக்கியமான முதன்மையான பணி எதுவென்றால் நல்லொழுக்கமுள்ள தனி நபர்களை உருவாக்குவதே.

ஈமான் எனும் இறை நம்பிக்கையைக் கொண்டுதான் தனி நபர் உருவாக்கம் தொடங்க வேண்டும். தெளிவான குழப்பமில்லாத அகீதா (மார்க்க நம்பிக்கை) அவன் உள்ளத்தில் ஊன்றப்பட வேண்டும். இதுதான் அவனது பார்வையில் தெளிவைக் கொடுக்கும்.

உலகம் மனிதன் வாழ்க்கை பேரண்டத்தின் படைப்பாளன். பரிபாலிப்பவன். மனிதனைப் படைத்தவன், வாழ்வை உவந்தளித்தவன் யார்? என்பதைப் பற்றியெல்லாம் தெளிவைத் தரும்.

மனிதனின் பிறப்பையும் முடிவையும் அவனுக்கு வந்த இறைத் தூதையும் விளக்கிச் சொல்லும்.

நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்வேன்? ஏன் பிறந்தேன்? வாழ்வு என்றால் என்ன? மரணம் என்றால் என்ன? வாழ்வுக் முன்னர் என்ன இருந்தது? மரணத்துக்குப் பின்னர் என்ன இருக்கும்? எனக்கு விபரம் தெரிந்த நாள் முதல் மரணமடையும் வரை பணி என்ன?

இந்தக் கேள்விகளெல்லாம் மார்க்கமற்றவர்களைத் திகைப்புக்குள்ளாக்குபவை.

ஈமான் ! ஆம் இறை நம்பிக்கை மட்டும்தான்

இந்தக் கேள்விக்கு சரியான, முறையான பதில்களைத் தந்திடும். திறனை மனிதனுக்கு வழங்குகிறது.

வாழ்வின் பொருளென்ன? லட்சியமென்ன? பெருமதி என்ன? என்பதையெல்லாம் தெளிவு படுத்தும் எது மாபெரும் லட்சியம் என்பதை உணர்த்தும்.

இந்த ஈமான் எனும் இறை நம்பிக்கை இல்லை எனற்ால் மனிதன் பறக்கும் புழுதி போன்றாகி விடுவான். இந்தப் பாருலகில் அவன் மதிப்பற்ற அற்பனாகி விடுவான்.

ஆம் ஈமான் இல்லையென்றால் மனிதனுக்கு ஏது மதிப்பு!

இந்தப் பென்னம் பெரும் பேருலகில் இருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் ஓர் உடல் அதற்கென ஒரு பருமன் (SIZE) இருக்கிறது. அதுபோல மனிதனும் இருப்பான். இவனுக் கென்ன தனி மரியாதை இருக்க முடியும்!

இப்புவியின் நீண்ட வாழ்வுக்கு ஆயுளுக்கு முன்னால் இவன் ஆயுளெல்லாம் ஓர் ஆயுளா? முடிவற்றுத் தொடரும் காலங்களில் இவன் வாழும் காலம் ஒரு காலமா?

பேரழிவுகளையும் பெரும் உயிரிழப்புக்களை ஏற்படுத்துகின்றபுயல், மழைவெள்ளம், எரிமலை, பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு முன்னால் மனிதனின் வலிமையெல்லாம் ஒரு வலிமையா?

தொழில்நுட்ப வளர்ச்சி, விஞ்ஞான முன் னேற்றம் இவைகளெல்லாம் தன்வசமுள்ளன என்று பீற்றிக் கொள்ளும் மனிதன் இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ள முடியாமல் கையறு நிலையில் பலவீனப்பட்டு நின்கின்றானே!

இப்படிப்பட்ட மனிதனை வலிமை மிக்கவன் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?

ஈமான்தான் நிரந்தரமான பாதுகாப்பு வளையம்.

ஒரு மனிதனை உள்ளிருந்து மாற்றும் வலிமை யும் அந்தரங்கத்திலிருந்து அவனை சீர்திருத்தும் சக்தியும் ஈமானுக்கு மட்டுமே உண்டு.

மனிதன் கால்நடையல்ல. கால் நடைகளைப் போல அவனை ஓட்டிக்கொண்டு போக முடியாது. அவன் இரும்பு, செம்பு போன்ற உலோகமல்ல. ஏதேனும்மொரு கனிமப் பொருளுமல்ல. கருவிகள் செய்வதற்கு அவற்றை உருக்குவது போல் இவனை உருக்கி உருவாக்க முடியாது.

இவன் மனிதன் இவனது சிந்தனையிலும் உள்ளத்திலும் அசைவு ஏற்பட்டால் மட்டுமே இவன் மாறுவான்.




மனிதஉள்ளமும்சிந்தனையும்திருப்தியூட்டப் பட்டால்தான் திருப்தி அடையும் நேர்வழி காட்டப்பட்டால்தான் நேர்வழி பெறும் ஆசை யூட்டப்பட்டால் மகிழ்ச்சி அடையும் அச்ச மூட்டப் பட்டால் மிரளும்.

ஈமான்தான் ஒருவனை இயங்க வைக்கும் அவனுக்கு திசை காட்டும் அவனுக்குள் அபூர்வமான ஆற்றல்களை உருவாக்கும். இது அவனின் உடலில் ஏற்படும் மாற்றமில்லை. உடல் அடிப்படியே தானிருக்கும். ஆனால் அவன் புதிய பிறவியாகி விடுவான்.

புதிய உயிர், புதிய சிந்தனை, வீரம், புதிய தத்துவம் என எல்லாம் புதிதாகிவிடும்.

ஃபிர்அவ்ன் திரட்டிவந்த சூனியக்காரர் களிடம் இதைத்தான் நாம் கண்டோம். மூஸா நபியைத் தோற்கடிக்க அவர்களை ஃபிர்அவன் அழைத்து வந்திருந்தான். அவர்களோ மூஸா நபி நிகழ்த்திய அற்புதத்தைக் கண்ட பிறகு ஈமான் இறை நம்பிக்கைக் கொண்டனர்.



இதைக் கண்ட ஃபிர்அவ்ன் மிரட்டினான். அச்சுறுத்தினான். அவர்கள் கலங்கவில்லை. மிரளவில்லை. ஃபிர்அவ்னுக்கு எதிராக அறை கூவல் விட்டனர். இதோ அவர்கள் எவ்வளவு துணிவுடனும் கம்பீரத்துடனும் எதிர்ச்சவால் விட்டனர் என்பதை அல்லாஹ் கூறுகின்றான் பாருங்கள்...

"நீ (எங்களை) என்ன செய்ய வேண்டுமென்று முடிவு செய்கிறாயோ அதைச் செய். நீ முடிவெடுப்பது எங்களின் உலக வாழ்வைப் பற்றித்தானே" (20:72)

என்ன ஒரு மன உறுதி பார்த்தீர்களா?

இதையே தான் நம் பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்னார்ந்த தோழர்களின் வாழ்விலும் பார்க்கிறோம்.

அவர்களின் ஈமான் அவர்களை அஞ்யானத்திலிருந்து இஸ்லாத்திடம் கொண்டுவந்து சேர்த்தது. சிலை வணக்கத்திலிருந்து மீண்ட அவர்கள் மனித குலத்துக்கெல்லாம் நேர்வழி காட்டியானார்கள். ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் சமுதாயங்களின் மேய்ப்பர்களாயினர். இருள்களில் கிடந்தவர்கள் வெளிச்சத்துக்கு வந்தனர்.

நபி (ஸல்) அவர்கள் பதிமூன்றாண்டு காலம் மக்காவில் ஈமானின் அடிப்படையில் முதல் தலைமுறையை உருவாக்கினார்கள். பிரச்சாரம், நற்போதனைகள் வழியாக முழு முனைப்புடன் இதைச் செய்தார்கள்.

இந்தக் காலக்கட்டங்களில் சமுதாயவியல் சட்டங்களோ குடும்பவியல் சட்டங்களோ விதிகளை மீறுபவர்களுக்கான தண்டனைச் சட்டங்களோ கூறப்படவில்லை.

நபித்தோழர்கள் என்ற ஒருதலைமுறையை உருவாக்கவும் பண்படுத்தவும் தான் திருக்குர்ஆனும் நபி (ஸல்) அவர்களும் அரும்பாடுட்டார்கள். இப்படி உருவாகும் தலைமுறையை வைத்து உலகத்தையே பண்படுத்திட வேண்டுமென்பதற்காகவே இந்த ஏற்பாடு.

"தாருல் அர்கம்" என்ற அர்கம் (ரழி) யின் வீடுதான் ஆரம்பத்தில் இதன் நிலைக்களமாக இருந்தது.

அல்லாஹ்வின் வேதம் திருக்குர்ஆன் ஒரேடியாக மொத்தமாக இறங்கவில்லை. படிப்படியாக கொஞ்சம் கொஞ்சமாகவே இறங்கிற்று.

இதை நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு நிதானமாக ஓதிக் காட்டினார்கள். தானும் இதன் மூலம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டார்கள். இறை நம்பிக்கையாளர்களின் இதயங்களையும் நிலைப்படுத்தினார்கள்.

இணை வைப்பவர்கள் எழுப்பிய முறையான கேள்விகளும் முடக்குவாதங்களுக்கும் பதில் தந்தார்கள்.

முஸ்லிம்கள் என்றொரு சமுதாயத்தை உருவாக்கினார்கள், சீர்ப்படுத்தினார்கள். செம்மைப்படுத்தினார்கள், அழகிய நேரான வழியைக் காட்டினார்கள்.

இதோ அல்லாஹ் கூறுகிறான்... மக்களுக்கு (நபியே) நீர் சிறிது சிறிதாக ஓதிக்காட்டவே

இந்தக் குர்ஆனை நாம் பகுதிப் பகுதியாகப் பிரித்தோம். நாம் அதைப் படிப்படியாக இறக்கி வைத்தோம். (17:106)

இன்னும் கூறுகிறான் பாருங்கள்...

இவருக்கு இந்தக் குர்ஆனை ஏன் ஒரே தடவையில் மொத்தமாக இறக்கப்படவில்லை என்று இறை மறுப்பாளர்கள் கேட்கின்றனர். இதைக்கொண்டு உமது இதயத்தை உறுதிப்படுத் தவே (படிப்படியாக இறக்கினோம்)

அவர்கள் உம்மிடம் எவ்விதமான உவமா னத்தைக் கொண்டு வந்த போதிலும் (அதைவிட) அழகான உண்மையான விளக்கத்தை நாம் உமக்கு (நபியே) தராமல் இருக்கவில்லை. (25:32, 33)

இன்றையக் காலக் கட்டத்தில் நாம் சீர்திருத்தப் பணிகளில் இறங்கினால் முதலில் நாம் கவனிக்க வேண்டியது நல்ல தொடக்கம்.

எங்கிருந்து தொடங்குவது என்பதே நல்ல சீர்திருத்தப் பணியின் முக்கியப்பகுதி.

ஒரு மனிதனை உருவாக்குவதென்றால் தோற்றத்தை உருவாக்குவதல்ல. அந்தரங்கத்தை உருவாக்குவதே.

அவனின் சிந்தனை, ஆன்மா, உடல், குணம் அனைத்தையும் உருவாக்க வேண்டும். இதற்கு ஓர் அளவு உண்டு, அந்த அளவை மீறவும் கூடாது, தரம் குறைந்து விடவும் கூடாது.

நல்லதொரு நாகரீகத்தைக் கொண்டு அவன் சிந்தனையை உருவாக்க வேண்டும்.

வணக்க வழிபாட்டின் மூலம் அவனை ஆரோக்கியமாக வைத்திருக்க வழிகாட்ட வேண்டும்.

நல்ல பயிற்சிகள் மூலம் அவனது உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க வழிகாட்ட வேண்டும்.

ஒழுக்க பண்புகள் மூலம் அவனது குணங்கள் சீர் செய்யப்பட வேண்டும்.

வீரத்தில் ஒரு ராணுவ வீரனாக அவன் உருவாக்கப்பட வேண்டும்.

எல்லோருடனும் கலந்து பழகும் சமூக வாதியாக அவன் சமைக்கப்பட வேண்டும்.

அக்கறையுள்ள ஓர் அரசியல்வாதியாக அவன் திகழ்ந்திட வழிகாட்டப்பட வேண்டும்.

மார்க்கத்தின் அடிப்படையில் உலக வாழ்வை மேற்கொள்பவராக அவர் உருவாக்கப்பட வேண்டும்.

தன்னையும் பிறரையும் சீர்திருத்துபவராக இருந்திட வழிகாட்டப்பட வேண்டும்.

அப்படிப்பட்டவர்தான் ஈருலக இழப்பு களைப் வெல்ல முடியும். இதோ அல்லாஹ் கூறுகிறான்...

“காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். இறை நம்பிக்கைக் கொண்டு நற்பணிகள் செய்து உண்மையைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் பரஸ்பர உபதேசம் செய்து கொண்டோரைத் தவிர” (103 : 1–3)

இதெல்லாம் எப்போது சாத்தியம்? எப்படி கை கூடும்?

ஒற்றை நம்பிக்கை கொண்ட அனைவரும் இதற்காக அழைக்க வேண்டும். அனைவரும் தமது பிள்ளைகளை இப்படி வளர்த்திட, வாழ்த்திடவும் உறுதி எடுத்துப் பணியாற்ற வேண்டும். இதற்கான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

இப்பணியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

பள்ளிவாசல்கள், பல்கலைக் கழகங்கள், நூல்கள், ஏடுகள், தொலைக்காட்சிகள், பரப் புரை கள் என எல்லா வழிகள் மூலமும் நாம் உழைத்திட வேண்டும்.

ஒரு ஏற்பாடு மறையும் போது மற்றொரு ஏற்பாடு வருவதும், ஒன்று அழியும் போது பிரிதொன்றும் உருவாவதுமாக இருந்தால் என்ன சாதிக்க முடியும்!

பழங்காலக் கவிதையொன்று இப்படிச் சொல்கிறது. “நீ கட்டிக் கொண்டிருக்கிறாய் இன்னொருவன் இடித்துக் கொண்டிருக்கின்றான் இந்தக் கட்டிடம் முழுமை பெறுமா?

இப்படி இருக்கக் கூடாது நமது பணிகள். ஒன்றுபட்டு பணி செய்தால் நாம் சிறந்த தலைமுறை உருவாக்க முடியும்.

– தமிழில் இல்யாஸ் ரியாஜி

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?


ஐரோப்பில் நிலவி வந்த இந்த இனவெறி இஸ்லாமிய நாடுகளுக்குள் புகுந்துவிடாமல் தடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பரிதாபம்! பேரிழப்பு! இஸ்லாம் தரும் அமைதி, நிம்மதி ஆகியவற்றை அக்கால உலகில் தேவைப்படும் உலக நாடுகளுக்கெல்லாம் சுமந்து சென்று பரப்பியிருக்க வேண்டிய இஸ்லாமிய நாடும் சிலவற்றுக்குள்ளும் இந்த இனவெறி எனும் நோய் பரவியது.

இன வாதம், தேசிய வாதம் ஆகியவற்றுக்கு எதிராக உறுதியாகப் போராட வேண்டிய இஸ்லாமிய நாடுகள் சில அவற்றை உள் வாங்கிக் கொண்டன. இதற்குக் காரணம் இந்த நாடுகளில் மார்க்கம் சிதைந்து போனதும் மேற்கத்தியக் கலாச்சாரமும் ஐரோப்பிய இலக்கியமும் அங்கே ஏற்படுத்திய தாக்கமும்தான்.

( ஐரோப்பாவிலுள்ள இஸ்லாமிய நாடான) துருக்கியில் 'துராணிய'ச் சிந்தனை நிலவியது. துருக்கியின் பண்டைய அஞ்ஞானமும் அதன் இலக்கியமும் கலாச்சாரமும் பரப்பப்பட்டன.

அரபுக்களின் முயற்சியால் அங்கு பரவிய இஸ்லாமிய மார்க்கமும் அதன் வாழ்க்கை நெறியும் அது கற்பித்த கலாச்சாரமும் அதன் மொழியும் துருக்கிக்கு அந்நியமானவை என்று பார்க்கப்பட்டன. ஆம்! ஜெர்மானியர்கள் எப்படி ஆரியர் கலாச்சாரங்களையும் அதன் மேண்மை மிகு ஒழுக்கங்களையும் கலாச்சாரத்தையும் தமக்கு அந்நியமானவை என்று கருதினார்களோ அதுபோலவே துருக்கியர்களும் இஸ்லாத்தை அந்நிய மார்க்கம் என்று கருதிடத் தலைப் பட்டனர்.



அபுல்ஹசன் அலீ நத்வீ

"இளம் துருக்கி" என்று சிந்திக்கத் தொடங்கிய சிலர், இஸ்லாம் துருக்கியினுள் புகுந்த மார்க்கம் தான் (ஐரோப்பாவின் மார்க்கமல்ல) எனவே அது துருக்கியர்களுக்கு ஏற்றதாக இல்லை என்று நம்பினர்.

துருக்கியர்களெல்லாம் அவர்கள் முன்னோர்கள் இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவிடும் முன்னர் எந்த இணை வைப்பிலிருந்தார்களோ அதே இணை வைப்பை நோக்கித் திரும்புவதே சாலச் சிறந்தது என்றும் நம்பினர்.

புதிய துருக்கியின் சீர்திருத்தச் சிற்பிகளில் ஒருவர் என்று கருதப்படும் "ளியாகோக் அலப்" பற்றி எழுத்தாளர் ஹாலிதா அதீப் ஹானம் கூறுகிறார்.

"தாம் உருவாக்க விரும்பும் புதிய துருக்கிய (இஸ்லாமியவாதிகளான) உஸ்மானியர்களுக்கும் துருக்கியின் முன்னோர்களான துரானியர்களுக் கும் "தாம் உருவாக்க விரும்பும் புதிய துருக்கி (இஸ்லாமியவாதிகளான) உஸ்மானியர்களையும் (இஸ்லாத்துக்கு முந்தைய) துரானிய்யக் கோட் பாட்டை வலியுறுத்துவோரையும் இணைப்ப தாக இருக்க வேண்டும் என்று ளியாகோ விரும் பினார். எனவே அவர் இஸ்லாத்துக்கு முந்தைய துருக்கியின் காலத்தில் இருந்த அரசியல் கலாச் சார அமைப்புக்களிலிருந்து தகவல்களைத்திரட்டி அதன் வழியாக ஒரு கலாச்சார சீர்த்திருத்தம் செய்திட விரும்பினர்.

# இஸ்லாமிய நாடுகளைத் தொற்றிய இனவெறி நோய்.!

மேலும் அவர், இஸ்லாம் அரபுக்களால் இங்கு வந்தது, நம் வாழ்க்கை முறைக்கு அது ஒத்துவராது. எனவே நாம் நமது பழங்கால வாழ்க்கை முறைக்குத் திரும்பாவிட்டாலும் கூடப் பரவாயில்லை. ஆனால் நம் சுபாவத்து ஏற்ப ஒரு மதச் சீர்த்திருத்தம் நமக்குக் கட்டாயம் தேவைப்படுகிறது என்றும் நம்பினர்'' (ஆதாரம் டில்லி ஜாமிஆ மஸ்திய்யாவில் ஹாலிதா அதீப் ஹானம் ஆற்றிய உரை)

துருக்கியின் யாதார்த்த நிலை இதுதான் என்பதில் எந்த ஐயமுமில்லை. இதே நிலைதான் ஈராணியர்களிடமும் பிற்காலத்தில் ஏற்பட்டது.

அமீர் ஹகீப் அஜ்திலான் (ரஹ், 1869–1946) அவர்கள் துருக்கி ''மஜ்லிஸ் உம்மாவின் உறுப்பினர். குருக்கியில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்தவர் என்பதால் துருக்கிகளைப் பற்றிய தகவல்களைக் கூறிடும் தகுயுடையவர். அரபுக்களை பற்றியும் தகவல்களை இவரிடமிருந்து பெறலாம். அவர் கூறுகிறார்...

''துருக்கியில் இரு வகையான குழுக்கள் இருந்தன. முதல் குழு எல்லாவற்றையும் இஸ்லாமிய உஸ்மானிய கண்ணோட்டத்தையே முன் வைத்தது''. மற்றொரு குழு துரானியக் குழு என்றழைக்கப்பட்டது. இது முதல் குழுவுக்கு எல்லாவற்றிலும் மாறுபட்டவாதத்தையே முன் வைத்தது''

''ளியாகோக் அலப், மேலும் ரஷ்யாவிலிருந்து வந்த அஹ்மத் அஒுாயிப் மற்றும் யூசுப் அக்சூரா ஆகிய இருவர், ஜாலல் ஸாஹித், யஹ்யா கமால், ஹம்துல்லாஹ் சுபுஹீ, ரயீஸ் வஜாக், (துருக் பூர்தி) சமுதாயக் கவிஞர் எனப்படும் முஹம்மது அமீன் பேக் இன்னும் ஏராளமான இலக்கியவாதிகள், சிந்தனையாளர்கள், மாணவர்கள், இளந்தலைமுறையினர் ஆகியோர் இந்த இரண்டாம் குழுவின் பிரச்சாரர்களாக விளங்கினர்''.

''இவர்களின் நம்பிக்கை என்னவென்றால், எங்கும் வியாபித்திருக்கும் பண்டைய இனங்களுள் ஒன்றே துருக்கியர்கள் அவர்கள் மேன்மையும் மகத்துவமும் மிக்கவர்கள். தொண்மை மிக்க நாகரிகத்தின் சொந்தக் காரர்கள். இவர்களும் முகலாய இனத்தவரும் ஒரே பூர்வீகத்திலிருந்து தோன்றியவர் என்பதால் இவ்விரு இனங்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் நம்பினர் அத்தோடு இப்படி ஒன்றிணையும் போது ''அல்ஜாமிஅத்துத்துராணிய்யா'' என்றும் பெயர் சூட்டிக் கொண்டனர்''

''இந்தப் பெயரின் கீழ் ஒன்றிணைந்திட வேண்டியோர் சைபீரியா, துகிஸ்தான், சீனா, பெர்சியா கங்காஸ், அனாஜால், ரூமாலி ஆகிய பகுதியில் வாழ்வோர் மட்டுமல்ல அதற்கு அப்பாலும் உள்ளனர் என்று கருதினர்''.

''இந்த ஒருங்கிணைப்பு சீனாவிலுள்ள முகஸ்கள் வரை ஐரோப்பாவிலுள்ள பலான்தீன், மஜர் வரையுள்ள அனைவரையும் உள்ளடக்கும் என்பதே இவர்களின் கொள்கையாக இருந்தது. துராணியின் பூர்வீகத்தைக் கொண்ட அனைத்தும் இந்த ஒருங்கிணைப்பின் வர வேண்டும் என்று விரும்பினர்''.

''அதாவது இவர்கள் முதல் குழுவினருக்கு முற்றிலும் மாறான கருத்துடையவர்களாக இருந்தனர். முதலில் நாங்கள் துருக்கியர்கள். நாங்கள் முஸ்லிம்கள் என்பதெல்லாம் இரண்டாவதுதான் என்று கூறினர் இவர்கள்''

''தம் அன்றாட வாழ்வில் இஸ்லாத்தைக் கடைபிடிக்க மறுப்பதும் இஸ்லாத்தினன் அடிப்படையில் மக்கள் ஒருங்கிணைவதை தடுப்பதுமே இவர்களின் அடையாளம். அதே நேரத்தில் துராணிய இனவாதத்துக்குத் தேவைப்பட்டால் இஸ்லாத்தைப் பயன்படுத்திக் கொள்வர். சுருங்கக் கூறின் இஸ்லாம் இவர்களுக்கு லட்சியமல்ல. அது ஒரு கருவி மட்டுமே''

''இந்தத் துரானிய இனவாதிகள் நாங்கள் துருக்கியர்களே. எங்களின் கஅபாதுரான்தான் என்று கூறிடும் அளவுக்கு மட்டுமீறிப் போயின் செங்கிஸ்கான் பற்றி கவிதைகளைப் பாடி அவரைப் புகழ்ந்தனர். முகலாயர்களின் வெற்றிகளைப் பற்றிப் பேசி புளகாங்கிதமடைந்தனர். முகலாயர்களின் தீய செயல்களைக் கூட



வெறுக்காமல் ஏற்றுக் கொண்டனர்''.

''செங்கியர்களின் சம்பவங்களை வருணித்திடும் கவிதைகளை யாத்தனர். மக்கள் மனதில் அதுதாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தனர். (ஆதாரம் ; நிகழ்கால இஸ்லாமிய உலகம் எனும் நூலுக்கு அமீர் ஷகீப் அர்சிலான் எழுதியுள்ள அடிக்குறிப்புக்கள். பாகம்–1, பக்கங்கள் 158–159)

மேலும் அவர் கூறுகிறார்...

''இது இனவெறி ஆட்டம் போடும் காலம். பாரசீக சமுதாயம் பிற்காலத்தில் ஐரோப்பிய சமுதாயங்களைப் பின்பற்றியதால்தான் பாரசீகத்திலும் இனவெறி முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு மூர்க்கமடைந்தது என்பது வெள்ளிடைமாலை போன்று தெளிவான ஒன்றாகும். துருக்கியர்களிடம் ஏற்பட்டது போன்றதொரு நிலை இங்கு ஏற்பட்டது.

''துருக்கியில் துரானியர்கள் எப்படி தம் முன்னோர்களின் வணக்க வழிபாட்டு முறை கண்டுபிடித்துத் தோண்டித் தொடங்கினரோ அதுபோல பாரசீகர்களில் ஒரு பிரிவினர் தம் முன்னோர்களின் மதத்தை ஆராயத் தலைப் பட்டனர். தம் முன்னோர் வணங்கி வந்த ''வெள்ளை ஓநாய் பற்றியும் ஆராயந்தனர். தமது புதிய நூல்களில் அவ் உருவத்தை வரைந்து வைத்தனர்''.

''ஷைகுல் இஸ்லாம் மூஸா காழிம் அவர்களிடம் ஒருமுறை இப்படிக் கூறியதாக என்னிடம் சொன்னார். : கேட்டாலே மேனி சிலிர்த்திடும் அளவுக்கு (கேலிக்கூத்தான) வழி பாட்டு முறைக் கடைபிடித்து வந்தவர்கள் தாம் அரபுக்கள். ஆனால் இஸ்லாம் கிடைத்த பின்னரே அவற்றை வீசியெறிந்துவிட்டனர். அந்த இழிநிலையிலிருந்து மீண்டுயர்ந்துவிட்டோம். அல்லாஹ்வின் பேருதவியால் நாங்கள் பாதுகாப்பைப் பெற்றுவிட்டோம் என்று அவர்கள் பெருமிதம் கொள்கின்றனர். ஆனால் நீங்களோ இறைவனின் வழிகாட்டுதலை மறந்து விட்டு ''வெள்ளை ஓநாய்'' ஐ வணங்கிடப் போகிறீர்களா? பரிதாபம்''.

''துருக்கியர்கள் போலவே பழைய மதத்தைத் தேடிய பாரசீகர்கள். ''ஒளியை மதித்தல்'' (கியூ மர்திய) என்ற வழிபாட்டைத் தேடினர். ஆராய்ந்தனர். இருளிலிருந்து விடுபடுதல் என்னும் இதைக் கூறினர். இதன் வழியாகத்தான் நெருப்பு வணக்கம் (அக்னி ஆராதனை) பாரசீகர்களிடம் வந்தது''.

''இவர்களில் ஐராதிஸ்த் என்றொரு கூட்டமும் இருந்தது. இது ஏகத்துவக் கோட்பாட்டைப் பிரச்சாரம் செய்தது.''

''இருளையும் ஒளியையும் அல்லாஹ்வே படைத்தான். அவ்விரண்டும் கலப்பதால்தான். நன்மை, தீமைகள் விளைகின்றன. அவை இரண்டும் கலக்காவிட்டால் இந்த உலகமே உண்டாகியிருக்காது என்பன போன்ற நம்பிக்கைகள் பழங்காலத்திருந்த கொள்கைகளும் பயங்கரங்களும் அருவருப்புகளும் அடையாளங்களும் பாரசீகர்களிடம் உயிர் பெற்று வந்தன''.

''ஸனவிய்யா, சராதஸ்தியா, மானவிஸ்யா போன்ற குழுவினரை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இன்னும் சிலரோ நாத்திகத்தையும், பிறயிசத்தையும் கொள்கையாகக் கொண்ட முஸ்தஇய்யா என்ற பிரிவைப் பற்றி ஆராயத் தொடங்கினர்.

– தொடரும்.

தமிழ் வடிவம் இல்யாஸ் ரியாஜி.





# கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய்

**தியவனகோ (Tiahuanaco) நகரத்தில் எஞ்சிய வியப்பூட்டும் வேலைப்பாடுகள்:**

*4000 மீட்டர் கடல் மட்டத்திற்கு மேலே, பொலிவியா மற்றும் பெருவிற்கு இடையே உள்ள எந்தஸ் மலையில் காணப்படும் அழிவுகளால் சூழப்பட்ட இந்நகரம் பார்வையாளர்களை வியப்பூட்டுகின்றன.*

தென் அமெரிக்காவின் தொல்லியல் அதிசய மாக இப்பகுதி கருதப்படுகிறது. உண்மையில் மொத்த உலகத்திற்கும் இது ஓர் அதிசயம்.

தியவனகோ-இல் இருந்து கிடைக்கப்பட்ட காலண்டர் மிகவும் வியப்பை தருகின்றது. இது சந்திரனின் ஓட்டத்தையும் ஒவ்வொரு மணி நேரத்தில் அதன் நிலையையும், சம பகல்-இரவு நாட்களையும் (Equinox) கால நிலைகளை காட்டுகின்றது. அம்மக்கள் உயர்ந்த முன்னேறிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு இக்காலண்டரும் ஒரு சாட்சியாகும். சுமார் 100 டன் எடை கொண்ட மிகப் பெரிய கற்தூண்களிலான சின்னங்கள் மேலும் வியப்பை தருகின்றன.

ரீடர் டைஜஸ்ட் இதழின் ஆசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்:

"இன்றைய உலகின் சிறந்த பொறியாளர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு கேள்வியை கேட்கின்ற னர். அது இந்த நகரத்தை உருவாக்க பயன்படுத் தப்பட்ட பாறைகளை அவர்களால் எவ்வாறு வெட்டவும் நகர்த்தவும் முடிந்தது என்பதே.

உதாரணமாக 100 டன் எடை கொண்ட மணற்பாறையின் மேலே 60 டன் எடை கொண்ட கற்களை வைத்து இந்நகரத்தின் சுவர்கள் எழுப்பபட்டுள்ளன. இம்மாதிரியான சுவர்களை எழுப்புவதற்கு கல் வேலைப்பாடுகளில் நிபுணத் துவம் கண்டிப்பாக தேவை. துல்லியமாக மேற் பரப்பில் செதுக்கி, மிகப் பெரிய சதுர வடிவி லான தூண்களை இணைத்துள்ளனர். 10 டன் எடை கொண்ட (தூண்) கற்களில் 2.5 மீட்டர் நீளத்தில் துவாரங்களை இட்டு வெளி வாசலை ஏற்படுத்தியுள்ளனர்.

சில பகுதிகளில் 1.8 மீட்டர் நீளமும் அரை மீட்டர் அகலமும் கொண்ட துவாரங்களை தண்ணீர் செல்வதற்காக ஏற்படுத்தியுள்ளனர். இன்றளவும் இது போன்றவற்றை காண்பது அரிது. பரிணாமவியலாளர்கள் கூறுவது போல், இவர்கள் தொழில் நுட்பங்களை கொண்டிருக்கா விடில் இது சாத்தியமா?. நாகரீக முதிர்ச்சியற்ற நிலையில் அவர்கள் வாழ்ந்தார்கள் எனக் கொண்டால் இவற்றில் ஒன்றை உருவாக்குவதற்கு ஒரு மனிதனின் ஆயுட்காலத்தை விட அதிக நாட்கள் அவை எடுத்துக் கொள்ளும். அப்படியே கருதினாலும் தியவனகோ உருவாக்க நூற்றாண்டுகள் எடுத்துக் கொள்ளும். இது ஒன்றே போதும் பரிணாம தத்துவம் தவறானது என்பதற்கு.

தியவனகோ -இல் காணப்படும் மற்றொரு முக்கியமான பகுதி "சூர்ய கதவு" Gate of the Sun. என்ற ஒற்றை தூண். இது 3 மீட்டர் உயரமும் 5 மீட்டர் அகலமும், தோராயமாக 10 டன் எடையும் கொண்டது. இக்கதவில் வரை படங்களை கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. எந்த முறையை கையாண்டு இக்கதவை செய்தார்கள் என்பதற்கு எவ்விதமான விளக்கமும் தரப் படவில்லை. எந்த தொழில்நுட்பம் என்றும் தெரியவில்லை. 10 டன் எடை கொண்ட தூண்கள் எவ்வாறு பிரித்தெடுக்கப்பட்டன ? இவை எவ்வாறு கற் சுரங்கங்களில் இருந்து கொண்டு வரப்பட்டன? பரிணாமவியலாளர்கள் கூறும் கருவிகளை விட உயர்ந்த தொழில் நுட்பம் கொண்ட கருவிகளை கொண்டே இவற்றை சாதித்து இருக்க முடியும்.

தியவனகோ நிலவும் புவியியல் நிலையை கருத்தில் கொள்வேமேயானால், இந்த மொத்த அருஞ்செயலும் நமக்கு வியப்பூட்டும். மக்கள் சாதாரணமாக வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் இருந்து பல கிலோ மீட்டர் தொலைவில், கடல் மட்டத்தில் இருந்து 4000 மீட்டர் உயரத்தில் மேட்டு நிலத்தில் இந்நகரம் அமைந்துள்ளது.

இந்த உயரத்தில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் இவ்வேலைகளை செய்வது என்பது மனித முயற்சியை மேலும் கடினமாக்கும்.

இங்கே கூறப்பட்ட அனைத்துமே முற்காலத்தில் உலகத்தின் அநேக பகுதிகளில் வளர்ச்சியடைந்த நாகரீகங்கள் இருந்துள்ளன என்பதை காட்டுகின்றன. மேலும் இவை சமூகங்கள் எப்பொழுதுமே முன்னோக்கியே பரிணாமம் பெறும் எனும் கொள்கையை தவறு என நிரூபணம் செய்கிறது.

**பழங்கால எகிப்து : அறிவியலில் தன்னிறைவு பெற்ற நாகரீகம்**

மனிதன் கண்டுபிடித்த நாகரீகங்களில், கலை மற்றும் அறிவியலில் மிகவும் பிரமிக்க செய்கிற நாகரீகமாக பழங்கால எகிப்து இருந்துள்ளது. சாத்தியமானதை விட அதிக அறிவாற்றலையும் அனுபவத்தையும் பெற்று திகழ்ந்துள்ளனர். நாகரீக வளர்ச்சியடையாத சில சமூகத்தின் வாரிசுகளாகவே எகிப்தியர்கள் இருந்துள்ளனர். அங்கே எகிப்தியர்களுடன் புறச் சமய சார்புகளை பின்பற்றுபவர்களும், யூதர்களும் இருந்துள்ளனர். இறைத் தூதர் நோவா மற்றும் இப்ராஹிம் காலத்தில் இருந்து வளர்ச்சி பெற்ற கலை அறிவுத் திறனை இந்த யூதர்கள் கொண்டிருந்தனர். இவர்கள் அந்த அறிவுத்திறனை பயன்படுத்தினார்கள்.

எகிப்தியர்கள் சாதித்தவற்றை இன்று வரை உலகின் அநேக பகுதிகளில் வாழும் மக்களால் அது போன்று சாதிக்க முடியவில்லை. கடந்து போன காலத்தில் வாழ்ந்த நாகரீகத்தின் நிலையை எகிப்து உட்பட ஆசியாவின் பல்வேறு பகுதிகள், தென் அமெரிக்கா கூட எட்டவில்லை.

மருத்துவம், உடற்கூற்றமைப்பியல், நகர வளர்ச்சி திட்டங்கள், கட்டிடக் கலை, நுண் கலை மற்றும் ஜவுளித் துறை ஆகிய அனைத்திலும் பழங்கால எகிப்தியர்கள் தனித்த முத்திரை பதித்துள்ளனர்.

**பழங்கால எகிப்து மருத்துவத்தின் தோற்றம்:**

பழங்கால எகிப்தில் வாழ்ந்த மருத்துவர்களால் சாதிக்கப்பட்டவைகள் மிகவும் வியப்பில் ஆழ்த்தக் கூடியவை. அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் தொல்பொருள் இயல் ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளன. ஏனெனில் 3000 BCE - ஆண்டில் இப்படியொரு உயர்ந்த மேம்பட்ட தொழில்நுட்பத்தை கொண்ட நாகரீகத்தை எந்த வரலாற்று ஆய்வாளரும் எதிர்பார்த்திடவில்லை.

பழங்காலத்தில் மூளை அறுவை சிகிட்சையும் நடைபெற்றுள்ளன என்பதை மம்மிகளின் X-ரே பகுப்பாய்வு வெளிப்படுத்துகிறது. இந்த சிகிட்சைகள் உயர்ந்த தொழில் நுட்பங்களை கொண்டு நடைபெற்றுள்ளன. மம்மிகளில் சிகிட்சை மேற்கொண்ட மண்டை ஓடுகளை பரிசோதனை செய்யும் போது, அறுவை சிகிச்சையின் போது செய்யப்படும் கீறல்கள் மிக நேர்த்தியாக வெட்டப்பட்டுள்ளதை காண முடிகிறது.

மண்டை ஓடு எலும்புகளை மறுபடியும் ஒட்ட வைத்து அதன் மூலம் நோயாளிகள் அந்த அறுவை சிகிச்சைக்கு பின் நெடு நாட்கள் வாழ்ந்ததையும் அறிய முடிகிறது. 19ஆம் நூற்றாண்டில் சோதனை அறிவியல் (உதாரணமாக நோய் எதிர்ப்பு மருந்து முறை கண்டுபிடிப்பில்) ஏற்பட்ட வேகமான முன்னேற்றத்தின் விளைவாக, மருத்துவ துறை அதன் உச்ச நிலையை அடைந்தது. எனினும் கண்டுபிடிப்பு என்ற வார்த்தை பொருத்தமானதல்ல. ஏனெனில் அப்போதைய பழங்கால எகிப்தியர்களும் இந்த நுட்பங்களை அறிந்தே வைத்துள்ளனர்.

எகிப்தியர்கள் அறிவியலிலும் உடற் கூற்றமைப்பியலிலும் உயர்ந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு சான்றாக அவர்கள் விட்டு சென்ற மம்மிகளை கூறலாம். உடம்புகளை ஆயிரம் வருடங்கள் பாதுகாப்பதற்காக இவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நுட்பங்களை கையாண்டுள்ளனர்.

இந்த மம்மிபிகேசன் முறை மிகவும் சிக்கலானது. முதலில் இறந்தவர்களின் மூளை மற்றும் பிற உறுப்புகளை பிரத்யேகமான கருவிகளை கொண்டு நீக்க வேண்டும். அடுத்த கட்டமாக 40 நாட்கள் நாட்ரான் எனப்படும் உப்பைக் கொண்டு அந்த உடம்பிலிருந்து நீர் வெளியேற்றம் செய்ய வேண்டும்.

(நாட்ரான்- கனிம வகை உப்பு- சோடியம் பை கார்பனேட், சோடியம் கார்பனேட் உடன் சிறிய அளவு சோடியம் குளோரைடு, சோடியம் சல்பேட் இவற்றின் கலவை). அதிகப்படியான நீரை உடம்பிலிருந்து வெளியேற்றிய பின் அந்த வெற்று உடம்பினுள் நார், மணல் அல்லது மரத்தூள்களை கொண்டு நிரப்பபடுகிறது.



உடம்பின் தோல்கள் மூலிகைகளை கொண்டு கழுவப்பட்டு, பின் மேலும் பதனப்படுத்த, அதன் மேல் திரவ ரெசின்கள் தடவப்படுகிறது. இறுதியாக நார் துணிகளை கொண்டு உடம்பு பொதியப்படுகிறது.

மம்மிபிகேசன் முறையில் உடம்பின் தோற்றங்கள் சிதையாமலும் இறந்த உடம்பில் இருந்து உற்பாகங்களை பிரித்தெடுப்பதும் எதை காட்டுகிறது என்றால் இதை செய்தவர்கள் உடம்பினுடைய எல்லா பாகங்களும் எங்கே இருக்கிறது என்ற உடற் கூற்றமைப்பியல் அறிவை பெற்றவர்கள் என்பதே.

மம்மிபிகேசன் தவிர, 5000 வருடத்திற்கு முன்னரே எகிப்தியர்கள் மருத்துவத்தின் இதர பகுதிகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.

உதாரணமாக, மருத்துவத்தில் ஈடுபட்ட குருமார்கள், தங்களுடைய கோவில்களில் வைத்தே அநேக நோய்களுக்கு மருத்துவம் அளித்துள்ளனர். இன்று இருப்பது போல், எகிப்திய மருத்துவர்களும் வெவ்வேறு துறைகளிலும்



சிறப்புத்துவம் பெற்றிருந்தனர். ஒவ்வொரு மருத்து வரும் தங்களுடைய துறைகளில் சேவைகளை புரிந்தனர்.

எகிப்திய மருத்துவர்கள் மாகாணங்கள் வழியாக கண்காணிக்கப்பட்டனர். ஒருவேளை நோயாளியை காப்பாற்ற முடியவில்லை என்றால், மேற்கொண்ட முறைகளில் சிகிட்சை விதிகள் பின்பற்ற பட்டுள்ளதா ? மேலும் அம்முறை தோல்வி அடைந்தது ஏன் என விசாரணை செய்யப்படும். ஒருவேளை சிகிட்சை முறையில் தவறு இழைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சட்டத்தின் அடிப் படையில் மருத்துவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு கோவிலிலும், மருந்துகளை தயார் செய்யவும், பாதுகாக்கவும் அனைத்து கருவிகளை உள்ளடக்கிய சோதனை கூடமும் இருந்தது.

மருந்தியலின் முதல்படியான கட்டுப் போடுதலின் ஆரம்பம் பழங்கால எகிப்தில் இருந்து தான் தொடங்குகிறது. ஸ்மித் பேப்ரஸ் என்பவர் நார்துணிகளை எவ்வாறு காயங்களுக்கு கட்டு போடுவதற்கு பயன்படுத்த வேண்டும் என விளக்குகிறார்.

எகிப்தில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ முறைகளை, தொல்லியல் துறை கண்டுபிடிப்பு கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மேலும் 100க்கும் மேற்பட்ட மருத்துவர்களின் பெயர்களும், அவர்கள் சிறந்து விளங்கிய துறைகளின் பெயர்களும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.


ஹிஜாமா (நபி வழி சிகிச்சை)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "நீங்கள் எவற்றால் சிகிச்சை பெறுகிறீர்களோ அவற்றிலெல்லாம் விட சிறந்தது இரத்தம் உறிஞ்சி (ஹிஜாமா) எடுப்பதாகும்" என்று கூறினாரர்கள். ( முஸ்லிம் )

அல்-கர்ளாவி அக்குபஞ்சர் & ஹிஜாமா கிளீனிக்

இடம் : பாரத் நகர் 4வது வீதி, சாரமேடு, கரும்புக்கடை, கோவை -8.

கிளை : L.M.R. வீதி, சின்ன பள்ளிவாசல் எதிரில், கோட்டைமேடு, உக்கடம், கோவை -1.

உடல் மற்றும் மனம் சம்மந்தமான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஹிஜாமா செய்யப்படும்.

பெண்களுக்கு பெண் தெரஃபிஸ்ட் மூலம் சிகிச்சை அளிக்கப்படும்.

தொடர்புக்கு : எஸ்.உமர் M.DAT., : 96 55 811 811, 97 89 473 999

# "இந்துக்கள் : ஒரு மாற்று வரலாறு"

மதங்களை வகைப் படுத்திப் பார்க்கும் போது, ஆப்ரஹாமிய மதம் என குறிப்பிடப்படும் யூத, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாத்தை செமித்திய மதம் எனவும், இறைத்தூதர்கள் இல்லாத இந்து மதம் போன்ற மதங்களை செமித்திய அல்லாத (non-semitic) மதம் எனவும் குறிப்பிடுகிறோம்.

வரலாற்றெழுத்தியலில் ஈடுபடத் தொடங்கிய காலம் தொட்டு, இந்த மதங்களின் வரலாற்றை அறிந்துகொள்வதில் மனிதர்களுக்கு ஆர்வமும் கரிசனமும் இருந்துவந்துள்ளன. விளைவாக, அவற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் தெரிந்துகொள்ள ஏராளமான முயற்சிகளும் ஆய்வுகளும் நடந்துவந்திருக்கின்றன. அந்த வகையில், நாம் வாழும் நாட்டில் பெரும் பான்மை மதமாய் அறியப்படும் இந்து மதம் பற்றி அமெரிக்க அறிஞர் வெண்டி டோனிகர் எழுதிய நூல், "இந்துக்கள்: ஒரு மாற்று வரலாறு". இது சுமார் 900 பக்கங்களைக் கொண்டது.

வெண்டி டோனிகர் சமய வரலாற்று அறிஞர். சமஸ்கிரதத்திலும் இந்திய ஆய்விலும் முனைவர் பட்டம் பெற்றவர். The Origins of Evil in Hindu Mythology, Splitting the difference : Gender and Myth in Ancient Greece & India உள்ளிட்ட நூல்களை எழுதியுள்ளார். சற்றேறக்குறைய 50 ஆண்டுகள் இந்துமதம் குறித்த ஆராய்ச்சியின் திரட்சியாக "இந்துக்கள்: ஒரு மாற்று வரலாறு" எனும் இப்புத்தகத்தை இவர் எழுதியுள்ளார்.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன், இந்தியாவில் இந்நூலை ஆங்கிலத்தில் பெங்குயின் பதிப்பகம் வெளியிட்டது. வெளிவந்தவுடனேயே இந்நூலை தடை செய்யவேண்டும் என டெல்லி உயர் நீதிமன்றத்தில் இந்துத்துவவாதிகள் வழக்குத் தொடுத்தது நமக்கு நினைவிருக்கலாம். இந்துத்துவ அடிப்படையில் கல்வி திட்டத்தில் மாற்றியமைக்கும் இலக்குடன் செயல்படும் 'ஷிக்ஷா பச்சாவ் அந்தோலன்' எனும் அமைப்பின் நிறுவனர் தீனாநாத் பத்ரா, ஆர்.எஸ்.எஸ். உதவியுடன் இதை செய்தார்.

பெங்குயின் நிறுவனத்திற்கு இந்துத்துவ வாதிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியதும், அந்நிறுவனம் பணிந்து போய் இந்நூலை விநியோகிப்பதையே நிறுத் திக் கொண்டது. இனி இதை வெளியிடுவதில்லை என்றும் சொல்லியது. அருந்ததி ராய் இந்துத்துவ வாதிகளின் இந்நடவடிக்கையைக் கண்டித்த தோடு, பெங்குயின் நிறுவனத்தின் முடிவை தவறு என சுட்டிக்காட்டி ஒரு கடிதம் எழுதியது இங்கே குறிப்பிடத்தக்கது.


வரலாற்றைக் கையகப்படுத்துவதற்கான திரிபு வேலைகளை இந்துத்துவ பயங்கரவாதிகள் நெடுங்காலமாக செய்துவருகின்றனர் என்பது ஊரறிந்த இரகசியம். இந்து ராஷ்டிர கனவை முன்னெடுப்பதற்குத் தகுந்தாற்போல் புராணங் களையும் இதிகாசங்களையும் வரலாறாய் சித்திரித்து எழுதுவதில் முனைப்பாக செயல்பட்டு வருகின்றனர். அதிலும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன், அவர்களின் மோசடிகள் இன்னும் வீரியம் பெற்றுள்ளன.


இந்த மோசடிகளையெல்லாம் தோலுரித்துக் காட்டுபவர்களையும், அறிவியல்பூர்வமாக வரலாற்றை எழுதும் அறிஞர்களையும் ஆதிக்க சக்திகளான பிராமணியவாதிகளும் அவர்களின் நேச சக்திகளும் விட்டுவைப்பதில்லை. அவர் களின் குரல்வளையில் கால் வைத்தேனும் அந்தக் குரல்களை ஒடுக்க முனைகின்றனர். இந்த சூழலில், நேர்மையாக எழுதப்படும் வரலாற்றை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்கவேண்டியது அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது.


பேராசிரியர் வெண்டி டோனிகரின் கடின உழைப்பையும் சிரத்தையையும் கொண்டு, இந்துமதம் குறித்து ஆதாரப்பூர்வமாக எழுதப் பட்டிருக்கிற "The Hindus: An Alternative History" புத்தகத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு பேரா சிரியர் க. பூரணச்சந்திரன் மொழி பெயர்த்துள் ளார். எதிர்வெளியீடு இதை வெளியிட்டுள்ளது.

சமகால உலகில் இந்து மதத்தைப் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வமுள்ளவர்கள் இந்நூலைப் படிக்கவும் விவாதிக்கவும் வேண்டும் என்றும், குறிப்பிடத்தக்க கல்வியறிவினால் உருவான படைப்பு இது என்றும், இந்த புத் தகத்தை திறனாய்வு செய்த வரலாற்றாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்

# வரப்பெற்றோம்...


குர்ஆனும்
வானியலும்
Saturn
Jupiter
Asteroid Belt
Mars
Earth
Venus
Mercury
Ceres
SUN
டாக்டர்.K.காசிம் முகமது, MDS


பொது சிவில் சட்டத்தை
முஸ்லிம்கள்
எதிர்ப்பது ஏன்?
S.அமீர் ஜவ்ஹர் B.A.B.L.,


S.அமீர் ஜவ்ஹரின் தொகுப்புகள்
1. அர்த்தமுள்ள இறைவன்
2. அர்த்தமுள்ள வேதம்
3. அர்த்தமுள்ள மனிதன்
4. உன்னால் முடியாது
5. இறைவனிடம் பேசுங்கள்
6. துஆ
7. இறைவழியில் திருமணம்
8. 50 கேள்விகளும் 5 நிமிட சிந்தனையும்
9. ஜகாத்
10. நோன்பு
11. பிரிவினையை வேரறுப்போம் ஒற்றுமைக்கு உதவிடுவோம்
12. இறைவனால் விதியாக்கப்பட்ட தொழுகை
13. அழைப்புப் பனி செய்வதன் வழிமுறை
14. புகழெல்லாம் அல்லாஹுக்கே
15. சிந்திக்க சில வினாடிகள்
16. குர்பானியின் சட்டங்கள்
17. இந்து கிறிஸ்தவ வேதங்களில் இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்)
18. தலாக்
creative edge
Illustration - Design - Graphics
www.creativeedge3.com | +91 98402 66375
வெளியீடு:
சாஜிதா புக் சென்டர்
248, தம்பு செட்டி தெரு, சென்னை -1
Ph: 044 2522 4821 / 98409 77758
Email: shajithabookcentre@yahoo.com
web: shajithabookcentre.blogspot.in
SHAJIDA BOOK CENTRE CHENNAI


தலாக்
சர்ச்சையும் - விளக்கமும்
S.அமீர் ஜவ்ஹர் B.A.B.L.,

பகுதி-3

# நிர்வாக இயலின் தந்தை

# ஷெர்ஷா சூரி



பிப்ரவரி மாத தொடர்ச்சி...

கி.பி 1540ல் பேரரசனாக முடி சூட்டிக் கொண்ட ஷெர்ஷா ஆட்சி செய்தது வெறும் ஐந்தாண்டுகள் மட்டுமே! ஆனால், இந்த ஐந்தாண்டுகள் அவர் அறிமுகப்படுத்திய நிர்வாக முறையிலான சீர்திருத்தங்களே இன்ற ளவும் உலகின் பெரும்பாலான இடங்களில் நிர்வாக நடைமுறைகளாக உள்ளது.

ஷெர்ஷாவின் நாணய மற்றும் நிர்வாக சீர்திருத்ததை சென்ற பகுதியில் பார்த்தோம். அதை தொடர்ந்து அவர் அறிமுகப்படுத்திய இன்னும் பல நிர்வாக முறை சீர்த்திருத்தங்களை பார்க்கலாம்.

### ஷெர்ஷாவின் இராணுவ நிர்வாகம்

ஷெர்ஷாவின் ஆட்சிக்கு முந்தைய மன்னர்களில் அலாவுதீன் கில்ஜியை தவிர மற்ற அனைவரும் இராணுவத்திற்கென்று ஒரு தனி கட்டமைப்பை உருவாக்கவில்லை. ஆனால் ஷெர்ஷாவின் இராணுவ நிர்வாகம் மிக நுட்ப மானதாக இருந்ததால் மட்டுமே இதுவரை ஒரு தோல்வியும் அவர் கண்டதில்லை.

முந்தைய ஆட்சியாளர்கள் போர் என்றதும் ஊரில் தம்படம் அடிக்க செய்து அதை தொடர்ந்து யாரெல்லாம் அதிக ஊதியத்திற்கு விருப்பப்படுகிறார்களோ அவர்கள் போரில் வீரர்களாக கலந்து கொள்வார்கள். விவசாயி களும், வியாபாரிகளும், கூலி வேலை செய்பவர்களும் இராணுவ வீரர்களாக அணி வகுப்பார்கள். இந்த முறையை முற்றிலுமாக மாற்றினார் ஷெர்ஷா.

இராணுவத்திற்கென்று தனி நிர்வாகத்தை ஒதுக்கினார். அதில் இராணுவ வீரர்களை தகுதிக்கு ஏற்ப போர் வீரர்களில் தொடங்கி போஜ்தார் (தளபதி) வரை நியமித்தார். போஜ் தார்களை நியப்பதில் தானே முன்னின்று நியமித்தார். அதே போல் ஷெர்ஷாவின் ஆட்சி யில் அரசாங்கத்திற்கு தெரிந்தவர் மன்னருக்கு தெரிந்தவர் என்றதும் உடனே உயர் பதவியை அடைய முடியாது. கண்டிப்பாக கீழ் நிலை யிருந்து தான் அனைவரும் முன்னேறிட முடியும் என்ற ஒழுங்கை ஏற்படுத்தி இருந்தர் ஷெர்ஷா.

ஷெர்ஷாவின் படைப்பிரிவில் இன வாரி யாக படைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இந்து படைப்பிரிவு, முஸ்லிம் படைப்பிரிவு, துருக்கி படைப்பிரிவுகள் என இனவாரியாக ஒதுக்கப்பட்ட படைப்பிரிவிற்கு அந்தந்த இனத்தவர்களையே போஜ்தார்களாக ஷெர்ஷா நியமித்தார்.

மாதத்திற்கு ஒரு முறை என்ற கணக்கில் ஷெர்ஷா ராணுவ வீரர்களை கலந்துரையாடு வதை வழக்கமாக கொண்டிருந்தார். இதனால் போர்கள் நடக்காத காலத்திலும் வீரர்கள் தங்கள் பயிற்சிகளை விட்டுவிடவில்லை.

குதிரைப்படைகளுக்கான குதிரைகளையும் நேரடியாகவே ஷெர்ஷாவே நியமித்தார். குதிரைகளையும் இனவாரியாக நியமித்தார். இதற்கு காரணம், ஷெர்ஷா திறமையான குதிரை வீரர் என்பதோடு மட்டுமல்லாமல் குதிரைளின் இயல்பு தன்மைகளையும் நன்றாக

அறிந்து வைத்திருந்தார். அதனால் தான் அவரால் குதிரைகளை கூட இனம் வாரியாக அவரால் பிரிக்க முடிந்தது.

இராணுவத்தினருக்கான ஊதியங்களையும் பதவிக்கேற்ப நிர்ணயித்து! அங்க அடையாளங் களுடன் பதிவு செய்து வைத்து இராணுவத்திற் குள்ளேயே ஒரு ராணுவ கட்டமைப்பை ஏற்படுத்தினார்.

இன்று எல்லா அரசாங்க உறுப்பினர் களுக்கும் 'சர்வீஸ் ரெக்கார்ட்' என்ற அவர் களது பணியின் விவரமும், தனிப்பட்ட விவர மும் அடங்கிய தொகுப்பு உள்ளது. இதை வைத்தே மேலும் உயர்பதவிகளுக்கு நியமிக்கப் படுகிறது. இதனை முதன் முதலில் அறிமுகப் படுத்தியவரும் ஷெர்ஷாவே! இந்த அறிமுகம் இன்று நிர்வாக முறையை பல மாற்றத்திற்கு உட்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

**ஷெர்ஷாவின் அமைச்சரவைகள்**

ஒவ்வொரு துறைக்கும் ஒரு அமைச்சர்கள் பிரிக்கப்படுவதெல்லாம் இன்று நமக்கு சாதரணமாக தெரியலாம். ஆனால் அதை வரலாற்றில் ஒருவர் அறிமுகம் செய்யவில்லை யென்றால் இன்று இந்தளவுக்கு தொழில் நுட்பம் உருவாகியிருக்குமா என்பது மாபெரும் சந்தேகமே!

**திரானி விசாரத்**

நாட்டினுடைய ஒட்டுமொத்த வரவு செலவுகளை கவனிக்கவும், நாட்டிற்கான முன்னேற்றங்களில் ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு முதலீடு செய்வது என்பதனையும் முடிவு செய்வது போன்ற பணிகளை திரானி விசாரத் எனும் பதவியில் நியமிக்கப்படுபவர் செய்வார். இன்று இந்த பதவியையே "நிதியமைச்சர்" என்கிறார்கள்.

**திவானி ரஸ்லாத்**

நாட்டின் எல்லைக்கு அருகில் உள்ள அண்டை நாட்டினரிடையே சுமூக உறவுகளை மேற்கொள்வது. இறக்குமதி, ஏற்றுமதி விவகாரங்களில் உள்ள பிரச்சைனைகளை சரி செய்வதென வெளி உறவு சம்பந்தமான எல்லா பணிகளும் இத்துறைக்கு கீழே வரும். இன்று இத்துறை சார்ந்த பதவியை " வெளியுறவுத் துறை அமைச்சர்" என்கிறார்கள்.

**திவானி அரிஸ்**

நாட்டின் முப்படைகளின் நிர்வாகவத்தை கண்காணிப்பது. ஆயுதங்கள் வாங்குதலில் தொடங்கி இராணுவத்தினருக்கான ஊதியம், எல்லைகள் கண்காணிப்பு, ஆள் சேர்ப்பு என அத்தனை வேலைகளும் 'திவானி அரிஸ்'யை சார்ந்தவை. இன்று இந்த பதவிக்கு பெயர் "இராணுவ அமைச்சர்".



**திவானி ரஸ்லாம்**

வழிபாட்டு உரிமைகளை பாதுகாக்கவும், அந்தந்த வழிபாட்டு இடங்களை பாதுகாக்க வும் உருவாக்கப்பட்ட துறை இது. ஹஜ் செல் வதற்கான ஏற்பாடுகளை செய்து தருவது போன்ற அனைத்து வழிபாடு சார்ந்த நிர்வாகங் களுக்கென்றும் தனியாக உருவாக்கப்பட்டது. இன்று இப்படியொரு துறை இருக்கிறதா? என்றால் சந்தேகமே!

**திவானி - பரீத்**

நாட்டின் உளவு அமைப்பாக இந்தத் துறை செயல்பட்டது. மக்கள் புரட்சி ஏற்படுகிறதா? அரசாங்ககத்திற்கு தெரியாமல் நடைபெறும் நிர்வாக முறைகளை வெளிக்கொணருவது போன்ற பணிகள் இதற்கு கீழ் அடங்கும். அதனால் அதிகம் பயிற்சி பெற்றவர்களே இத்துறையின் கீழ் நியமிக்கப்பட்டனர்.

**திவானி - காஸா**

இத்துறை மிக முக்கியமாக கருதப்பட்டது. இத்துறையின் கீழ் மிகுந்த திறமைசாலிகளும்

அனுபவம் பெற்றவர்களுமே அமர்த்தப்பட்டனர். இதுதான் நாட்டின் உச்சநீதிமன்றம். இப்பதவிக்கு கீழே தான் முன்சிப்புகள் இருந்தார்கள். முன்சிப்புகள் சிறிய வழக்குகளை விசாரிப்பார்கள். இப்படி பர்கானாவுக்கு (மாவட்டம்) ஒரு முன்சிப்புகள் இருந்தார்கள். பெரிய வழக்குகளாக இருக்கும் போது திவானி காஸாவிற்கு எடுத்து செல்லப்படும்.

நாட்டின் மிக முக்கியமான வழக்காக இருந்தால் ஷெர்ஷாவே நேரடியாக விசாரித்து தீர்ப்பு வழங்குவார். கீழ் நிலையிலிருந்து உயர்மட்டம் வரை செல்ல ஒரு அழகான நேர்த்தியான நிதிமன்றங்கள்.

**திவானி - இன்ஷா**

இத்துறையை மிகச்சிறப்பாக பயன்படுத்தியதின் விளைவு தான் இன்று பல நாடுகள் வல்லரசாக நிற்கின்றன. இந்த துறைக்கு முதன் முதலில் தனியொரு வடிவம் கொடுத்ததும் ஷெர்ஷா தான்.


நாட்டின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் ஆவணப்படுத்துவது (DOCUMENTATION). இதில் ஷெர்ஷா மிக கடினமாக இருந்தார். ஒவ்வொரு நடவடிக்கையும் பார்சி மற்றும் இந்துஸ்தானி மொழியில் கண்டிப்பாக பதிவு செய்து தொகுக்கப்பட்டன,

இந்த ஆவணங்களை தன் பஷ்டு மொழியை பின்னுக்கு தள்ளி இந்துஸ்தானி மொழியில் அதாவது மக்கள் பயன்படுத்திய மொழியில் பதிவு செய்தது தான் ஷெர்ஷாவின் தனிச்சிறப்பு.

இதுபோன்ற அமைச்சரவைகள் இருந்ததன் காரணமாகவே மன்னர் போரின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினாலும் நாட்டின் நிர்வாகம் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருந்தது. போர் வந்தாலும், வறட்சி வந்தாலும் எதுவும் மக்களை பாதிக்கவில்லை.

இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிவில் ஷெர்ஷாவின் ஆட்சி ஏற்படுத்திய தண்டனை நிர்வாக முறை, நீதிமன்ற நிர்வாக முறைகளை பார்க்கலாம்.

**- அபூ சித்திக்**





# கறுப்பு பண ஒழிப்பு மோடியின் கபட நாடகம்

**தா**ன் ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டு வங்கிகளில் இருக்கும் இந்தியர்களின் கறுப்பு பணத்தை மீட்டு ஒவ்வொரு குடிமக்களின் வங்கி கணக்கிலும் 15 லட்சம் வைப்பீடு செய்வேன் என்று வாய் சவடால் விட்டு ஆட்சியைப் பிடித்த மோடி கும்பல் அதை செய்திட திராணியில்லாமல் திசை திருப்பிடவே ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பை செய்தது.

தன்னுடைய நடவடிக்கையால் கறுப்பு பணம் ஒழிந்துவிடும் என்றும் கறுப்பு பணம் வைத்திருப்பவர்கள் தான் இதை எதிர்க்கிறார்கள் என்றே பேசி வந்தார் மோடி. மோடியின் நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் மட்டும் எதிர்க்கவில்லை வங்கிகளில் நீண்ட நேரம் வரிசையில் நின்ற கோடான கோடி மக்களும் எதிர்த்தார்கள். வங்கி வரிசையில் நிற்கும் மக்களிடம் கறுப்பு பணம் உள்ளதா அல்லது மோடியின் நண்பர்களான அதானி, அம்பானி போன்றவர்களிடம் கறுப்பு பணம் உள்ளதா என்ற கேள்விக்கு பதில் சொல்லிட தயாராக இல்லை மோடி கும்பல். வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை பதுக்கி வைத்திருக்கும் 648 இந்தியர்களின் பெயர் கொண்ட பட்டியல் 2011-ல் வெளியிடப்பட்டது அது மத்திய அரசிடம் தான் உள்ளது. அப்பட்டியலில் உள்ள பெயர்களை வெளிப்படுத்திட மோடி அரசு தயாராக இல்லை. 2015 ல் சுவிட்ஸ் வங்கிகளில் கறுப்பு பணம் வைத்திருப்பவர்களின் பெயர் பட்டியலை சுவிட்ஸ்லாந்து அரசு இதழில் வெளிப்படுத்தியது. அதில் 5 இந்தியர்களின் பெயர் இடம் பெற்றிருந்தது. இப்படி நூற்றுக்கணக்கான மோடியின் நண்பர்கள் கறுப்பு பணம் பதுக்கி வைத்திருக்க பண முதலைகள் யார் என்று தெரிந்தும் அவர்களின் மீது இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுத்திடாத மோடி கறுப்பு பண ஒழிப்பு நடவடிக்கை என்று கோடான கோடி மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துவிட்டார். ஆக பணமதிப்பு நீக்க நடவடிக்கை என்பது மோடியின் கபட நாடகம்.

## வங்கிகளுக்கு திரும்பிய கறுப்புபணம் எதிர்பார்ப்புகளும், ஏமாற்றங்களும்

கடந்த மார்ச் வரை புழக்கத்தில் இருந்த ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகளின் மதிப்பு 14.18 லட்சம் கோடி ரூபாய் ஆனால் நவம்பர் 8-ஆம் தேதி அது 15.44 லட்சம் கோடி என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.இந்த 15.44 லட்சம் கோடிகளில் 5.44 லட்சம் கோடிகள் கறுப்பு பணம் அவை வங்கிகளுக்கு திரும்பிவிடாது என்பதே அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் எதிர்பார்ப்பு. அப்படி 5.44 லட்சம்

கோடி ரூபாய்கள் திரும்ப வரவில்லை என்றால் அது அரசுக்கு லாபமாகவே அமையும் என்றார்கள்.

ஆனால் டிசம்பர் 19-ம் தேதி வரை திரும்பப் பெறப்பட்ட பழைய ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டு களின் மதிப்பு 14 லட்சம் கோடி என்றது ரிசர்வ் வங்கி அதன் பிறகு டிசம்பர் 30 வரை ரிசர்வ் வங்கி வெளி யிடும் (Weckly statstical supplementory Report) வாராந்திர புள்ளிவிவர அறிக்கை தரப்படவில்ல.

இப்போது 14.90 லட்சம் கோடி வங்கிகளுக்கு திரும்பிவிட்டது என்கிறது ரிசர்வ் வங்கி, நிதி அமைச்சர் அருண் ஜெட்லியிடம் கேட்டால் எனக்கு கணக்கு சரியாக தெரியவில்லை என்கிறார். எகானாமிக்டைம்ஸ் என்ற பத்திரிக்கை ரிசர்வ் வங்கி வெளியிடும் வாராந்திர அறிக்கையை இணையத்தில் இருந்து அழித்திருக்கின்றார்கள் இது மொத்த பணமும் அதாவது 15.44 லட்சம் கோடியும் வங்கிகளுக்கு திரும்பிவிட்டது என்பதை மறைப்பதற்காகவே அறிக்கையை அழித்துருக் கின்றார்கள் என்கிறது. நம்முடைய கணிப்பு 15.44 லட்சம் கோடிகளையும் தாண்டியிருக்கும் என்பதே ஏனெனில் நமது அன்டை நாடான நேபாளத்திலும், பூடானிலும் இந்திய ரூபாய்கள் புழக்கத்தில் இருந்து வருகிறது. அப்படியானால் பல உயிர்களை காவு வாங்கிய பிரதமரின் பண மதிப்பு நீக்கி நடவடிக்கை படுதோல்வி.



© BCCL 2016. ALL RIGHTS RESERVED.

## CRR (CASH RESERVED RATION) நவம்பர்-8 வரை வங்கிகளில் இருந்த இருப்பு தொகை


நவம்பர் 8-வரை புழக்கத்தில் மொத்தமாக 15.44 லட்சம் கோடி ரூபாய்கள் இருக்கின்றது என்பது ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வமான தகவல். ஆனால் ரிசர்வ் வங்கி மற்றொரு தகவலை சொல்லிடவில்லை அது என்னவெனில் CRR (Cash Reserved Ration) நவம்பர் 8 வரை வங்கிகளில் இருந்த இருப்பு தொகை 4.06 லட்சம் கோடி ரூபாய்கள் அதில் பழைய ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகளின் மதிப்பு என்னவென்பதை இது வரையில் சொல்லிடவில்லை. பெரும்பாலும் புழக்கத்தில் ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகளே இருப்பதால் பழைய நோட்டுகள் இருப்பு தொகையில் குறைந்தது 3 லட்சம் கோடி ரூபாய்கள் இருந்திருக்கலாம். அப்படியானால் புழக்கத்தில் இருந்த 15.44 லட்சம் கோடி மதிப்புள்ள ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகள் ஏற்கனவே வந்து சேர்ந்துவிட்டது என்பது தான் உண்மை.

ஆதாரம் : Indian Express 02.12.2016
The New Indian Express 14.12.2016



## கள்ளப்பண ஒழிப்பு ஒரு கேலிக் கூத்து

கறுப்பு பணம், கள்ளப்பணம் ஊழல் இவற்றை ஒழிக்கப்போவதாக ஒரே இரவில் ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டு செல்லாது என்று அறிவித்தார் பிரதமர் மோடி உள்துறை அமைச்சர் நாடாளு மன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்திடும்போது 2013-ல் ஜனவரியிலிருந்து 2016-செப்டம்பர் வரை 155 கோடி




கள்ளப்பணம் கைப்பற்றப்பட்டுள்ளதாக கூறியது.

ரிசர்வ் வங்கி அளித்த அறிக்கையில் புழக்கத்தில் இருக்கும் கள்ள நோட்டுகளின் மொத்த மதிப்பு 400 கோடி ரூபாய்கள் மொத்த மதிப்பு 17 லட்சம் கோடி வெறும் 400 கோடி மதிப்புள்ள கள்ள நோட்டுகளை ஒழிப்பதற்கு 17 லட்சம் கோடி ரூபாய்களை முடக்குவது முட்டாள்தனமான முடிவு. கடந்த மூன்றரை ஆண்டுகளில் கைப்பற்றிய கள்ள நோட்டுகளின் மதிப்பை புழக்கத்தில் இருக்கும் மொத்த பணத்தோடு ஒப்பிட்டு பார்த்தால் வெறும் 0.0009 சதவீதம் தான்.

ஆதாரம் : www.vccircle.com/economy/news/why/ the /fake/notes/argument/is/weak/on/grand

## அரசாங்கம் அடித்த கள்ள நோட்டு மோடியின் புதிய சாதனை

பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்கும் நீண்ட நாட்களுக்கு பின் ரிசர்வ் வங்கி அச்சடித்து வெளியிட்ட ரூ.500 நோட்டு இரண்டு விதமாக உள்ளதை டைம்ஸ் ஆஃப் இந்தியா வெளிச்சம் போட்டு காண்பித்துள்ளது. இது மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திடும் என்பது மட்டுமல்ல கள்ள நோட்டு அடிப்பதற்கு பெரும் உதவியாகவே அமையும் என்கிறார்கள் நிபுணர்கள். கள்ளநோட்டுகளை ஒழிக்க போகிறோம் என்று எடுத்த நடவடிக்கைக்கு பின் இரண்டு விதமான நோட்டுகளை வெளியிட்டிருப்பது அரசே கள்ள நோட்டுகளை அச்சடிக்கிறது என்று தான் பொருள் கொள்ள முடியும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். ரிசர்வ் வங்கி வெளியிட்ட இரண்டு விதமான ரூ.500 நோட்டுகளில் கிட்ட தட்ட 10 முரண்பாடுகள் சுட்டி காட்டப்பட்டுள்ளது. இந்த 500 ரூபாய் நோட்டுகளில் பல பிழைகள் இருந்த போதும் நாங்கள் இப்போது உள்ள அவசரத்தால் தான் அதை வெளியிட்டோம் என்ற ரிசர்வ் வங்கி செய்தி தொடர்பாளர் பேட்டியின்போது கூறியுள்ளார். மேலும் அவர் கூறியதாவது மக்கள் பிழையுள்ள எந்த நோட்டுகளையும் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தலாம் இல்லையில் வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் என்கிறார் .

இந்திய வரலாற்றில் அரசே கள்ள நோட்டு அடித்த கேலி கூத்து இந்திய வரலாற்றில் மோடியின் நடவடிக்கையில் நடந்திருக்கின்றது.

ஆதாரம் : Times of india 26.11.2016

## ஏ.டி.எம்.களில் வெளியாகும் ரூ. 2000 கள்ள நோட்டுகள்

பீகார் மாநிலம் சீதாமாரி மாவட்டத்தை சார்ந்த பங்கஞ்குமார் 42 என்பவர் தான் ஸ்டேட் வங்கி ஏ.டி.எம் ல் பணம் எடுத்ததில் 2000 ரூபாய் கள்ள நோட்டு வந்துள்ளதாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

சீதாமாரி மாவட்டம் ஸ்டேட் வங்கியின் தலைமை அதிகாரி அளித்த பேட்டியில் ஏ.டி.எம் களில் தனியார் நிறுவனம் தான் பணம் நிரப்புகிறார்கள் என்றாலும் பணத்தை வங்கி அதிகாரி சோதனைசெய்த பிறகே நிரப்புவார்கள் என்பதால் பங்கஞ்குமாரை யாரோ ஏமாற்றியிருக்கிறார்கள் என்றே எண்கிறேன் என்று கூறிவிட்டு ஏ.டி.எம்களில் கள்ள நோட்டு விநியோகம் ஆவதற்கு வாய்ப்புகள் உள்ளது என்பதையும் தெரிவித்தார். டிசம்பர் 6 ஆம் தேதி அந்த ஏ.டி.எம்.ல் 14 லட்சம் தனியார் நிறுவனத்தால் நிரம்பப் பட்டுள்ளது. பொதுவாகவே ஏ.டி.எம் களில் ரூ.100 கள்ளநோட்டுகள் விநியோகம் ஆவதாக புகார் எழுந்து வரும் நிலையில். இது மேலும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

ஆதாரம். Times of india 14.12.2016

## மோடியின் டிஜிட்டல் இந்தியா ஓர் மோசடி

தனது பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் கறுப்பு பணம், கள்ளப்பணம், ஊழல் இவற்றை ஒழித்துவிடப்போவதாக கூறி தோற்றுப் போன மோடியரசு "டிஜிட்டல் இந்தியா" என்று இப்போது பேசி வறுகிறது தனது தோல்வியை மறைப்பதற்கு உங்களுடைய மொபைல் போன்களை வங்கிகளாக




மாற்றிக்கொள்ளுங்கள் ரொக்கப்பரிவர்த்தனை அற்ற இந்தியாவை உருவாக்குரோம் மின்னனு பரிவர்த்தனைகளை ஊக்கப்படுத்துவோம் அதற்காகவே இந்த நடவடிக்கை என்று அந்தர்பல்ட்டி அடித்துள்ளார் மோடி.

இந்த நாட்டிலே 60 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வங்கி கணக்கு இல்லாதவர்கள் ஸ்மார்ட் போன்கள் பயன்படுத்துபவர்கள் வெறும் 26% சதவீதத்தினர் மட்டுமே இந்தியாவில் இருக்கும் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் வங்கி கிளைகள் கிடையாது. ஓரளவு படிப்பறிவு உள்ளவர்கள் தான் மின்னனு பரிமாற்றம் செய்து வருகிறார்கள் இந்தியாவில் நடக்கும் பணப்பறிமாற்றங்களில் இது வெறும் 2 சதவீதம் தான். ஆனால் உலகிலேயே "Illeterates" படிப்பறிவு இல்லாதவர்கள் அதிகமாக உள்ள நாடுகளின் பட்டியலில்

இந்தியா முதலிடத்தில் உள்ளது. படிப்பறிவு இல்லாதவர்கள் உலக மக்கள் தொகையில் 37 சதவீதத்தினர் இந்தியர்கள். ஆக நாட்டினுடைய நிலை இப்படியிருக்க குடிமக்களுக்கு எந்த அடிப்படை வசதிகளையும் செய்திடாமல் "டிஜிட்டல் இந்தியா" என்று மோடி அரசு பேசி வருவது பெரும் மோசடியே.

## திருடப்பட்ட 32 லட்சம் டெபிட் கார்டுகளில் தகவல்

கறுப்பு பணத்திற்கு கள்ளப்பணத்திற்கும் எதிரான தனது நடவடிக்கை தோற்றுபோனதை மறைத்திட "டிஜிட்டல் இந்தியா" என்று பேசிவரும் மோடி மக்கள் வங்கிகளில் வரிசையில் நிற்க வேண்டிய அவசிய மில்லை உங்களுடைய டெபிட் கார்டுகளை பொருட்கள் வாங்குவதற்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்கிறார். சிறு தொழில் செய்யும் வியாபாரிகளும் சுவைப் இயந்திரங்களை வாங்கிக் கொள்ளுமாறு அருண் ஜெட்லி அறிவுறுத்துகிறார்.

இது வரையில் கிட்ட தட்ட 32 லட்சம் டெபிட் கார்டுகளின் தகவல்கள் திருடப்பட்டிருக்கின்றது. 19 வங்கிகளில் 641 வாடிக்கையார்களின் கணக்கு களிலிருந்து திருடப்பட்ட பணத்தின் மதிப்பு 1,31,59,500 ரூபாய்கள் இந்த 19 வங்கிகளில் தனியார் வங்கிகளும் அரசு வங்கிகளும் அடக்கம்.

## 6 நொடிகளில் கார்டுகளை ஹேக் செய்து விடலாம்

இங்கிலாந்தில் உள்ள நியுகேஸ்டில் பல்கலை கழகம் சமீபத்தில் வெளியிட்ட ஆராய்ச்சியில் கிரடிட் / டெபிட் கார்டுகளின் முழு தகவல்களையும் அதன் ரகசிய எண் முதற்கொண்டு திருடுவதற்கு ஹேக்கர் களுக்கு தேவைப்படும் நேரம் வெறும் 6-ஆறு வினாடிகள் தான் என்கிறது. இப்படி செய்வதற்கு பெரிய தொழில் நுட்ப வசதிகள் எல்லாம் தேவைப்படாது ஒரு மடி கணிணியும் அதில் இண்டர்நெட் வசதியும் இருந்தால் போதுமானது அதை எப்படி செய்திட வெண்டும் என்ற விடியோக்களும் அதற்கான சாஃப்ட்வேர்களும் இலவசமாகவே இணையதளத்தில் கிடைக்கின்றது.


ஆக எந்த ஒரு சைபர் பாதுகாப்பிலும் ஈடுபடாமல் டிஜிட்டல் இந்தியா என்று சொல்வது மோடியின் மோசடியான திட்டம். ஏனெனில் மொபைல்களின் இனி நடக்ககூடிய குற்றங்கள் அனைத்தும் சைபர் குற்றங்கள் ஆகவே அமையும் என்ற தலைப்பிட்டு செய்தி வெளியிட்டது ஹிந்துஸ்தான் டைம்ஸ் 2014ல் -பதிவு செய்யப்பட்ட சைபர் குற்ற வழங்குகள் 604 2015-ல் அது 912 ஆக உயர்ந்துள்ளது நடந்த குற்றங்களில் கோடிக்கணக்கான ரூபாய்கள் திருடப்பட்டிக்கின்றது ஆனால் அதில் திரும்ப கிடைக் கப்பெற்றது வெறும் 20 சதவீதம் தான் என்கிறது.

ஆதாரம் : www.hindustantlmes.com/buslness/news/this-is - how -3-2 million - debit-cards-india - compromised Hindustan times 30-june 2016.
www.hackread.com/hacking-credit-card-in-6-second

- மு.இமதியாஸ் அஹமது

# நிர்வாகி தற்கொலையை 'கொலை' என மாற்ற முயற்சி!

திருப்பூரில் பி.ஜே.பி. நிர்வாகி கொலை செய்யப்பட்டதாகவும், பின்னர் அருகில் தேசிய கொடியை தலைகீழாக ஏற்றி வைத்தும், மோடி படத்துக்கு செருப்பு மாலை அணிவித்து கொலையாளிகள் தப்பிச் சென்றதாகவும் சொல்லப்பட்ட நிலையில், பி.ஜே.பி. நிர்வாகி கொலை செய்யப்படவில்லை என்பதும், தற்கொலை செய்து கொண்டதையும் போலீஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.



## பி.ஜே.பி-யின் பிரிவினை வியூகமா?

அடுத்தடுத்த சர்ச்சையில் சிக்கி வருகிறது பி.ஜே.பி. மாணவர்கள் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த நேரம். பி.ஜே.பி. தேசியச் செயலாளர் ஹெச்.ராஜா தனது டிவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட ட்விட் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த 20-ம் தேதி, "கோயம்புத்தூர் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் விக்னேஷ் வாசுதேவன் எனும் இளைஞர் தேசிய கொடியை ஏந்தி இருந்ததால் இஸ்லாமியர்களால் தாக்கப் பட்டார்" என தனது டிவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார் ஹெச்.ராஜா. இதற்கு மாணவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

'ஜாதி, மத பேதமின்றி நாங்கள் போராடி வருகிறோம். நடக்காததை நடந்ததாகச் சொல்லி போராட்டத்தை நிறுத்த கலவரத்தை ஏற்படுத்த முயல வேண்டாம்' என மாணவர்கள் நேரடியாகவே எச்சரித்தனர்.

இந்நிலையில், மெரினா போராட்டத்தில் பின்லேடன் படத்துடன் இஸ்லாமியர்கள் வலம் வந்ததாக புகைப்படத்தை காட்டி பி.ஜே.பி. நிர்வாகிகள் குற்றஞ்சாட்டினர். ஆனால் "அந்த புகைப்படம் மெரினாவில் எடுக்கப்பட்டதில்லை என்றும், அந்த வாகனம் ராஜி என்பவருக்கு சொந்தமான வாகனம். இஸ்லாமியர் வாகனம் அல்ல" எனவும் சொல்லப்பட்டது. இதிலும் பி.ஜே.பி. நிர்வாகிகள் கண்டனத்துக்கு உள்ளா கினர். "மாட்டை அறுத்து சாப்பிடும் முஸ்லிம் களும், தலித்துகளும் ஜல்லிக்கட்டுக்கு ஆதர வான போராட்டத்தில் பங்கேற்கக் கூடாது" என்று பி.ஜே.பி.யினர் சொன்னதும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதேபோல் மெரினா போராட்டத்தின் போது இஸ்லாமியர்கள் தொழுகை நடத்திய தைச் சொல்லி சர்ச்சையை கிளப்பினர் பி.ஜே.பி. நிர்வாகிகள். அதற்கு பதிலளித்த மாணவர்கள், "இந்திய இறையாண்மையை நாங்கள்தான் கட்டிக்காப்பாற்றுகிறோம். மற்ற மதத்தினர் அவர்கள் கடமையை நிறைவேற்ற உரிமை உண்டு. இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு. அதைத்தான் நாங்கள் நிறைவேற்றிக் காட்டினோம். ஆனால் இதைச் சொல்லி மத்திய அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணன் இந்து - முஸ்லிம் பிரிவினையை தூண்டுகிறார்," என காட்டம் காட்டினர்.

இப்படி மத பிரச்னையை திட்டமிட்டே பரப்பி வருவதாக பி.ஜே.பி. அடுத்தடுத்து சர்ச்சைக்குள்ளாகி வந்த நிலையில், இன்னு மொரு சர்ச்சையிலும் சிக்கியிருக்கிறது.

மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக அழுத்த மான கோரிக்கைகளோடு நடந்த மாணவர்கள்





போராட்டம் முடிவுக்கு வந்த நிலையில், திருப்பூரில் பி.ஜே.பி. வடக்கு மாவட்ட துணைத் தலைவர் முத்து என்கிற மாரிமுத்து மரத்தில் தூக்கிலிடப்பட்ட நிலையில் தொங்கி யிருந்தார். அவரது உடல் அருகே மோடியின் படத்துக்கு செருப்பு மாலை போட்டும், தேசியக் கொடி தலைகீழாக பறக்க விடப்பட்டும் இருந்தது.

மேலும் பி.ஜே.பி. மற்றும் இந்து முன்னணி கொடியுடன் கறுப்புக் கொடி ஒன்று ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. TPR12345 என எழுதப் பட்டு, அதில் *3* என்ற எண் அடித்து விடப் பட்டிருந்தது. இதனால் திருப்பூரில் பதற்றமான சூழல் உருவானது. பி.ஜே.பி. நிர்வாகி கொலை, மோடி படத்துக்கு செருப்பு மாலை, தேசியக்கொடி தலைகீழாக பறக்கவிடப்பட்டது போன்றவற்றால் பெரும் பதற்றம் உருவாகும் சூழல் ஏற்பட்டது.

உடனடியாக திருப்பூர் வந்த தமிழிசை சவுந்திரராஜன், "பி.ஜே.பி. திருப்பூர் வடக்கு மாவட்டத் துணைத்தலைவர் முத்து மர்ம நபர்களால் கொல்லப்பட்டுள்ளார். இதில் சமூக விரோதிகள் ஈடுபட்டிருக்கலாம். தமிழகத்தில் பி.ஜே.பி. நிர்வாகிகள் கொல்லப்படுவது தொடர்கிறது. சமூக விரோதிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதை தடுக்க வேண்டும். குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும்," என வலியுறுத்தினார்.

இந்நிலையில் போலீஸார் இது தோடர்பாக விசாரணையை துவக்கினர். உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் பிரேத பரிசோதனையின் முடிவில் முத்து கொலை செய்யப்படவில்லை என்றும், தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரியவந்துள்ளது. முத்துவின் உடலில் சிறிய அளவிலான காயங்கள் கூட இல்லை. எனவே அவர் கொலை செய்யப்பட்டிருக்க வாய்ப்பே இல்லை என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், முத்துவுக்கு பெண் ஒருவருடன் தவறான பழக்கம் இருந்து வந்ததாகவும், அந்த விஷயம் வீட்டுக்கு தெரிந்ததால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இது தொடர்பாக சிலரிடம் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தற்கொலையை கொலை எனச் சொல்லி, பதற்றத்தை உருவாக்கியது யார்? எதற்காக இப்படிச்செய்தார்கள் என்பது தொடர்பாகவும் போலீஸார் விசாரிக்கின்றனர்.

இதற்கிடையே கொலையைக் கண்டித்து போராட்டம் நடத்துவதாக அறிவித்த பி.ஜே.பி. நிர்வாகிகள் போராட்டத்தை ரத்து செய் துள்ளனர். மத்திய அமைச்சர் பொன். ராதா கிருஷ்ணன் முத்துவின் குடும்பத்தாரை சந்தித்துப் பேச இருந்த நிகழ்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இன்னுமொரு சர்ச்சையில் சிக்கி இருக்கிறது பி.ஜே.பி.



# டேங்கர் கப்பலும் கூடங்குளமும்

2013ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் கூடங்குளத்திலிருந்து வெளி யேறும் கழிவுகளை அணு உலை பக்கத்திலேயே சேமிக்காமல் தொலை தூரம் சேமிக்க வழி காண வேண்டும் என உத்தரவிட்டது. ஆனால் இன்று வரை கழிவுகள் அணு உலைக்கு அருகில் தான் சேமிக்கப்படுகின்றன.

இந்திய அணுசக்தி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கோபாலகிருஷ்ணன் கூடங்குளம் அணு உலையில் நிறுவப்பட்டுள்ள அனைத்து கருவிகளும் தரமற்றவை என்று பகிரங்கமாக கூறியுள்ளார்.

இந்திய கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ராம்தாஸ் தலைமையிலான குழு ரஷ்யாவிடமிருந்து பெற்ற அனைத்து கருவி களும் தரமற்றவை. அதன் நான்கு மற்றும் ஐந்தின் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு பரிந்துரைத் துள்ளது. ( ஆதாரம்- தி இந்து 23/08/2016)

**இந்தியாவிற்கு தமிழகம் தருவதென்ன?**

தமிழகத்தில் உள்ள நெய்வேலியிலிருந்து ஒரு நாளைக்கு 11 கோடி யூனிட் மின்சாரம் கேரளத்திற்கும் கர்நாடகத்திற்கும் செல்கிறது. இதே போல் கல்பாக்கம், கூடங்குளம் அணு உலையிலிருந்தும் மின்சாரம் வெவ்வேறு மாநிலங்களுக்கு செல்கிறது.

இந்திய எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனத்திற்கு (ஓஎன்ஜிசி), தமிழ்நாட்டுக் காவிரிப்படுகை இந்தியாவிலேயே உயர்தர மான பெட்ரோலியத்தையும் எரிவாயுவை யும் வழங்குகிறது. தமிழ்நாட்டுத் தென் மாவட் டங்கள் தோரியம் மணல் வழங்குகின்றன. இதன் ஏற்றுமதி ஏராளமான அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது.

இந்தியா முழுவதும் கடலுணவு ஏற்று மதியில் கிடைக்கும் அந்நியச் செலாவணியில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாட்டிலிருந்து மட்டும் கிடைக்கிறது. உள்ளாடை ஏற்றுமதி மூலம் ஓராண்டுக்கு 16 ஆயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை நம் திருப்பூர் மட்டுமே ஈட்டித் தருகிறது.

பதனிட்ட தோல் ஏற்றுமதியில் இந்தியா

ஈட்டும் அந்நியச் செலாவணியில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கிறது. இந்தியா முழுவதிலுமிருந்து, வேலையற்ற பல லட்சம் பேர் தமிழகம் வந்து வேலை பெற்று வாழ்கின்றனர். (ஆதாரம்: தி இந்து 20/09/2016)

**மத்திய அரசுகளின் கைம்மாறு**

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மறுப்பு, பாதுகாப்பு இல்லாத கூடங்குளம் அணுமின் நிலையம், விவசாய நிலங்களை பறிக்கும் கெயில் எரிவாயு திட்டம். சிறு வணிகர்களை துரத்தும் ஆன்லைன் வர்த்தகம், கார்ப்பரேட் பொருளாதார சீர்கேடு என பல துரோகங்களை பட்டியல் போடலாம்.

ஏன் எங்களுக்கு துரோகம் செய்கிறீர்கள் என கேள்வி கேட்டால் இலவச இணைப்பாக தேசத்துரோகிகள் பட்டம்.

வருடந்தோறும் பட்ஜெட்டில் தமிழகத்திற்கென்று தனியாக எதையும் ஒதுக்காத பேருள்ளம் என இன்னும் அதிகமான கைம்மாறுகளை மத்திய அரசு தொடர்ச்சியாக செய்து கொண்டே தான் இருக்கிறது. இதில் தமிழக அரசின் கையாலாகத்தனமும் சேர்ந்து இன்று தமிழகம் தனித்து விடப்பட்டதாகவே தமிழக மக்களால் உணரப்படும் சூழ்நிலைக்கு மாற்றப் பட்டுள்ளது.

**டேங்கர் கப்பலும் கூடங்குளமும்.**

டேங்கர் கப்பல்களின் அமானுஷ்ய உராய்வின் காரணமாக ஏற்பட்ட எண்ணெய் படலத்தை அகற்றவே ஒரு வாரமாக தமிழக அரசு வாளியை கொண்டு தள்ளாடும் நிலையில் பாதுகாப்பில்லாத கூடங்குளத்தில் விரிசல் ஏற்பட்டால் மீண்டும் அதிநவீன கருவியான வாளியை தவிர தமிழக அரசுக்கு வேறு உயர்ரக நவீன பாதுகாக்கும் கருவி இல்லை என்பது தமிழகத்தின் பரிதாப நிலை.


மக்கள் தேர்ந்தெடுத்த அரசு மக்கள் விரோத போக்கை கையாலும் மோசமான சூழ்நிலையில் தான் தமிழகம் இன்றுள்ளது.

- அபூசித்திக்.


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 200 மட்டுமே




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

# தொடரும் சிறுபான்மைக்கு எதிரான அத்துமீறல்கள்

## காவல்துறையின் அடுத்த விஸ்வரூபம்

கடந்து ஆறு ஆண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தில் சிறுபான்மைக்கு எதிராக குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக காவல் துறையினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பொய் வழக்குகள் மற்றும் அத்துமீறல்களை ஏற்கெனவே நாம் மக்கள் மன்றத்திலும் தமிழக அரசின் பார்வைக்கும் கொண்டு சென்றிருந் தோம்...

தமிழகத்தின் கடைகோடி மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல்துறை ஜோடித்த பொய் வழக்குகளில் சிறுபான்மை யினர்களில் முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கையில் பாழ்போனவர்கள் சுமார் 30–க்கும் மேற்பட்ட வர்கள் ஆவார்கள். முஸ்லிம் இளைஞர்களை கடத்தி சட்ட விரோத காவலில் வைத்து அடித்து துன்புறுத்தி பொய் வழக்கு போட்டு அதில் சுமார் 8 பேர் மீது தேசிய பாதுகாப்பு தடை சட்டமும் 2 பேர் மீது குண்டர் சட்டமும் பாய்ச்சப்பட்டு அவர்களின் சிறைநிலையை வனச்சிறையாக மாற்றினர் குமரி மாவட்ட காவல்துறையினர்.

### தேசிய பாதுகாப்பு சட்டம் உடைந்தது

8 பேரின்மீது போடப்பட்ட தேசிய பாது காப்புச் சட்டம் மற்றும் 2 பேர் மீதான குண்டர் சட்டமும் விசாரணை நீதிபதிகள் முன்பு பொய் என நிரூபனமானது. அவர்கள் அந்த கடும் சட்டத்திலிருந்து வெளிவந்தார்கள். ஆனால் பொய்யான கடும் சட்டங்களை இவர்கள் மீது பாய்ச்சிய காவல்துறையினர்கள் அந்த நீதிபதி களால் இன்னும் தண்டிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மேலும் பல பொய் வழக்குகள்

அந்த கடும் சட்டங்கள் உடைந்து தன் வழக் கின் பிணைக்காக காத்திருந்த அந்த இளைஞர்கள் சிறையில் இருந்த நிலையிலேயே சுமார் நான்கு பேர் மீது 3, 8, 11 வழக்குகள் வரை மீண்டும் பொய் வழக்குகள் போடப்பட்டு அவர்களுக்கு நிரந்தர சிறை வாழ்க்கையை தேடித்தர விரும்புகின்ற னர் குமரி மாவட்ட காவல்துறையினர். அத்துனை அநீதிகளுக்கும் அ.தி.மு.க. அரசு தன் கண்களை மூடிக்கொண்டது என்பது அழியாத வரலாற்று உண்மை.

### இன்னும் நடவடிக்கை இல்லை

தக்கலை சிசிஎஸ். காவல்படை சேர்ந்த விஜயன், மோகன் தக்கலை காவல் நிலைய துணை ஆய்வாளர் சுஜித் ஆனந்த், வடசேரி காவல் துணை நிலைய ஆய்வாளர் மோகன் ஐயர், அஞ்சுகிராம காவல் நிலைய துணை ஆய்வாளர் ஜான்சன் ஆகியோர் ஸ்பெஷல் டீம் என்ற பெயரில் முஸ்லிம் இளைஞர்களை கடத்தி பல அத்துமீறல்களை நடத்தியுள்ளனர். தகுந்த ஆதா ரத்துடன் எத்தனையோ முறை தமிழக அ.தி.மு.க. அரசின் பார்வைக்கு எடுத்துச் சென்றும் இன்னும் நடவடிக்கை எடுத்தார்பாடில்லை. மேலும் காத்திருந்த அவர்களின் அத்துமீறல்கள் இன்னும் தொடரத்தான் செய்கின்றன.

### இருளர் இனத்தவர் மீது தாக்குதல்

ஆகஸ்ட் 2016–ல் (குளச்சல் மண்டைக்காடு திருவிழாவிற்கு வருகைதந்து முகாமிட்டிருந் தார்கள் மதுரையைச் சேர்ந்த இருளர் இனத்த வரை சிசிஎஸ் காவல்படையைச் சேர்ந்த விஜயன் என்பவர் அந்த இருளர் இனத்தைச் சார்ந்த சுமார் 37 பேரை தக்கலை காவல் நிலையத்தில் சட்ட விரோதமாக அடைத்து வைத்து ஜாதியின் பெயரால் அவமானப்படுத்தி பல நாட்கள்

தொடர் தாக்குதல் நடத்தியதை மக்கள் கண் காணிப்பகம் வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது.

மேலும் பல தன்னார்வு அமைப்புகள் மற்றும் மக்கள் கண்காணிப்பகம் இணைந்து 06−07−2016 அன்று குமரி மாவட்ட ஆட்சியரிடம் சிசிஎஸ் காவல்படை விஜயன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி புகார் மனு கொடுக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை ஏதுமில்லை.

### காவல் துறையின் அடுத்த விஸ்வரூபம்

திருவிதாங்கோடு என்னும் பகுதியில் வசித்து வருபவர் மன்சூர். இவருடன் அதே பகுதியைச் சார்ந்த சித்திக் ஆகிய இருவர் மீது போடப்பட்ட பொய் வழக்கு ஒன்றில் தற்போது பிணையில் விடப்பட்டு தக்கலை காவல் நிலையத்தில் நிபந்தனை கையெழுத்தை இட்டு வருகின்றனர். முன்னால் கோட்டாறும் தற்போதைய தக்கலை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சுஜித் ஆனந்த் என்பவரால் மன்சூர் மற்றும் அவரது குடும்பத்தினர் தன் வீட்டில் வைத்து கடுமையாக மிரட்டப்பட்டுள்ளார்.

அதுமட்டுமல்லாது 19−01−2017 அன்று தன் நிபந்தனை கையெழுத்தை இடச் சென்ற மன்சூர் மற்றும் சித்திக் என்ற இருவரையும் அன்று மாலை 3 மணிவரை சட்டவிரோத காவலில் வைத்து அனுப்பியுள்ளார் தக்கலை சார்பு ஆய்வாளர் சுஜித் ஆனந்த். ஏற்கெனவே நீதிமன்ற அவமதிப்பு செய்து நீதிபதி கண்டனத்திற்கு உள்ளானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கார் கண்ணாடி உடைப்பு - வழக்கு ஜோடிப்பு

ஜனவரி 13, 2017 அன்று நாகர்கோவில் பி.ஜே.பி. அலுவலக முற்றுகைப் போராட்டம் ஒன்று எஸ்.டி.பி.ஐ. அமைப்பினரால் நடத்தப்பட்டது. அதில் பி.ஜே.பி.யை சார்ந்தவர்கள் கல் வீசியதில் 2 அப்பாவி முஸ்லிம்கள் மண்டை உடைந்தது. மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். இதனால் சுமார் 8 பி.ஜே.பி.யினர் மீது வழக்கு தொடரப்பட்டது. அன்று இரவே சில மர்ம நபரால் பார்வதிபுரம் பகுதியில் ஓர் கார் கண்ணாடி உடைக்கப்பட்டது. அதற்கும் திருவிதாங்கோடு பகுதியைச் சார்ந்த ஓர் இஸ்லாமிய இளைஞன் மற்றும் கண்டால் தெரியும் 4 பேர் என்ற அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. சட்ட விரோத காவலில் எடுக்கப்பட்ட அந்த நபர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். இன்னும் சிலர் காவல் நிலையம் அழைத்து மிரட்டப்பட்டு வருகின்றனர்.

### முஸ்லிம் இளைஞர்களை பூச்சாண்டிக் காட்டுவது

19−01−2017 அன்று இரவு சுமார் 10.30 மணிக்கு இளங்கடை பரசுராமன் நெடுந் தெருவைச் சார்ந்த ஓர் முஸ்லிம் இளைஞரை சிவில் உடை அணிந்த காவல் ஆய்வாளரும் சீருடை அணிந்து வந்த நான்கு காவலர்களும் தன் குடும்பத்தினரிடம் எதுவும் கூறாமல் நேசமணி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். ஏற்கெனவே காவல் நிலையத்தில் காயமுற்று கிடந்த திருவிதாங்கோடு நஸ்ருதீன் (கார் கண்ணாடி வழக்கில் ஜோடிக்கப்பட்டவர்) என்பவரிடம் அந்த இளங்கடை இளைஞனை அழைத்துச் சென்று இவனை தெரியுமா என்று வினவினர் நஸ்ருதீன் தெரியாது என்று கூறவே



SBCID மோகன்தாஸ் என்பவர் அவரிடம் சென்று தவறுதலாக அழைத்து வந்துவிட்டோம் என்று கூறி புகைப்படம் எடுத்து வேறு காவலரின் இரு சக்கர வாகனத்தில் ஏற்றி சற்று தூரம் ஓர் இருட்டான இடத்தில் இரக்கமின்றி இறக்கி விட்டுச் சென்றுள்ளார். அப்போது இரவு சுமார் 12.50 மணி. இப்போது அவரும் அவரின் குடும்பமும் கடும் பீதியில் உரைந்துள்ளார்கள். இளங்கடை இளைஞனை ஓர் காவலர் அடிக்க முயன்றுள்ளார். அப்போது தன்னை அடை யாளம் தெரியாமல் இருப்பதற்காக தன் சீருடை பாட்ஜைக் கழற்றி வைத்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### துப்பாக்கியைத் தூக்கி காட்டிய கதை

தக்கலை சார்பு ஆய்வாளர் சுஜித் ஆனந்தின் தாக்குதலை கண்டித்து நாகர்கோவிலை சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் நாகர்கோவில் நீதிமன்றத் தில் பிரைவேட் வழக்கு தொடர்ந்தார். அதற்கான அழைப்பானை ஏற்று நீதிமன்றம் வந்த சுஜித் ஆனந்த் வழக்கை நடத்திய வழக்கறிஞரை நோக்கி தன் கை துப்பாகியை நீட்டி அவரின் தலையில் வைத்து நீதிபதி முன்பாகவே சுட்டு தள்ளிவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். பெரும் சிரமத்திற்கு மத்தியில் அருகிலிருந்த மற்ற வழக்கறிஞர்களால் வழக்கு நடத்திய வழக்கறிஞர் பாதுகாக்கப்பட்டார். கை துப்பாக்கி அவரது கையிலிருந்து பிடுங்கப்பட்டு நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

எத்தனையோ அத்துமீறிய காவலர்கள்மேல் புகார்கள் குமரி மாவட்டத்திருந்து அ.தி.மு.க. அரசின் கதவைத் தட்டியும் சிறுபான்மை இளைஞர்களின் வாழ்க்கை பாழ்போவது நின்ற பாடில்லை. தற்போது குமரி மாவட்டத்தை ஆட்கொண்ட தி.மு.க. அமைச்சர்கள் இருப்பினும் காவல் துறையின் அடுத்த விஸ்வரூப தாண்டவம் தொடர்கிறது.

குமரி மாவட்ட சிறுபான்மையினர்கள் மீண்டும் பீதியில் உறைய ஆரம்பித்துள்ளனர். அத்தனை அத்துமீறலை செய்யும் ஸ்பெஷல் டீம் குறித்து தகவல் தெரியும் சட்டம் கீழ் குமரி மாவட்ட கண்காணிப்பாளரிடம் கேட்டமைக்கு அது அவசியம் இல்லை என்ற பதிலே வந்தது. தொடரும் சிறுபான்மைக்கு எதிரான காவல் துறையினரின் அத்துமீறல் குமரி மாவட்ட தி.மு.க. தலையிட்டு தமிழக அரசின் கவனத் திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்குமா என்பதே அப்பகுதி மக்களின் கேள்வியாகவும், கோரிக்கையாகவும் இருக்கிறது.






Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.